ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீவில்லிபுத்தூராழ்வார் அருளிச்செய்த

ஸ்ரீ கிருஷ்ணசுவாமி தூது

மூலமும் உரையும்.

இஃது

கும்பகோணம் புத்தகவியாபாரம்

கோ. ஸ்ரீநிவாசப்பிள்ளை அவர்கள்

விருப்பத்தின்படி,

பு. எ. பார்த்தசாரதிப் பிள்ளையால்

பரிசோதிக்கலுற்று,

சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளை

அவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

ஸ்ரீ

விளம்பரம்.

திவ்வியகவி. பிள்ளைப்பெருமாளையங்கார்

அருளிச்செய்த

அஷ்டப் பிரபந்தங்கள்.

திருவரங்கத்தூசற்றிருநாமம், திருவரங்கக்கலம்பகம்,
திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி,
திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி,
நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, அழகரந்தாதி.

கனவான்களே,

நந்தேசத்தும் புறதேசத்துமுள்ள கல்விச்சாலைகளிலும், கல்விக் கூடங்களிலும் பாடங்கள் வைத்துப் படிப்பித்து வருகின்றனவும், இலக்கண விலக்கியங் கற்றுக்கொள்ளுபவர்கட்குப் பெரும்பாலும் பிரயோசனப்படுகின்றனவும், வாசிப்பவர்கட்குத் தமிழின் அருமையையும், பக்தியின் விசேடத்தையும் நன்கு உணர்த்தக்கூடியனவுமான இந்த நாலிரண்டு பிரபந்தங்களையும் பிழையின்றி அச்சியற்றுவிக்கும்படி எனது நண்பர்களிற் சிலர் தூண்ட, யானும் அவர்கள் கருத்திற் கியைந்து, முன்னர் அச்சியற்றியுள்ள பிரதிகட்கிணங்க திருநாராயணபுரம் ஸ்ரீமான். வே. கோவிந்தராஜ ஐயங்கார் அவர்களைக்கொண்டு பிழைதிருத்துவித்து, வாசிப்பதற்குச் சுலபமாயிருக்கும்படி அவ்வவ் செய்யுட்களின் சந்தங்கட்கேற்ப அடிகடோறுஞ் சீர் தளை பிரித்து, ஒவ்வொரு செய்யுட்களின் முதலெழுத்துக்களெல்லாம் பெரிய வெழுத்தாகவமைத்து, நல்ல உயர்ந்த கிளேஸ்கடிதத்தில் புதியவெழுத்தில் அழகாய் அச்சிட்டுள்ளன.

அருந்தமிழுணர்ந்த அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கடங்கள் புத்திரமித்திர பௌத்திராதியர்கட்கு இவ்வரிய பிரபந்தங்களைக் கற்பித்துத் தமிழ்ப்பாஷை ஞானத்தையூட்டி யுவப்பார்களெனக் கோருகின்றனன்.

விலை அணா 8. வி. பி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வேண்டுநர் கீழ்கண்ட என்னிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

☞ பு. நாராயணசாமிப் பிள்ளை,

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலை,

16, சரவணப்பெருமாள்முதலி வீதி, புரசை, சென்னை.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ கிருஷ்ணசுவாமி தூது

மூலமும் உரையும்.

காப்பு - விநாயகர் துதி.

நீடாழியுலகத்துமறைநா லொடைந்தொன்றுநிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராசன் மாபாரதஞ்சொன்னநாள்
ஏடாகவடமேருவெற்பாக வெங்கூரெழுத்தாணிதன்
கோடாகவெழுதும்பிரானைப் பணிந்தன்புகூர்வாமரோ.

(எ-து.) நெடிய கடல்சூழ்ந்த பூலோகத்திலே வேதம் நாலுடனே ஐந்தாம்வேதமெனப் பிரசித்தமாக நிலைநிற்கக் குறையாத மெய்த்தவத்தையுடைய வேதவியாசமகாமுனி மகாபாரதஞ்சொன்ன நாளில் மகமேருமலையைக் கையேடாகப் பிடித்துத் தனது கொம்பை வெள்ளிய கூரையுடைய எழுத்தாணியாகக்கொண்டு அந்தப் பாரதக் கதையை எழுதிய விநாயகக்கடவுளைப் பணிந்து பத்திசெய்வாம்-எ-று. ()

சரஸ்வதி துதி.

பொருப்பிலேபிறந்துதென்னன் புகழிலேகிடந்துசங்கத்
திருப்பிலேயிருந்துவைகை யாற்றிலேதவழ்ந்தபேதை
நெருப்பிலேநின்றுகற்றோர் நினைவிலேநடந்தோரேன
மருப்பிலேபயின்றபாவை மருங்கிலேவளருகின்றாள்.

(எ-து.) பொதியமாமலையிலே ஜன்மித்து, பாண்டியன் கீர்த்தியென்னும் பசும்பொற்றொட்டிலிலே கிடந்து சங்கப்பலகையிலேயிருந்து வைகையாற்றிலே திருஞானசம்பந்தர் விட்ட ஏட்டினிடமாக எதிரேறித்தவழ்ந்த பேதையாகிய சரஸ்வதி பின்புநெருப்பிலேபோட்ட பச்சோலையாய் வேகாமல் நின்று கற்றவர் நினைவிலேநடந்து ஆதிவராகமுகக்கொம்பிலே மருவிய பூமிதேவி மருங்கிலே கிடக்குங் குணமணைப்பிள்ளையாக வளர்கின்றாள் அக்கலைமகள் என்னுவிலே நிற்கும்படி நமஸ்கரிக்கின்றேன்-எ-று. (உ)

பாடற்றொகை.

தருமமெய்த்தருமனேவத் தாளிணைசிவப்பமாயோன்
அரவுயர்கொடியோன்பக்க லழகுறுநாடுவேண்டித்
தூரகதவிரதமேறித் தூதுபோய்மீண்டபாடல்
இரவியங்கதிர்போல்வீசு மிருபதத்தறுபத்தொன்றே.

(எ-து.) தருமமே உருவாயிருக்கின்ற தருமராசன் தனக்காகத் துரியோதனனருகே தூதுபோகும்படி ஏவினதினாலே ஆதிபராபரவஸ்துவாகிய ஸ்ரீமந்நாராயணமூர்த்தி நாலுவேதங்களினாலுங் காணப்படாத பாதாரவிந்தஞ் சிவக்கக் குதிரைகட்டிய அலங்காரமான இரதத்தில் எழுந்தருளி அஸ்தினாபுரியென்னும் பட்டணத்திற்குப்போய்ச் சர்ப்பக்கொடியோனாகிய துரியோதனனை அழகுபொருந்திய நாடுகேட்டு அவனுடனே யுத்தப் பிரசங்கம்பேசி மீண்டதைக்குறித்தபாடல் சூரியகிரணம்போலப் பிரகாசிக்கின்ற இருநூற்றறுபத்தொன்றாம். ()

ஸ்ரீ கிருஷ்ணசுவாமி தூது.

பேர்படைத்தவிசயனுடன் மும்மைநெடும்பிறவியினும் பிரியானாகிச், சீர்படைத்தகேண்மையினாற் றேரூர்தற்கிசைந்தருளுஞ் செங்கண்மாலைப், பார்படைத்தசுயோதனர்க்குப் படையோமென்பரிலெனப் பணிந்தகோவைக், கார்படைத்தநிறத்தானைக் கைதொழுவார்பிறவாழிக் கரைகண்டாரே.

(எ-து.) பூலோகமெங்கும் சவுரியத்தினாலே பேர்படைத்த அர்ச்சுனனுடனே இரணியவதை நிமித்தியமாக எழுந்தருளினபோது பிரகலாதனனாகியும், இராவணவதை நிமித்தமாக எழுந்தருளினபோது விபீஷணனாகியும், பூமிபாரம் தீர்ப்பது காரணமாக எழுந்தருளினபோது அர்ச்சுனனாகியும் இப்படி மூன்றவதாரத்திலும் பிரியாதவனாகியும் சீர்படைத்த நட்பினாலே அந்த அர்ச்சுனனுக்கு ரதசாரதியாக இசைந்தருளிய செந்தாமரைக் கண்களையுடைய திருமாலை பூமியையாளுகின்ற துரியோதனன்வந்து வேண்டினபோது அந்தப் பாரதயுத்தமுகத்திலே நான் ஆயுதம் கையிலெடுப்பதில்லையென்று உறுதிசொன்ன தேவராசனை மேகவண்ணனான ஸ்ரீகிருஷ்ணசுவாமியைக் கைதொழுதவர்கள் பிறப்பென்னுங் கடலைநீந்தி முத்தியாகிய கரையைக் கண்டவர்கள்-எ-று. (௬)

நூல்.

ஞானமன்போடினிதுரைத்த ஞானமுனியகன்றதற்பின் சாரபோத, தானதண்டமெனுமிருபர் தருமமுறைபிற்புகலுந் தகுதிநோக்கித், தூநறுந்தண்டுளவோனைத் தூதுவிடுவதற்கெண்ணிச் சுனைகடோறும், எனலந்தண்கிரிப்பெருந்தே னிறைக்குமெழிற்குருநாட னியம்பினானே.

(எ-து.) தருமபுத்திரமகாராசன் வனவாசம் பன்னிரண்டு வருஷமும் அஞ்ஞாதவாசம் ஒருவருஷமும் ஆகப் பதின்மூன்று வருஷமுந் தொலைந்து உபலாவியமென்னும் பட்டணமே வந்திருந்து துரியோதனன் பக்கல் உலூகமகாமுனியான தன்னுடைய புரோகிதனையனுப்பித் துரியோதனன் தன்னுடைய தகப்பனான திருதராட்டிரனுடனே உலாவிக்கொண்டு சஞ்சயமகாமுனியான தன்னுடைய புரோகிதனை

யழைத்து நீர்போய் ஞானப்பிரசங்கம்பண்ணி தருமபுத்திராதியரை இன்னம் வனவாசம் போகத்தக்கதாகச் சொல்லிவாருமென்ன அந்தப்படியே புரோகிதன் ஆசீர்வதித்து ஞானப்பிரசங்கம்பண்ணி நீங்களினம் தபசுபண்ணுவதே உறுதியென்று சொல்ல இதை மறுத்துச் சத்துருசங்காரஞ்செய்து பிரதிக்கினைமுடிப்பேனென்று வீமசேனன் சொல்லியனுப்ப அந்தப்படியே சஞ்சயமகாமுனி போனபின்பு சாமபேத தான தண்டமென்னும் இராசநீதி முறைவழுவாமல் சொல்லத்தக்கவரென்றறிந்து பரிமளம்பொருந்திய பரிசுத்தமாகிய துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணதேவரைத் தூதுவிடுவதற்கு எண்ணிச் சுனைகள்தோறுஞ் செந்தினையையுடைய திண்ணியமலைகள் மிகுந்த தேனைநிறைக்கின்ற குருநாட்டுக் கதிபதியான தருமபுத்திரமகாராசன் சொல்லத்தொடங்கினான்-எ-று. (௧)

செஞ்சொன்முனிசஞ்சயனுக் கியாமுரைத்தகருமமுமுன் செ
ன்றகாலை, அஞ்சொன்முனிபுரோகிதனுக் கவனிசைத்தகருமமுநீ யறி
தியன்றே, நஞ்சுதனைமிகவருந்தி நன்மருந்துமந்திரமும் விரைந்துநா
டாத், துஞ்சினர்தங்களைப்போல விருக்குமதோ யார்மனத்துமிருக்கு
ஞ்சோதி.

(எ-து.) செவ்வையான சொற்போல சொன்ன சஞ்சயமகாமுனிக்குத் தாம் சொன்னவசனமும் நாமனுப்ப முன்போகிய உலூகமகாமுனியான புரோகிதனுடனே துரியோதனனப்போது பேசினவசனமும் தேவரீருடைய திருவுளமேயறியுமல்லவோ விஷத்தைக்குடித்து அதுதீர நல்லமருந்தும் மந்திரமும் கடுகவிசாரியாமல் வீணிலேசிவனைவிட்டவர்களைப்போல நாங்கள் போகாதபடி ஒருபுத்தி எங்களுக்குப் போதிக்கவேண்டும் சர்வலோகத்தார் மனத்திலுமிருந்து விளையாடுகின்ற சோதி சொரூபரேயென்று பின்னுஞ் சொல்லுகிறான்-எ-று. ()

அருஞ்சமரம்புரியும்வகை யவருரைத்தாரானாலு மறமொன்றி
ன்றி, பெருஞ்சமரம்விளைக்குமது கடனன்றென் றருள்வெள்ளம் பெரு
கக்கூறும், பொருஞ்சமரநெடுமுரசப் பூங்கொடியோன்றனைநோக்கிப்
புயல்போல்வாண, விருஞ்சமரந்தொலைத்தபிரா னிளைஞரையுமுடனி
ருத்தி யியம்பினானே.

(எ-து.) குருக்ஷேத்திரபூமியிலே அரியயுத்தஞ் செய்யத்தக்கதாகத் துரியோதனாதியர் சம்மதித்ததேயுண்டாகிறது நல்லது நாம் முந்தியுத்தஞ்செய்யச் சம்மதித்துச் சொல்லுகிறது முறைமையல்லவென்று கிருபாவெள்ளம்பெருகும்படி சொல்லிய பொருகின்ற நெடிய முரசக்கொடிபடைத்த தருமபுத்திரமகாராசனைப் பார்த்து மேகம்போன்ற ஆயிரம் புஜகிரிகளைப்படைத்த வாணாசுரனை செயித்த ஸ்ரீகிருஷ்ணசுவாமி வீமசேனன் அருச்சுனன் நகுலன் சகாதேவனென்று சொல்லப்பட்ட இளையவரையும் கூடவைத்துக்கொண்டு இவ்வாறு சொல்லினார்-எ-று. (௨)

செய்வராலினமுகளுந்திருநாடு பெறநினைவோசென்றுமீளப், பைவராயருங்கானிற்பயின்றுதிரி தரநினைவோ பகைத்தபோரில், உய்வராரெனவிரைவி னுருத்தெழுந்துபொரநினைவோ வுண்மையாக, ஐவராமவரிபர்க்குநினைவேதென் றருள்புரிந்தா னமரர்கோமான்.

(எ-து.) வயலெங்கும் வராலினங்கள் குதித்துவிளையாடுகின்ற சிறந்த குருநாடு வாங்கிக்கொண்டு அரசாட்சிசெய்ய நினைவோ இன்னம் பழையபடியே துன்பமுடையவராய் வனத்திலிருந்து திரியநினைவோ அல்லது பகைத்துசெய்கின்ற யுத்தத்தில் பிழைப்பார் யாரென்றுசொல்லத் துரியோதனுதியரைப் பிரதிக்கினைப்படியே கோபித்து பொருதுசெயிக்க நினைவோ ஐவராகிய உங்களொவ்வொருவருக்கும் இருக்கின்ற உண்மையான எண்ணமென்னவென்று திருவுளம்பற்றினுர் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (ச)

வயிரமெனுங்கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கிலுயர்வரைக்காடென்னச், செயிரபரில்வெகுளிபொரச் சோவிருதிறத்தேமுஞ் சென்றுமாள்வேம், கயிரவமுந்தாமரையுங் கமழ்பழனக்குருநாட்டிற் கலந்துவாழ, உயிரனையாய்சந்துபட வுரைத்தருளென்றுனறத்தி னுருவம்போல்வான்.

(எ-து.) வைராக்கியமென்னுங் கடூரமான நெருப்பை அதிகமாகமூட்டி வளர்த்தால்தானே இழைந்தெரிந்து மாய்ந்துபோகின்ற மூங்கிற்காடென்று சொல்லும்படி குற்றம்பொருந்திய யுத்தத்தில் கோபமூண்டு இரண்டுதிறத்தோரும் ஒரேதரமாய் மாண்டுபோம் அப்படிவராமல் செவ்வல்லியுந் தாமரையும் பரிமளிக்கின்ற வயல்கள் சூழ்ந்த குருநாட்டிலே அம்மலர்களைப்போல நாங்கள் ஒருமித்துக்கூடி வாழும்படி எங்களுயிரையொத்த கிருஷ்ணரே நீர் தூதுபொருந்த அவர்களையுமெங்களையுங் கூட்டியருளவேண்டுமென்றுர் தருமத்தின் உருவம்போல விளங்கிய தருமபுத்திரர்-எ-று. (ரு)

அரவுயிர்த்தோனுடன்மறுசூ தாடிநீர்வெந்தவந்நா ளவன்றான்சொன்ன, விரதமொழிதவராமல் வெங்கானம்போய்மீண்டீர் வெய்பேனுங்கள், குருகுலத்திற்பாதியினிக் கொடாதிருந்தாலங்கவனைக்கொன்றுபோரி, லிருநிலத்தையாளவினித் துணிவதேகடனென்றுனெம்பிரானே.

(எ-து.) சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனனுடனே நீங்கள் மறுசூதாடி வென்றபோதவன் சொல்லியசொல் தவறுமல் பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒருவருஷம் அக்கியாதவாசமும் போய்வந்தீர்கள் வெய்யவனுகிய அந்தத் துரியோதனன் உங்களுடைய பூமியிலே பாதியைக் கொடாமற்போவானேயாகில் அவனைக்கொன்று போர்முகத்திலே பெரிய பூமியை ஆளுகைக்குத்துணிவதே முறைமையென்றுர் ஸ்ரீகிருஷ்ணதேவர்-எ-று. (சு)

குரவரையுங்கிளைஞரையுங் குலத்துரிபதுணைவரையுங் கொன்று போர்வென், றரவநெடுங்கடலாடை யவனியெலாந்தனியாளு மரசுதன்னில், கரவுறையுமனத்தாதை மூலிக்குரைத்தமொழிப்படியே கானந்தோறும், இரவுபகல்பலமூலசாகநுகர்ந் துயிர்வாழ்த லினிதாமன்றே.

(எ-து.) ஆசாரியரையுஞ்சுற்றத்தாரையும் குருகுலத்துக்குரிய அண்ணன் தம்பிமாரையும், இன்னம் பாட்டன் மாமன் மைத்துனன்முதலானபேர்களையுங் கொன்று போரில்வென்று சப்திக்கின்ற நெடியகடலாடையையுடைய பூமிமுழுவதும் தனியேயாளுகிற அரசரைப் பார்க்கிலுங் கபடந்தங்கிய மனமுடைய பெரியதகப்பனார் புரோகிதருடனே சொல்லியனுப்பிய சொற்படியே வனந்தோறும்போய் இரவும்பகலும் கனிகாய்கிழங்கு சருகுகளைப் புசித்துப் பிழைத்துக் காலம்போக்குகிறது மிகவும் நல்லதென்றார் தருமபுத்திரர்-எ-று. (எ)

கோதிலாவினிதமொழி கூறுதலுமாதியான் கூறலுற்றான், மோதமருக்கிளைத்துநீர் மொய்த்தபெருங்கானகத்தே முடுகிச்சென்றால், பூதலத்தோரேசாரோ புகன்றபெருவஞ்சினமும் பொய்த்திடாதோ, நீதியோவெனவுரைத்த னுங்கதற்குநிகழ்தரும னிகழ்த்தலுற்றான்.

(எ-து.) பழுதில்லாத தருமபுத்திரமகாராசர் இந்தவசனம் சொன்னமாத்திரத்திலே ஆதிமூலமான ஸ்ரீகிருஷ்ணதேவர் சொல்லுவார் தருமபுத்திரரே நீங்கள் மோதுகின்ற யுத்தத்துக்குத் தோற்று நெருங்கிய பெரியவனத்தினிடத்திலே வாசம்பண்ண விரைந்துபோனால் பூலோகத்திலுண்டானபேர் தாயாதியுடனே யுத்தம்பண்ணிச் செயிக்கமாட்டாமற் போனார்களென்று ஏசமாட்டார்களோ தம்பிமார் சொன்ன சபதம் பொய்யாய்ப் போகாதோ இது நீதியாகுமோவென்று சொல்ல அதுகேட்டுப் பின்னுஞ்சொல்லுவார் தருமபுத்திரர்-எ-று ()

நீதூதுநடந்தருளியெமதுநினைப் பவர்க்குரைத்தா லினைவின்வண்ணம், தாதூளியளிமுரலுந் தண்பதியுந்தாயமுந்தான் றாரானாகில், மீதூதுவளைக்குலமும் வலம்புரியுமுழங்க வெய்யகாலன், மாதூதர் மனங்களிக்கப் பொருதெனினும்பெறுவலிது வசையுமன்றே.

(எ-து.) ஸ்ரீகிருஷ்ணசுவாமி தேவரீர் எங்கள்நிமித்தம் துரியோதனனிடத்துத் தூதுசென்று எங்களுடைய நினைப்பின்பிரகாரம் அவனுடனே பேசினால் அந்தப்படியே மகரந்தப்பொடியையூதி வண்டுகள் முரலுகின்ற குளிர்ந்த பூஞ்சோலைகள் சூழ்ந்தநகரமும் பங்குங்கொடாமற்போனாகில் அதற்குமேல் ஊதப்பட்ட வெற்றிசங்குகளும்வல

ம்புரிச் சங்குகளும் வீரகாளம் வீரகொம்பு முதலிய நானாவித வாத்தி யங்களும் முழங்கக் கொடிய யமதூதர் மனங்களிப்ப போர்க்களத் திலே யுத்தஞ்செய்தானாலுந் தாயாதி பட்சத்திலுள்ள எங்கள் பூமி யைப்பெறுவோம் அதுஅபகீர்த்தியன்றென்று பின்னுஞ்சொல்லுவார் தருமபுத்திரர்-எ-று. (௯)

மூந்தூர்வெம்பணிக்கொடியேன் மூதூரினடந்துழவர் முன்றி லுேறும், நந்தூரும்புனநாட்டின் றிறம்வேண்டுநாடொன்று நல்கானு கில், ஐந்தூர்வேண்டவையிலெனி லைந்தில்வேண்டவைமறுத்தா லடு போர்வேண்டும், சிந்தூரத்திலகனுதற் சிந்தூரத்தின் மருப்பொசித்த செங்கண்மாலே.

(எ-து.) முந்தியூருகின்ற சர்ப்பக்கொடியையுடைய துரியோதன ன்பதியான அஸ்தினாபுரத்திற்கு தேவரீர் எழுந்தருளிப் பள்ளர் முற் றங்கள்தோறுஞ் சங்கினங்களூறுகின்ற நீர்வளம்பொருந்திய நாட் டைக்கேளும், அது கொடானாகில் எங்களைந்துபேருக்கும் இந்திரப்பி ரஸ்தம், யமப்பிரஸ்தம், அவந்தி, வாரணாபுரி, அஸ்தினாபுரி என்கிற ஐந்தூருங்கேளும், அவை இல்லையென்று மறுத்தானாகில் ஐந்துமனை கேளும், அவையும் இல்லையென்றால் யுத்தத்திற்குச் சம்மதித்து வா ரும் மாயமாய்க் கஞ்சன் வரவிட்ட சிந்தூரத்திலக நெற்றியையுடைய யானையின் கொம்புகளையொடித்த சிவந்த கண்களையுடைய மாயனே யென்றார் தருமபுத்திரர்-எ-று. (௧0)

மூத்தோன்மற்றிவையுரைப்ப விளைமையான்வெஞ்சினமனத்தின் மூளமூள, நாத்தோமிலுறைபதறக் கதுமெனவுற்றெழுந்திறைஞ்சு ஞாலமெல்லாம், பூத்தோனேபூந்தவிசிற் பூவைபொருமணிமார்பா புன்மையாவும், தீர்த்தோனேயூனமிலான் மானமிலாதுரைப்பதற்கெ ன் செய்வதென்றான்.

(எ-து.) மூத்தவராகிய தருமபுத்திரமகாராசர் இந்த வசனஞ்சொ ல்ல வீமசேனன் கேட்டு அவன்மனத்திலே கோபம் அதிகரிக்க நாவி னிடத்திலே குற்றமில்லாத சொற்கள் பகறச் சீக்கிரத் தில் வந்து எழுந்து ஸ்ரீகிருஷ்ணதேவரைத் துதித்துப் பூலோக

முழுதம்உண்டாக்கினவரோபதுமாசனத்திலிருக்கின்றமகாலட்சுமிபொருந்திய கௌத்துவாபரணத்தரித்தமார்பையுடையவரேநம்பினபேர்கு றைவுகளைத் தீர்த்தவரே குற்றமற்ற அண்ணனுனவர் மானமில்லாமற் சொல்வதற்குநான்செய்வதென்னென்றுபின்னுஞ் சொல்லுவான்அந்த வீமசேனன்-எ-று. ௧௧

விரிகுழற்பைந்தொடிநாணி வேந்தவையின் முறையிடுநாள்வெகுளேலென்று. மரபினுக்கு நமக்குமுலகுள்ளளவுந்தீராதவசையே கண்டாய், எரிதழற்கானகமகன்று மின்னமும்வெம்பகைமுடிக்க வினையாய்நின்றாய் அரவுயிர்த்தோன கொடுமையினு முரசுயர்த்தோ யுன்றருளுக் கஞ்சினேனே,

எ-து. விரிந்த கூந்தலையும் பசியவளையலையுமுடைய துரௌபதி நாணமடைந்து ௩ லட்சத்து ௬௬ பட்டவர்த்தனரும், ௬ லட்சத்து ௩ லட்சத்து ௬௬ பட்டவர்த்தனரும், ௬ லட்சத்து நாணமடைந்து ௩ லட்சத்து ௬௬ பட்டவர்த்தனரும் பதினெண்பூமிமன்னர் மண்டலிகரும் சகல ௬௬-மகுடவர்த்தனரும் பதினெண்பூமிமன்னர் மண்டலிகரும் சகல தேசத்திராசவர்க்கமும்பீஷ்மாச்சாரி துரோணாச்சாரி கிருபாச்சாரி அசுவத்தாமர் கர்னன் சகுனி சல்லியன் ஆதிரதர் மகாரதர் சமரதர் முதலிய சபையோரும் நிறைந்த இராசசபையிலே மானபங்கம்பண்ணுவித்த நாளில் தஞ்சமில்லாதபேர்போல முறையிட்டபோது நீகோபியாதேயென்றுசொல்லி குருகுலத்துக்கும் நமக்கும் பூலோகமுள்ளளவுந் தீராதபழிப்புவசனமுண்டாக்கினீர் அதுவுமல்லாமல் கள்ளக்கபிறுகொண்டுசூதாடி தீப்படுகின்ற காடேபோகச்சொல்லிவிட அதை நீக்கியும் இன்னமும்கொடிய பகையைமுடிக்க நினைக்கினதீர் ஆதலாலதுரியோதனனுடைய கொடுமையைப்பார்க்கிலும் தருமபுத்திரரே உம்முடைய கிருபைக்குமிகவும் பயந்தேனென்று பின்னுஞ்சொல்லுவான் வீமசேனன்-எ-று ௧௨

காணுளவுநினைவிடுத்த கண்ணிலாவருளிலிதன்காதன்மைந்தன் தானுளுந்தாணியெலாமொருகுடைக்கீழ் நீயாளத்தருவனின்றே மேனேனும்முரிமையறக்கவர்ந்த பெருந்துணைவனுனைவெறுத்தவனைவானவர்கோன் றவப்பதமற்றவன் றனக்கேவழங்குவேனே,

எ-து. எம்மைவனவாசம் போகச்சொன்னகண்ணில்லாததிருதராட்டிரனுடைய ஆசையிருந்த குமாரனுன துரியோதனன் தானாளுகின்ற பூலோகமெல்லாம ஒருகுடைக்கீழ் இன்றைக்கே நீராளத் தருவேன் அல்லாமல் முன்னாளில் நம்முடைய ஆட்சியானநாட்டைக்கைக்கொண்ட அந்தத்துரியோதனனைநேவரீரை வெறுத்துவிட்டபடி அவனுக்குவீரசொர்க்கத்தையாளும்படி இந்திரபதத்தைத்தருவேனென்று பின்னுஞ்சொல்லுவான் வீமசேனன் எ-று. ௧௩

போர்முடிக்கானமாபொருது புலம்புறுசொற்பாஞ்சாலி பூந்தண்
கூந்தற், கார்முடிக்கானிளையோர்முன் கழறியவெஞ்சின முடிக்கான்
கடவுட்கங்கை, நீமுடிக்கானிரதொழிக்கவியறியப்பூதலத்தி னிலையின்
றேருக்கும், பேர்முடிக்கானிப்படியே யார்முடிப்பாரிவனுடனே பிறந்
தேனென்றான்,

எ-து. ஸ்ரீகிருஷ்ணதேவரே எங்களண்ணாவியார் துரியோதனனு
டனே யுத்தஞ்செய்துமுடிக்கார் மேகம்போன்ற கூந்தலையும் புலம்பு
கின்றசொல்லையுமுடையதுரௌபதி முடிக்கச்செய்கார் தம்பிமார்சபை
யிலே பேசியசபதங்களையுமுடிப்பிக்கார் தெய்வத்தன்மைபொருந்தியக
ங்காசலமுடித்த உருத்திரன்தவர்க்கையிலே பிரயகபாலங்கொண்டு இரப்
பதைத் தவிர்த்தருளிய உம்முடைய சித்தமறிய நீலோகத்திலே விலேவி
னதுயர்ந்த கீர்த்திமானென்னும்பேர்பிரசித்தமாகமுடித்தார் இப்படியா
வர்முடிக்கப்போகிறார்கள் இருவருடனேபிறந்த நான் கீர்த்திபெற்றது
போதுமென்றுபின்னுஞ்சொல்லுவான்வீமசேனன் எ-று ௧௬

துணிந்துவருஞ் சமரிலெதிர்ந்தரவுயர்த்தோனுடனரசருபலமெல்
லார், துணிக்கிரண்டுபடப்பொருது கொல்லையுலகரசாளத் துணிவதி
ல்லால், தணிக்காமுங்கிளையுறவுங் கொண்டாடித்தானின்னந்தணித்தா
தேவிப், டணிந்திரந்துபுவிபெற்றுண்டிருப்பதற்கே துணிகின்றனபட்
டபாடே,

எ-து, போர்க்கோலங்கொண்டுவருகிற பெரியயுத்தத்திலேயெதிர்த்
து துரியோதனனுடனே யெதிர்த்த அரசர்களுடைய சரீரங்களெல்லா
மிரண்டுதுண்டாகும்படி போர்செய்துபழைய பூலோகமுழுவதும் அர
சாட்சிசெய்யத்துணிவதல்லால் பொறுமைகொண்டுதருமத்தையுங்கிளை
யுறவும்பாராட்டி இன்னம் ஒப்பற்றதூதுவிட்ட அவனைவணங்கிப்பூமியை
யாசித்துப்பெற்றுக்கொண்டு சவுக்கியமாகப்புசித்திருக்கவேயெண்
ணுகின்றான தருமபுத்திரமகாராசர் குருகுலம் பட்டபாட்டை என்ன
சொல்வேனென்றான் வீமசேனன்-எ-று, ௧௭

டரிவுடனமற்றிவைகூறும் பவனகுமாரனை மலர்க்கைப் பணிந்து
நோக்கி. குருகுலத்தோர்போரேற குற்றமவர்க்குங்காற்சுற்றமுண்
டோ, இருகுலத்தோர்சகோதரரென்ற பெரிவஞ்சினமும் வைத்திடா
தோ, இருவருக்குமுவகையென்றோவிருநிலக்காரணமாகவெதிர்ப்பதெ
ன்றான்,

எ-து, இப்படிப்பரிவாகச்சொல்லிய வாயுபுத்திரனாகியவீமசேன
னை மலர்போன்ற கையாலமாத்திப்பார்த்துக்குருவம்சசிகாமணியே குற்
றம்பார்க்குமிடத்திற சுற்றமுண்டோ ஒருகுலத்திலே பிறந்தவண்ணன
தம்பியாருடனேகூடிவருமவாழ்வினைப்போலவேறொருவுறுதியுண்

டோபெரியஇப்பூமியைப்பெறுவது காரணமாக எதிர்ப்பதுநம்மிருவ
ருக்கும் குற்றமல்லவோவென்றான் தருமபுத்திர மகாராசா-எ-று, கரு

உரிமையுடதம்பியர்களுணர்வறியாமையினவைபாகனுரைத்தமா
ற்றம், பரிபவமோகேட்டோர்க்குப் பரிபவமெனபது பிறராற்பட்டாலன்
றோ, கருதிலதுமற்றெவர்க்கு மொவ்வாதோகக்கணவளரில்கைபடாமுத,
பொருதெழிலுங் கடைநிலத்திற்கிடந்தேனே யென்மொழிந்தான் புக
மேழூண்பான்,

எ-து, உரிமையுள்ள தம்பிமார்களறியாமையினாலே சபையிலே
சொன்னவார்த்தைகள் நமக்கு இழிவையுண்டாக்குமோ இழிவென்பது
அன்னியரால் சொல்லப்படாதல்லவோ அது நினைக்குமிடத்தில் ஒருவ
ருக்கும்பொருந்தாதோ கணமலரில்கைபட்டால் அந்தக்கையைத்துணி
க்கலமோ யுக்தம்பினாலிருக்கின்றதென்றார் கீர்த்தியையேதரிக்கின்
கள
றதாமபுத்திரமகாராசன்,

சூடுகின்ற துழாய்முடியோன் சுரருடனே முனிவர்களுஞ் சுருதி
நான்குந், தேடுகின்றபதஞ்சிவப்பத்திருநாடுபெறத்தூதுசெல்லவேண்
டாம், வாடுகின்றமடப்பாவை தன்வாழுமென்வாழும் வழுவாவண்ண
ம், கோடுகிசறமொழிபவன்பா லென்னத்தூது விடுகவினிக்கொற்றவே
ந்தே,

எ-து, துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் தேவர்களும் மு
னிவர்களும் நாலுவேதமும் இன்னும் தேடுகின்ற பாதஞ்சிவப்பநடந்து
நாம்நம்முடையதிருநாடுபெறும்பொருட்டுத்தூதுசெல்லவேண்டும் வா
டுகின்றதுரோபதியினுடைய பிரதிக்கினையும் தப்பாதவிதந்துரியோத
னனிடத்தில்எனைத்தூதாகஅனுப்புந் தருமபுத்திரரேயென்றான் வீ
சஅ
மசேனன் எ-று.

மலைகண்டதெனவெனைக்கும்மறந்தண்டினவலிகண்டு மகவான்மை
ந்தன், சிலைகண்டுமிருவர்பெருந்திறல்கண்டுமெமக்காகத் திருமாலின்ற
நிலைகண்டுமிவள்விரித்த குழல்கண்டுமிவைப் பளருமேனரார் தம்மைக்,
கொலைகண்டு மகிழாமலவனருடைக் கீழுயிர்வாழக்குறிக்கின்றீரோ,

எ-து, மலையைக்கண்டதென்னஎன்கையிலிருக்கின்றகண்டாயுதத்தி
னுடையபிரபலங்கண்டுமருச்சுனனுடைய காண்டீபத்தின்வலிமைகண்
டும்நகுலசகாதேவருடைய வல்லமைகண்டும்நமக்குசகாயமாகக்கிருஷ்ண
பகவானிருக்கும் நிலையைக்கண்டும் இந்தத்துரோபதிவிரித்தகூந்தலைக்கண்
டும் ஒருநிமிஷமாத்திரத்தில் துரியோதனனுடையசைச்சரவ சங்காரம் பண்
ணிமகிழ்ச்சியடையாமல்பகையாளி குடைக்கீழேவாழும்படி குறித்திரு
க்கின்றீர் தருமபுத்திரரேயென்றான் வீமசேனன் எ-று, உசூ

வெம்புயவீமனும்வெகுண்டு மீண்டுமிவையெடுத் துரைப்பமேக மேனிப், பைம்பொனெடுஞ் சக்கிரிப் பரந்தாமன் கருணையுடன் பரிந்துநோக்கி, யம்புவியின் முன்பிறந்தோ ரரசுநெறிமுறையுரைத்தாலது கேளாமற்; றம்பியருமறப்பரோ தலைவவினிக்கடுங்கோபந் தணிக வென்றான்,

எ-து, வலியபுயமுடைய வீமசேனனுங்கோபித்துமறுபடியு மிந்த வசனங்கள்சொல்ல மேகம்போன்றதிருமேனியும் பசும்பொன் போன்ற நெடியவலுப்பற்ற சக்கராயுதமுமுடைய கிருஷ்ணபகவான்கிருபையுடன் பரிவுகொண்டுபார்த்துப் பூமியிலேமுனபிறந்ததமையன்மார் இராசநீதி முறைமைசொன்னாலதைக்கேளாமல்தம்பியரான பேர்மறப்பார்களோ தலைமைபெற்றவீமசேனனே இனிக்கடியகோபத்தை க்ஷமிக்கக்கடவா யென்று திருவுள்ளம்பற்றினார் எ-று. ௨௰

மைக்களாமுகிலூர்ந்தி வானவர்கோன் றிருமகலை வணங்கிநின்று, முக்காலங்களுமுணருமுதந் தனுக்கு மொழிந்தான் மன்னே யக்காலம், பொறுத்தவெல்லா மறையாமலின்னமிருந்தறமேசொன்னால், எக்காலம் பகைமுடித்து திரௌபதியுங்குழன் முடிக்கவிருக்கின்றாளே,

எ-து, மைபோலுங் கரியமேகவாகனனான தேவேந்திரனுடைய குமாரனான அர்ச்சுனன்வணக்கஞ்செய்துநின்று இறந்தகாலம்நிகழ்காலம் எதிர்காலமெனனும்மூன்றுகாலங்களையுமறியுங் கிருஷ்ணபகவானுக்குந் தருமபுத்திரனுக்குஞ்சொல்லினான் அதேதெனில் அந்தகாலத்தில் துரியோதனன்பண்ணினகுற்றங்களைபொறுத்த பெருமைகளெல்லாம் போதாமல்இன்னமிருந்து தருமத்தையேசொன்னாலினிஎந்தகாலத்தில் பகையைமுடித்துத்திரௌபதிகூந்தலை முடிக்கவிருக்கிறாளென்று பின்னுஞ் சொல்லுவான்-எ-று. ௨௧

தேவராயினும்பழுதவித்திபராயினு மற்றுஞ்செப்புகின்றோர்
யாவராயினுமெதிர்த்தோ ருயிருணவென்றிருப்பதுவாமெனைகைவாளி
மூவராயவர்களுக்குமுதல்வனாகியமூர்த்திமுகிறோய்பூக
மீவராலுகளுவயற்குருநாடேனிவனிடால்வேண்டுமாறே.

எ-து, தேவர்களானாலும் பழையசுரர்களானாலும் பின்னுஞ்சொல்லுகின்ற வலிமைபெற்றபேர் எவர்களானாலும் எதிர்த்தபோகளுடைய உயிரைத்தனக்குப்புசிப்பென்று நினைத்திருப்பது என்கைப்பாணமானது திரிமூர்த்திகளுக்கும்முதல்வராகியகிருஷ்ணமூர்த்தியேமேகந்தோய்கின்றகமுகினமேல்வரா லினங்கள்சூழ்ந்துபாய்கின்றகழனிகள் சூழ்ந்த குருநாட்டைஎன்னநிமித்தம்இத்தருமபுத்திரா துரியோதனனிடத்தில் வேண்டுகின்றதென்றுபின்னுஞ்சொல்லுவானான அர்ச்சுனன் எ-று. ௨௨

திண்டாதகற்புடைய செழுந்திருவைத்துகிலுரியச் செயலொன்றி
ன்றி, நீணடோனேகரியோனே நிழலாவெனதாற்றினளாய்நின்றசோ
ர,மாண்டவர்போ லதுக்கண்டுமன்னவையில் யாதிருந்தம சுதிர,வே
ண்டாவோவேண்டுவதுமேம்படுநல்லறமேயோவேந்தாவேந்தே.

எ-து. அக்கினியைப்போல்தீண்டப்படாதபதிவிரதமுடைய து
ரோபதையைச் சபையிலேதுரியோதனன துர்சாதனைவிட்டுத் து
கிலுரிந்தபோது அவள்யாதொரு செயலு மில்லாதவளாய் நெடியவ
னே நீலவண்ணனேநிர்மலசொரூபனேயென்றுமுறையிட்டவளாகி நி
ன்று சோர்வடை கிரச்சிவர்போலே அதைக்கண்டும் இராஜசபையி
லே யாங்களனைவரு மிருந்த குற்றந்தீரவேண்டாமோ அவனிடத்தில்
பூமியையாசிப்பது நல்லதருமந்தானோ மன்னர்க்குமன்னுகிய தரும
புத்திரரேயென்றுபின்னுஞ்சொலலுவான் அர்ச்சுனன்-எ-று ௨௩

பொன்னுலுந்திகிரியினனைபோனுலும்புகழ்வேந்தன்புகனறவெல
லாஞ், சொன்னுலுமவன்கேளான் விதிவலிபற் கெடுமதிகடோன்றுத
ன்றே, எங்காளுமுவர்நிலத்தினெல் விரைவித்திடினும்விளை வெய்தி
டாது, மன்னுகந்தனக்கமூர்தங் கொடுத்தாலும்விடமொழியபயன்கொ
டாதே.

எ-து. பொற்பிரகாசம்பொருந்திய சக்கரத்தையுடைய கிருஷ்ண
தேவர் தூதாகப்போனுலும் புகழையுடைய தருமபுத்திரர் சொன்ன
வார்த்தைகளெல்லாஞ் சொன்னுலும் அந்த துரியோதனன் கேளான்
விதியின் வலுமையால் கெடுமதிகண்ணுக்குத்தோற்றுது எந்நாளுங் க
ளர்நிலத்திலே நல்லவிதைகளை விதைத்தாலும் விளையமாட்டாது, நச்சு
ப்பலலையுடைய பாம்புக்குபால்கொடுத்துவளர்த்தாலும் விஷத்தையல் ௨௪
லாமல்வேறொருபயனைக்கொடாது எ-று.

பார்த்தனிவைபுகன்றிரைவன் பணித்தருளவிருந்ததற்பின பாவி
ஞெடுந், தீர்த்தனிருபதமிறைஞ்சித தருமனையுங்கைதொழுது சினங்
கொள்வேலான்,நீததநெடுங் கடலெழுபாடலைவர்பெறுவரெனும்நிக
ழ்ச்சிபொய்யோ, கோத்தருமன் னனியாண்மைகூறுதேர கூறுகநீகொ
ற்றவேந்தே.

எ-து அருச்சுனன் இந்த வசனஞ்சொல்லி கிருஷ்ணபகவான் கை
யமைக்க விருந்தபினபு நகுலன் அனபுடனே கிருஷ்ணபகவானுடைய
இரண்டுபாதங்களையும் வணங்கித் தருமபுத்திரரையும் நீங்கி சமய
மான சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப்பெருமை பொருந்திய பஞ்சபாண்
டவர் பெருவார்களென்று சொல்வதுபொய்யோ தருமபுத்திரமகாராஜ
ருடைய ஒட்டற்றசௌரியஞ் செல்லதோ நீசொல்வாய் வெற்றியையு

டைய வரசனேயென்று பின்னுஞ்சொல்லுவான், எ-று உரு

கேவலந்தீர்வரிய பகைகெடக்கழுகில் கிளர்மழைக்குக் கிரியொன
றேந்து, கோவலன்போயுரைத்தாலுங் குருநாடரசுமவன் கொடுக்க
மாட்டான், நாவலம்பூதலத்தரசர் நாடிழந்தோமெனநம்மை நகையாவ
ண்ணம், காவலன்றன்படைவலியு மெனதுடம் புயவலியுங் காணலா
மே.

எ-து கேவலமாகத் தீர்த்தற்கு அரியபகையிருக்கமேகஞ்சொரி
கின்ற அதிகமழைக்கும் பசுத்திரளேகாக்கும்பொருட்டு கோவர்த்தன
பர்வதத்தையேந்திய கிருஷ்ணபகவான் தூதுபோய்சொன்னாலுங் கு
ருநாட்டையும் அரசையும் அத்துரியோதனன் கொடுக்கமாட்டான் ஆ
கையினாலே சம்புத்தீவாகிய இந்த பூமியிலேயிருக்கின்ற அரசர்கள் நா
ட்டையிழந்தோமென்று நம்மை நகையாதபடி துரியோதனனுடைய சே
னைவலியையும் என்னுடைய விசாலமாகிய புஜவலிமையும் பார்க்கலா உசு
மென்று பின்னுஞ்சொல்லுவான் நகுலன, எ-று

அன்னநடையரம்பைதனை யவுணர் கவர்ந்திடவிமையோராசுக்காக
முன்னமவருடன்பொருது சிறைமீட்டானங்குலத்துமுதல்வனன்றோ,
மன்னவையில்யாங்காண மடவாலைத்துகிலுரித்த வலியோன்றன்பால்,
இன்னமிரந்தவன்குடைக்கீழிருக்கினம்மையுலகென்சொலாதோ.

எ-து. அன்னம்போல நடையையுடைய தேவரம்பையை அசுரர்
கள் பிடித்துகொண்டுபோக அப்போது அவள் பயந்து கூப்பிடுவதுதெ
ரிந்து இந்திரன்பொருட்டு முற்காலத்திலே அந்த அசுரருடனே யுத்த
ஞ்செய்து சிறைமீட்டவன் நம்முடைய குலத்து தலைவனாகிய புரூரவச்
சக்கரவர்த்தியல்லவோ இராசசபையிலே நாம் காணும்படி துரியோத
னனிடத்தில் இன்னம்யாசித்து அவன் குடைகீழிலிருந்தால் நம்மை
உலகமென்னசொல்லாதென்று பின்னுஞ்சொல்லுவான்நகுலன், எ-று.

கானெறிபோய்ச் சுரந்துறைந்துசிலநாட் கழிந்ததன்பின் கானநீ
ங்கி, ஈனமிலாவகைவந்தார் நந்துணைவரெனச்சிறிது மிரங்கினால், மா
ன்கரமும்வளநாடுமுரிமையுந்தனதென்மொழிபடியேயழுங்காணாகில், தான
றியாதவன்பிறர்போய்க் கற்பித்த லறிவானோ தரணிவேந்தே.

எ-து. வனவாசம் பனிரெண்டு வருஷமும் அஞ்ஞாதவாச
மொருவருஷமும் பிருந்து கழிந்தபிற்பாடு காட்டைவிட்டு ஈன
மில்லாதபடி வந்தார்கள் நம்முடைய அண்ணன்தம்பி மார்களென்
று கொஞ்சமிரக்கஞ்செய்வானாகில் தாயாதிபட்சமுண்டானமகத்தாகிய
நகரமும் வளத்தையுடைய நாடும் மற்றதுக்கும் தன்சொல்லின்படியே

கொடாமற்போனு னாகில்தரனேயறியாதவன்ஒருவர்போய்ச்சொன்னால
திவானே பூமிதரசனுகிப தருமரேயென்ருன் நகுலன் எ-று அஉ

நகுலனிலைவெறித்துரைப்ப நஞ்செனக்கையமைத்தருளிநகுலன்
சொல்லு,விகல்விஜைசயன்றனமொழியும்திரல்வீமனியம்பியதும்யாவிங்
கேட்டோம்.டகலறியவுணர்வுடையோய் புகழுடையோய் திறலுடை
யோய் புகனியென்ன. முகில்னயதிருமேனிமுகந்தனக்கு மன்முருக
மொழிகின்ருனே.

எ-து நகுலனிந்தவசலஞ்சொல்ல நல்லதென்றுகையமைத்தரு
ளிநகுலன்சொன்னதும வலிமையுடைய அர்ச்சுனன்சொன்னதும்,
சௌரியத்தையுடைய வீமனசொன்னதும். எல்லாங்கேள்விபட்டோ
ம்சொல்லுதற்கரிய அறிவையுடையவனே கீர்த்தியுடையவனேஉன்கரு
த்தைநீசொலலென்றுகேட்க கரியமேகத்தையொத்த திருமேனி
யையுடைய கிருஷ்ணபகவானைபார்த்து மனமுருகும்படி சொல்லுவா உசு
ன சகாதேவன்என்றவாறு.

சிந்திக்கபடிநீயுஞ் சென்ருலென்னெழிந்தாலென் செரிந்தநூறு
மைந்தர்கருமுகலவனிலம் வழங்காமலிருந்தாலென வழங்கினுலென்
கொந்தற்ற குழலிவளுமுடித்தலென் விரிந்தாலென் குறித்தசெய்
கை, யந்தத்தின்முடியுமவகை படியேற்குத்தெரியுமோ வாதிமூர்த்தி;

எ-து, ஆதிநாராயணனுகிய கிஷணபகவானே நீநினைத்தபடியே
தூதுபோனுலென்ன, அதைவிட்டாலென்ன,துரியோதனன பூமிகொ
டுத்தாலென்ன கொடுக்காலென்ன, பூங்கொத்தையுடைய கூளக
பாரத்தைஇத்துரோபதை முடித்தாலென்ன விரித்தாலென்ன நீர்நினை
த்தகாரியம்முடிவிலே முடியுமவிதம அடியேனுக்குத்தெரியுமோவென ௩௦
ருன் சகாதேவன எ-று.

முருகவிழ்க்குமபசுந்துளப முடியோனேயன்றவகை முலை பாலு
ண்டு, மருதிடைச்சென்றயர்சகடம் விழவுதைத்துப்பொதுவா மனைவ
ளர்ந்தாமாலே, ஒருவருக்குந்தெரியாதிங்குன் மாய்மையாரறிவேனுன்
மையாகச், திருவுளத்துக்கருத்தெதுவோ வதுவெனக்குங் கருத்தென்
ருன் றெய்வமன்னுன்.

எ-று. வாசனைவீசுகின்ற பசியதளபமாலையணிந்த கிரீடத்தையு
டையவரே அன்றுபூதகியினுடைய முலைப்பாலுண்டு நாரதா சாபம்
பெற்றிருந்த நலபகூபன் மணிகூபன்யென்ற இருவரின் மருதா
மங்களையொடித்து சாபவிமோசனஞ்செய்து சகடிறவுதைத்த கிரு
ஷ்ணபகவானே, இங்கே நீசெய்கிற மாயம் ஒருவருக்குந்தெரியா

து எனக்குத்தெரியமாகையால் சத்தியமாக உம்முடைய திருவுளத்திற்கு நினைவு எதுவோ அதுவேயெனக்குங் கருத்தென்றான்] தெய்வத்தை யொத்த சகாதேவன், எ-று.

இவ்வண்ணஞ் சகாதேவனியம்புதலு நகைதருளியிகலோர்சொன்ன, அவ்வண்ணம் புகலாமசவிரைகுரைத்தா னிவனென்னவவனோடாங்கோ பைவண்ணமணிக்கூடந் தனிலெய்திப்பாரதப்போர் பயிலாவண்ண, முய்வண்ணஞ்செல்லுகநீ யுபாயமெனத்தொழுதுரைத்தானுரங்கொளவேலான.

எ-து. இந்தபிரகாரம் சகாதேவன் சொன்னமாத்திரத்திலே கிருஷ்ணபகவான் புன்சிரிப்புகொண்டு தருமபுத்திராதியற்சொன்னஅவ்விதஞ்சொல்லாமல் இவன்உபாயமாகச்சொன்னானென்று அவனுடனே அங்கேநகரத்தினத்தாலிழைக்கப்பட்டிருக்கின்ற ஓநவகாந்தஸதானத்திலேபோய் இந்தபாரதயுத்தஞ்செய்யாவிதம்பிழைக்கும்படி உபாயம் சொல்லென்றுகேட்க அவனைவணங்கிசொல்லுவான்சகாதேவன் எ-று

கொச்சகக்கலிப்பா.

நீ பாரதவமரில் யாவரையு நீருக்கிப்
பூபாரந்தீர்க்கப் புகுந்தாய் புபலவண்ணா
கோபாலாபோரேறே கோவிந்தாநீபன்றி
மாபாரதம்கற்ற மற்றார்சொல்வல்லாரே.

எ-து ஸ்ரீகிருஷ்ணபகவானே நீபாரதயுத்தத்திலே சர்வதேசத்து ராஜாவர்க்கத்தையுங் குருக்ஷேத்திரத்திலே கூட்டிசாம்பலாக்கிப் பூமிபாரந்தீர்க்க இந்த யத்தனஞ்செய்தீர்மேகவ ணரேடசுக்களை பரிபாலனஞ்செய்தவரேயுத்தத்திற்கு ஆணசிங்கம்போன்றவரேகோவிந்தரே உம்மையல்லாமல்இந்த மகாபாரதத்தை நீக்கவல்லவர் வேறேயாரிருக்கிறார்கள்சொல்லுவீரென்றுபின்னுஞ்சொல்லுவான் சகாதேவன் எ-று

பாரளக்கனனைகல்டார்த்தனைமுனகொணரணங்கின
காரார்குழல்களைந்துகாலிற்றளைபூட்டி
நேராககைபிடித்து நின்னையும்யானகட்டுவனேல்
வாராமற்காக்கலாம்மாபாரதமென்றான,

எ-து கர்ணனைபூமியாளும்படிபட்டங்கட்டி அவனைகொல்லுகிறேனென்றுபகைத்திருக்கின்ற அர்சுனனைமுன்னேகொன்று துரோபதியினுடையகூந்தலைவிரித்துகாலிலேவிலங்குபூட்டிநேராகக்கையாற் பிடித்துஉம்மையும்பானேகட்டுவேனானால் இந்த மகாபாரதயுத்தம் வராமற்படிக்காக்கலாமென்றான் சகாதேவன் எ-று.

முன்னநீ கூறியிவையெல்லா முடித்தாலும்
என்னைநீ கட்டுமா றெவ்வா றெனமாயன்
உன்னைநீ தானு முணராதா யுன்வடிவம்
தன்னைநீ காட்டாத் தளைந்திடுவே னயனென்றான்,

எ-து திருமாலானவர்முன்னேநீசொல்லியபடி அவைகளெல்லாஞ் செய்து முடித்தாலும் என்னைப்பிடித்துக்கட்டும்விதம் எப்படியென்று கேட்க உம்முடையபெருமையறியாத நீர்உம்முடையவடிவைகாட்டினால் நான்காட்டுவேனென்றான சகாதேவன்-எ-று.

மாயவனு மன்பன் மனமறிவான் கட்டுகவென்
றாயவடிவு பதினா யிரங்கொண்டான
தூயவனுமூலமாந் தோற்றமுணர்ந்தவ்வுலகுந்
தாயவடியிணை தன் கருத்தினாற்பிடித்தான்

எ-து. ஸ்ரீகிருஷ்ணபகவானும் அன்பனுடைய மனமறியும்படி நம்மைக் கட்டும்பிள்ளையென்று தமதிச்சையினாலாகிய பதினாயிரம் வடிவுகொண்டார் பரிசுத்தனாகிய சகாதேவனும் அவ்வடிவுகளுக்கெல்லாம் ஆதியாதியவடிவை ஞானத்தாலறிந்து எவ்வுலகத்தையும் தாவியளந்த இரண்டு பாதங்களையும் தன கருத்தாகிய கயிற்றினாலே கட்டினான் எ-று. ௩௬

நீதேவ னென்றறிந்து நெஞ்சாற் றளைக்கட்டுஞ்
சாதேவன் கண்களிக்கக் காளையாய்முன்னின்றான்
பூதேவ ருங்கனகப் பூங்கா நிழல்வைகும்
மாதேவருந்தேடிக் காணாமலரடியோன்

எ-து. பதினாயிரம் வடிவிலே மூலமாகிய வடிவையறிந்து நீதான் தேவனென்று நிச்சயித்துமனதினாலே தன்னைக்கட்டியசகாதேவனுடைய கண்கள் களிக்கும்படி காளையாகி பிரத்தியட்சமாய் நின்றார்பூலோகத்துத்தேவரும் பொன்மயமாகிய மலர்களையுடைய பஞ்சதருவினிழலிலே தங்கியபெருமைபொருந்தியதேவர்களுந் தேடிக்காணாததாமரைமலரைபொத்த பாதங்களையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் எ-று, ௩௭

அன்பாலின்றென்னை யறிந்தேபிணித்தமையால
என்பாதந்தன்னை யினிநீவிடுகவென
வன்பாரதப்போரில் வந்தடைந்தவைவரையும்
நின்பார்வையாற்காக்க வேண்டுநெடுமாலே

எ-து, பத்தியினாலேயின்று என்னையறிந்துகட்டியபடியால் என்னுடையபாதத்தை இனிநீவிடக்கடவாயென்று கிருஷ்ணபகவான்சொல்லவண்மைபொருந்திய பாரதயுத்தத்திலேவந்துசேர்ந்தஎங்களைவரையும்உம்முடையகடாட்சத்தினாலேரட்சணை செய்யவேண்டும்நெடியமகாவிஷ்ணுவேயென்றான சகாதேவன்-எ-று. ௩௮

என்றென்றிறைஞ்சி யிருதாமரைத்தாளி
லொன்றுங்கதிர்முடியாம் கோமென்றுரைத்தருளி
இன்றிங்கிருவோரு மிப்போதுரைத்தமொழி
யொன்றும்பிரரறிய வேதாதொழிகென்றான்.

எ-து, இப்படியென்று சொல்லி வணங்கி இரண்டுதாமரை மலர் போன்ற பாதங்களில்நமஸ்கரித்தசகாதேவனுக்கு நிச்சயஞ்சொல்லி இன்று நாமிரண்டுபேரு மிப்போது பேசியசொல்லெனறும் அன்னியரறியச் சொல்லாதையென்றார் கிருஷ்ணபகவான எ-று. ௫௯

ஆண்டிருந்தவனவனீங்கியறிவுடையோரிருவோரும்
பாண்டவர்கணமுனையெய்தப பழுதில்புகழ்ப்பாஞ்சாலி
நீண்டகருங்குழல்சோர நின்றாளைமுகநோக்கி
ஈண்டவரிலிளையோனச் சந்துமிகவினிதென்றான்

எ-து. அவ்விடத்தேயிருக்க சபையினின்றும் நீங்கியறிவுடைய அவ்விரண்டுபேரு தருமபுத்திரர் முதலானோரிருக்கின்ற சபைக்குவர அப்போது குற்றமற்ற கீர்த்தியையுடையதுரௌபதையானவள்நெடியசருமைபொருந்திய அளகபாரஞ்சோரநின்றாள் அவள்முகத்தைப்பார்த்து கிருஷ்ணபகவானுக்கிளையவராகிய சாத்தகியாழ்வார் இந்தச்சமையம்மிகநல்லதுநீகேட்கவேண்டியதுகளைகேளென்றார் எ-று, ௬௰

தருமனுக்குங்கருத்திதுவே தருமவிடன்போர்புரியாம்
விருநிலத்திலுடனவாழ்க விவர்க்குநினைவென்றுரைத்து
வரிமலர்க்கண்தனல்சோர மலர்க்கூந்தற்குழல்சோர
விரிமலர்ச்செஞ்சேவடிக்கீழ் வீழ்ந்தழுதாள்மின்னனையாள்.

எ-து, சாத்தகியாழ்வார சொன்னவசனங்கேட்டு ஞாதிகளுடனே யுத்தஞ்செய்யாமல் பெருமைபொருந்திய பூமியிலேகூடிவாழவே தருமபுத்திரனுக்குங்கருத்து இந்தச் சகாதேவர்க்கு மிதுவே கருத்தென்று சொல்லி செவ்வரி பரந்தநீலோற்பலமலரையொத்தகண்களிலே நீரொழுகப் பூமுடித்தலை மறந்து அளகபாரமுஞ் சோர்வையடையபிரதிக்கினை எவ்விதத்திலுமுடியுமென்று கிருஷ்ணபகவானுடைய விரிந்த மலரையொத்த சிவந்ததிருவடியிலேவிழுந்து பிரலாபித்தாள் மின்னலையொத்த வடிவையுடைய துரோபதி எ-று ௬௧

காலக்கனகன் றனிமைந்தனைக்கொன்ற
காலத்தவனறைந்த கற்றூணிடைவந்தாய்
மூலப்பேரிட்டழைக்க மும்மதமால்யானைக்கு
நீலகிரிபோல நின்றநெடுமாலே.

எ-து, ஆதிநாராயணனெங்கே யிருக்கின்றான் இந்தத்தூணிலு
மிருப்பானோசொல்லடாவென்று தன்னுடைய ஒப்பற்றகுமாரனாகியபி
ரகலாதனை மிகவும்இரணியன்கோபிக்குங்காலத்திலே அவனுலறையப்
பட்டதற்றூணிலே நரசிங்கவடிவங்கொண்டுவந்தாய் ஆதிமூலமேயென்
றழைத்த மும்மதங்களையும் பொழிகின்றபெரிய யானைக்குநீலகிரிபோ
லஎதிரே யெழுந்தருளிவந்தநெடியமகாவிஷ்ணுவேயென்றால் துரோப
தி-எ-று, ௪௨

கற்றைக்குழல்பிடித்துக் கண்ணிலான்பெற்றெடுத்தோன்
பற்றித்துகிலுரிப்பப்பாண்டவரும்பார்த்திருந்தார்
கொற்றத்தணித்திகிரிக் கோவிந்தாநீயன்றி
அற்றைக்குமென்மானமாவந்துகாத்தாரே

எ-து. கற்றையாகிய என்னுடைய அளகபாரத்தைப்பிடித்துத்திரு
தராட்டிரன்பெற்றகுமாரனாகிய துர்ச்சாதனன் மானபங்கமாகத் துகி
லைப்பற்றி உரியும்போதுபஞ்சபாண்டவரும்பார்த்திருந்தார்கள்வெற்றி
பொருந்திய ஒப்பற்ற சக்கராயுதத்தையுடைய கிருஷ்ணபகவானேஉம்
மையல்லாலன்றைக்கும் எனமானத்தைவேறேயார்வந்து காத்தார்களெ
ன்றுபின்னுஞ்சொல்லுவாள் துரௌபதி-எ-று. ௪௩

மன்றிலழைத்தெனக்கு மாசளித்தமன்னவன்பாற்
சென்றுதமக்கைந்தூர் திறல்வீரர்பெற்றிருந்தால்
அன்றுவிரித்தவருங் கூந்தல்வல்வினையேனை
அன்றுமுடிப்பதினி யெம்பெருமானென்றழுதாள்.

எ-து சபையிலேயழைத்து எனக்குக் குற்றத்தைத்தந்த துரி
யோதனனிடத்திற்போய்ச் சுற்றவீரராகிய பஞ்சபாண்டவர் தமக்குஐந்
தூர்பெற்றிருப்பார்களேயாகில் அன்றுவிரித்தஅரிய அளகபாரத்தைத்
தீவினையுடையஅடியேனை என்றைக்கு இனிமுடிப்பது எமது கடவுளே
என்றழுதாள் துரௌபதி-எ-று. ௪௪

தண்டிருந்ததவன்கரத்திற் றனுவிருந்ததவன்கரத்தில்
வண்டிருந்தபூங்குழலைமேன் மாசிருந்ததெனவிருந்தாள்
கண்டிருந்தீரெல்லீருஞ்சருபலர்பாலூர்வேண்டி
யுண்டிருந்துவாழ்வதற்கே யுணர்கின்றீருரையீரே.

எ-து, அந்தவீமசேனன்கையில்தண்டாயுதமிருந்தது இந்த அர்ச்
சுனன்கையில் காண்டீபமென்னும் வில்லிருந்தது இந்தத்துரௌபதியோ
வண்டுகள்மொய்த்திருந்த பூவையணிந்த கூந்தலின்மேல்மாசேறியிருந்
ததெனும்படி யிருந்தனள் நீங்களெல்லோரும் பார்த்திருந்தீர்கள்
சத்துருக்களிடத்திலே ஊர் வேண்டி பெற்றுக்கொண்டு புசித்து உயிர்
வாழ்வதற்குநினைக்கிறவர்களே உத்தரவுசொல்லுங்களென்றார் சாத்தகி
யாழ்வார்-எ-று, ௪௫

சண்டமுகிலுருவனைய சராசந்தன்றனக்கஞ்சி
வண்டுவரையாளுக வடமதுரைவிட்ட

திண்டிறனமாதவமகியோ திசழ்தருமனமனமகியோ
பண்டுமர்கருத்தறிந்து யார்போய்வேண்டுவதென்றான்

எ-து மேகத்தையுடையபிரளயகாலத்துஇடியையொத்த சராசந்தனென்னும அரசனுக்குப்பயந்துவளப்பத்தையுடைய துவாரகையை கோட்டையாகக்கொண்டுவடமதுரையென்னும்பட்டணத்தைக் கைவிட்டவலியசௌரியத்தையுடைய கிருஷ்ணபகவானுடைய புத்தியோபிரகாசத்தையுடைய தருமபுத்திரருடைய புத்தியோமுன்னதாக அவர்களுக்குத்தெறிந்திருந்தும்போய் பூமியைவேண்டுவது ஏனென்றார் சாத்தகியாழ்வார்-எ-று. சங

சாத்தகிநின்றிவையுரைப்பச் சடைக்குழலாளழுதாற்றக்
கோததநின்முதலிய குலவேந்தரைவரையும
பார்த்தருளியருள்பொழியும்பங்கயக்கணெடுமாலும்
ஏத்தரியபெருங்கற்பி னிலையாளுக்கிவையுரைத்தான

எ-து. சாத்தகியாழ்வாரெழுந்து இந்தவசனஞ்சொல்ல சடைபட்டகூந்தலையுடைய துரோபதி பிரலாபித்துப் புலம்ப அப்போது தருமபுத்திரர் முதலாகிய ஐவரையும்பார்த்தருளி கிருபையைப்பொழிகின்றதாமரைக்கண்ணனாகிய கிருஷ்ணபகவானுந்துதிசெய்தற்கரியபெரியகற்பையுடையதங்கையாகியதுரௌபதிக்குஇவைகளை அருளிச்செய்தார்.

கொல்லாண்மைப்பாண்டவர்க்கு தூதுபோய்மீண்டதற்பி
னெல்லாயுணைக்கூந்த லாகினமுடிக்கின்றே
னெல்லாருங்காணவினி விரிப்பதெண்ணரிய
புல்லார்தமந்தப் புரமாதர்பூங்குழலே,

எ-து, பழமையாகிய சவுரியத்தையுடைய பஞ்சபாண்டவர்க்காகத் தூதுபோய்வந்தவுடனே துரோபதையே உன்னுடைய பதிவகூந்தலைகாணேமுடிப்பேன, எல்லாரும்பார்க்கும்படி இனிவிரிக்கப்படுவது எண்ணிக்கையற்ற சத்துருக்களுடைய அந்தப்புரத்திலிருக்கின்றஸ்திரீகளுடைய பூவையணிந்தகூந்தல். எ-று சஅ

மைக்குழலாய்கேளான் மருவாருடம்பலத்து
புக்குழலாகுங்கொழுவாம் போர்வாளபிமன்னன்
றெருக்குழலும்வெங்கோள்கைக் கொல்வேந்தர்தங்குலமு
மிக்குழலுஞ்சேர முடியாதிராதென்றான.

எ-து. கரியகூந்தலையுடைய துரோபதியே கேட்பாயாக சத்துருக்களுடைய தேகங்களாகிய வடவிமேல்புகுந்து உழுதற்கு ஆகின்றகொழுப்படை யென்று சொல்லாகும் யுத்தஞ்செய்கின்ற வாளாயுதத்தையுடைய அபிமன்னன் ஒன்றாகக்கூடியுழலுகின்ற கொடுங்கோலின் தன்மையையுடைய பழைய அரசர்களுடைய குலங்களையும் உன்னு

டைய அளகாபாரத்தையும் ஒருக்குசேரமுடியாமல் விடானென்றுபின்ன
ஞ்சொல்லுவார் கிருஷ்ணபகவான. எ-று. சக

துன்றுபிணியோர் துறந்தோரடங்காதோர்
கன்றுசினமனத்தோர் கல்லாதவரிளையோ
ரொன்றுமுறைமை யுணராதவர்மகளி
ரெனறமிவர்மந்தரத்தி லெய்தப்பெறுதாரே,

எ-து. நிறைந்த வியாதியையுடையவர்கள் துறந்த மகத்துக்கள் ஒரு
வருக்கு மடங்காதவர்கள் கனறிய கோபம்பொருந்தியமனமுடையவர்
கள கல்வியில்லாதவர்கள்சிறுபிள்ளைகள்பொருந்தியநீதியறியாதவர்கள்
பெண்பிள்ளைளென்று சொல்லுகின்ற இவர்களென்றும் ரகசியம்பேசு
மிடத்தில் அடையபெறாதவர்கள்-எ-று. ருல

பெண்ணீர்மைக்குன்றாப் பெருந்திருவினசெங்கமலக்
கண்ணீர் துடைத்தருளிக் கண்ணிற்கருணையெனுந்
தெண்ணீரினுற்பொருத்தத் தேற்றினுன்சாற்றுகின்ற
மண்ணீரனலனிலம் வானவடிவாமாமாயன்.

எ-து பெண்களுக்குவேண்டிய சிறந்தகுணங்கள் குறைவில்லாதது
ரௌபதியினுடைய செந்தாமரைமலர்போன்ற கண்களிருக்கும் இரு
பைஎன்கிற தெளிந்தநீரால் பொருந்துமபடிதெளியச்செய்தார்சொல்லு
கின்ற பஞ்சபூதவடிவமாகிய பெருமைபொருந்திய கிருஷ்ணபகவான
எ-று, ருக

என்னக்கூறிவிருந்தோ னுறைவிர்த்து
நின்னெப்பவரிலலாய் நீயேசெனவுரைப்ப
மன்னர்க்குமன்னவன்பால் மாயோனுந்தூதாகிப்
பொன்னுற்றமேமிய பொருபரித்தேர்மேற்கொண்டான்.

எ-து. இப்படிஉறுதிபாகச்சொல்லியிருந்தகிருஷணபகவானுடை
ய வசனங்களைநீக்கி உமக்குச்சமானம ஒருவருமிலலாததேவரீரே தூ
துபோகவேண்டுமெனறு பஞ்சபாண்டவர்கள்சொல்ல அரசற்கரசனுகி
ய துரியோதனனிடத்திலே கிருஷ்ணபகவானுந்தூதாகி மகாமேருமலை
க்குச் சமானமாகிய குதிரைகட்டியதேரின்மேலேறிக்கொண்டாரஎ-று.

சங்குமணிமுரசஞ சல்லரியுந்தாரைகளு
மெங்குமுழங்க வெழில்வெண்குடை நிழற்ற
பொங்குகவரிபுடை யிரட்டவெண்ணிலா
அங்கமொருநான்கு மவனிபருகதற்சூழ

எ-து. அப்போதுசங்குவர்க்கங்களும் அழகிய பேரிகைகளுஞ்சல்லரி
களுந் தாரைகளும எல்லிடத்திலுஞ் சத்திக்க அழகியவெள்ளைக்குடை

நீளச்செய்ய பிரகாசம்பொருந்திய சாமரைகளிரண்டு பக்கங்களிலும் வீசிவர எண்ணமில்லாத இரதகஜதுரகபதாதிகளும் பூமியையாளும் அரசர்களும் தன்னைசூழ்ந்துவரப்புறப்பட்டார் கிருஷ்ணபகவான-எ-று.

கல்வரையும்பாலைக் கடுஞ்சுரமுங்கானயாறும்
நல்வரையுநீர்நாடு நாளிரண்டிற்சென்றளித்
தொல்வரையகோபுரமு நீண்மதிலுஞ்சூழ்ந்திலங்கும்
மல்வரையதோளான் வளமாநகர்கண்டான.

எ-து. மணிபாம்பருக்கையைக் கொண்டிருக்கின்ற பாலையென்னுங் கடியசுரக்களும்கானயாறும் நல்லமலைகளும நீரையுடையநாடுகளுமிரண்டுநாளிற்கடந்து போய்பழமையானமலைக்கொப்பாகிய கோபுரங்களும் நெடியமதிலுஞ்சூழ்ந்துவிளங்குகின்றமல்லுத்தஞ்செய்கிறமலைக்குச்சமானமாகிய தோளையுடையதுரியோதன துவளப்பத்தையுடைய பெரியநகரத்தைக்கண்டார் கிருஷ்ணபகவான் எ-று. ௫௪

கலிநிலைத்துறை.

மேவுசெந்துகிர்த் திரளுமாமரகதவிதமுஞ்
சோவைவெண்கதிர்த கரளமுநிரைநிரைகுயிற்றித்
தாவும்வெம்பரித் தேரினானெதிர்சமைத்த
காவணங்களிற் ரோன்றினபச்சிளங்கமுகு.

எ-து. அந்தமார்க்கத்திலே டசுமையுமிளமையும் பொருந்தியகமுகுகள் பழுத்தகுலையும் டச்சைக்குலையும் பாலைகளும் விளங்கியதெப்படியிருக்கின்றதென்றால் சிவந்தநிறத்தையுடைய பவளங்களும் வெவ்வேறுவிதமாக மரகதங்களும கோவைசெய்தவெவ்வியகிரணத்தையுடைய முத்துகளும் வரிசையாகப்படுத்துக் காவிடைக்கும வெவ்விய குதிரைகளைக் கட்டிய தேரையுடைய கிருஷ்ணபகவானுக் கெதிரேயுண்டாகிய மண்டபங்கள் போலிருந்தன-எ-று. ௫௫

வலமபுலாமகிற் சந்தனம்வருக்கைமாகந்துஞ்
சமடகந்தமாலம பலதிசைதொறுந்தயங்கி
யும்பர்நாயகன் வரவுகணடுளங்களிகூர்ந்து
தும்பிபாடின தோகைகின்றாடினசோலை.

எ-து. பரிமளம்வீசிய அகிலும்சந்தனமும் டலாவும் மாவும்வாசனைபொருந்திய சண்பகமும் பச்சிலைமாமும எங்கத் திசைகளிலும் விளங்கியிருககடபெற்ற சோலையில் தேவநாயகனாகிய கிருஷ்ணபகவான் வருதலைக்கண்டு மனமகிழ்ச்சியடைந்து வணடுகள்பாடின மயில்கள் நின்று கூத்தாடின. எ-று. ௫௬

அணிகௌத்தினுபுரியெனு மணங்குசெந்திருவின்
கணவனுக்கெதிர் காட்டுரோஞ்சனங்கடுப்ப

மணமிகுந்தசெந்தாமரைமலருடன்சிறந்த
புணரியிற்பெரும்புனலையுக்கொள்வனபொய்கை.

எ-து, அழகினைக்கொண்ட அஸ்தினபுரியென்னும்ஒருநகரன்னி மகா
லட்சுமிக்கு நாயகனாகிய கிருஷணபகவானுக்கு எதிரோநாட்டுகின்றஆ
லத்திக்கொப்பாக வாசனைமிகுந்தசிவந்ததாமரைமலருடனே சிறந்தகட
ல்போல்நிறைந்தநீரையுக்கொண்டிருந்தனபொய்கைகள்,எ-று. ருஎ

நடந்தநாயகன்கோலமாய்வேலைசூழ்ஞால
மிடந்தநாளினிலதுவழிபாகவந்தெழுந்து
படர்ந்தபாதலத்தங்கையைப்படமதில்சூழ்ந்து
கிடந்ததாமெனச்சிறந்ததுதாழ்புனற்கிடங்கு.

எ-து, தூதுநடந்த கிருஷணபகவான் பூர்வத்திலே வராகரூபமாய்
ச்சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப்பேர்த்தநாளில்அதுவழியாக வந்தெழு
ந்து பரவியபாதாளகங்கை அந்நகரின்பெரியமதிலை வளைந்து கிடந்த
தெனறுசொல்லச்சிறந்திருந்ததுவாழ்ந்தநீரையுடைய அகழி எ-று,

அடிநிலத்திலே படிந்தனவிடிமுகிலனைத்தும்
முடிநிலத்தினுக் குடும்பகத்தினுமுடிவில்லை
நெடியசக்கரப்பொருப்பையுநிகரிலாவிதற்கோர்
படிவகுத்ததாமெனும்படிபரந்ததுபுரிசை.

எ-து, கீழ்நிலத்திலேபடிவனவாகு மிடையையுடைய மேகங்களெல்
லாம் அதினுடைய மேல்நிலத்துக்கு நட்சத்திரபதவியிலு முடிவில்லை
நீண்டசக்கரவாளகிரியையும் நிகரிலலாவிதற்குஒருபடியொப்பாகச்செ
ய்ததாமென்று சொல்லும்படி பயந்திருந்ததுஅந்த அஸதினபுரத்துமத
தில். எ-று. ருகூ

பகலினுங்கடும் பரிதிநன்தன் டரப்பாம்
விகலியெங்கணுமெறிந்தகால் பொருதலுமேத்திப்
புகலுகின்றமந்தாகினித்தங்கமேபோல
வகல்விசும்பிடைமிடைவன நெடுங்கொடியாடை.

எ-து, பகற்காலத்திலும் வேகத்தையுடைய சூரியன் தன் கிரணங்க
ளை விசாமலிருக்கும்படி வலிமைகொண்டுஎவ்விடத்தும் வீசுகின்ற கா
ற்றுப்பொரிகிறபடியால் உயரவாகச்சொல்லுகிறகங்கையினுடைய அ
லைகள்போலஅகன்றஆகாயத்தினிடத்தில்நெருக்குவனநெடியகொடியா
கக்கட்டியவஸ்திரங்கள-எ-று, கூ0

புயங்கபூமியோ புரந்தரற்கமைத்த பொன்னுலகோ
தயங்குசெல்வநீடளகைபோனகரெனச்சாற்ற
வியங்குகார்முகில் வரையினின்றெழுவனபோல
வயங்குகாரகின்றம் புகையுயிர்ப்பெனமாடம்

எ-து. நாகலோகமோ இந்திரனுக்குச்செய்யப்பொன் மயமானதெய்வ
லோகமோ விளங்காநின்றசெல்வமிகுந்த அளகாபுரியோ இந்த நகரென
றுசொல்லச் சஞ்சரிக்கின்ற கரியமேகங்கள் மலைகளின்மேல்நின்று எ
ழுவனபோல பிரகாசிக்கின்ற கரிய அகிலினது கரியவாகிய புகைகளை
வீசுகின்றன மாளிகைகள், எ-று. ௬௧

மன்னர்வேழமுஞ் சேனையு மெதிரெதிர்மயங்க
பின்னுமுன்னுமெம்மருங்கினும் பெயரிடம்பெறுமற்
துன்னிநின்றவர்போகுமின்குமினெனுஞ்சொ
லென்னுமோசையே யுள்ளனவீதிகளெல்லாம்.

எ-து. அரசர்களுடைய யானைகளுஞ் சேனைகளும் ஒன்றுக்கொன்
று எதிரிட்டுமயங்கப் பின்னுமுன்னுமெப்பக்கத்திலும் காலைத்தூக்
கிவைத்துப்போக இடம்பெறமாட்டாமல் நெருங்கினறவர்கள் போங்
கோள்போங்கோளென்னுஞ் சொல்லினையுடைய சத்தங்களேயுண்டா
யிருக்கின்றன வீதிகளெல்லாம் என்றவாறு. ௬௨

வரையெலாம்பல வனமெலாங்கடலெலாம்விளைந்த
தரையெலாமபடு பொருளெலாந் தனித்தனிகுவித்த
நிரையெலாங்கவராவண நீர்மையைப்புலம்வ
ருரையெலாமெடுத் துரைப்பினுமுவமைவேறுளதோ.

எ-து. மலைகளெல்லாவற்றினுமுண்டாகின்ற மாணிக்க முதலிய திர
வியமும் காடுகளெல்லாவற்றினுமுண்டாகின்ற சந்தனமுதலிய திரவி
யமும கடல்களெல்லாவற்றினு முண்டாகின்றசங்குமுதலிய திரவிய மு
ம்நாடுகளெல்லாவற்றினுமுண்டாகின்றசெந்நெல்முதலிய திரவியங்களு
ம்வெவ்வேறாகக்குவித்து வரிசையாக வைக்கப்பட்ட கடைவீதியினு
டைய குணத்தைவித்துவான்கள்கற்ற சொல்களெல்லா மெடுத்துச்சொ
ன்னாலும் வேறேயுவமானமுண்டோ. எ-று, ௬௩

விரவுகானமலரினும்பல வீரரின்விதங்கள்
பரவைவெண்மணலினும்பல புரவியின்பந்தி
யிரவில்வானமீனினும்பல யானையினீட்டம்
திரைகொள்சாரத்துளியினும் பலதேரணிநிலையே.

எ-து. காட்டிலிருக்கின்ற பலமலரைக்காட்டிலுஞ் சுத்தவீரர்கள் அ
திகமாகவிருப்பார்கள சமுத்திரத்தினுடைய வெள்ளைமணலைக்காட்டி
லும் குதிரைப்பந்திகளதிகமாகவிருக்கும இராத்திரியில் ஆகாயத்திலே
தோன்றும் நட்சத்திரங்களைக்காட்டிலும்யானைக்கூட்டங்களதிகமாகவி
ருக்கும் வரிசையான மேகதாரைகளைக்காட்டிலும் இரதங்களதிகமாக
விருக்கும், எ-று. ௬௪

ஆசிலமறையந்தணராலயமொருபால்
மாசிலாமுடி மன்னவர்மாளிகையொருபால்

காசிலாமகியமைச்சர்தங் கடிமனையொருபால்
பேசிலாரெழில்வணிகர்தம் பேரிடமொருபால்.

(எ-து.) குற்றமில்லாத நான்குவேதமுந்தெரிந்த பிராமணருடைய
திருமாளிகைகளொருபக்கத்திலிருக்கும் களங்கமில்லாதகிரீடந்தரித்த
அரசராண்மனைகளொருபக்கத்திலிருக்கும் பழுதிலாதபுத்தியின் மிகு
ந்த மந்திரிகளுடைய புதுமைபொருந்திய வீடுகளொரு பக்கத்திலிரு
க்கும் சொல்லுமிடத்தில் நிறைந்த அழகையுடைய வைசியாடைய (௩௫)
இடமின்றவீடுகளொருபக்கத்திலிருக்கும்—எ-று.

மங்கலந்திகழ்மனை யெலாம்புரியோசை
திங்களோடாய்நெடுந் தலமெலாஞ்செழுசிலம்போசை
யங்கண்மாநகரணைத்துமும்முரசதிரோசை
யெங்கணுங்கடவுளா ரிடந்தொறுமுழவோசை.

(எ-து.) கல்யாணஞ் செய்கின்ற வீடுகளெல்லாம் வலம்புரியென்
னுஞ் சங்கத்தொனியாயிருக்கும் சந்திரன் தோய்கின்ற நெடிய நிருத்
தசாலைகளெல்லாம் நடனஞ்செய்கின்ற மாதருடைய செழுமைபொருந்
திய சிலம்போசையா யிருக்கும் அழகிய இடத்தையுடைய மகத்தாகி
யநகரமுழுதும் வெற்றியமுரசு விரமுரசு தியாகமுரசென்னும் மூவித
மங்கலமுழவோசையா யிருக்கும் எவ்விடத்திலுந் தேவாலயங்கோறு
ம்பேரிகை யோசையாயிருக்கும் (௩௬)
மத்தளவோசையா யிருக்கும்—எ-று.

முன்றிலின்கணின் றிடம்பெறுவரசர்மாமுடிக
ளொன்றொடொன்றுறைந் தெற்றிமேலொளிபொழிசிதர
சென்றுசென்றுதிசைதொறுந் திகழ்ந்ததுசெம்பொற்
குன்றெனும்படி நின்றதுகுருகுலன்கோயில்.

(எ-து.) தெருவாசலிலே நிற்க இடம்பெறுமல் அரசருடையகிரீ
டங்கள் ஒன்றினொடொன்றுதேய்ந்தும் இடிபட்டும் மேலேபிரகாசிக்
கின்ற அபரஞ்சிப்பொடிகள் தெரித்துப்போய் பொருந்துகின்ற திக்
குகள்தோறும் விளங்கியது மகாமேருமலை யென்னும்படி நின்றது
துரியோதனன் அரண்மனை—எ-று. (௩௭)

என்றிசைக்குநல்ல லொளிநிமிரெழின்மணிமகுடம்
குன்றிசைக்கும்வண் கோபுரநிரைகள்க்குறுகித்
தென்றிசைக்குளிர் செண்பகமலர்தொறுஞ்சிறுதேன்
நின்றிசைக்கும்வண் சோலைவாயடர்ந்தனநெடியால்.

(எ-து.) சூரியனெனச் சொல்லுகின்ற பிரகாசமுயர்ந்த அழகிய
ரத்தினங்கள்பதித்த சிகரங்களையுடைய மலையென்று சொல்லுகின்றவ
ளத்தைப்பெற்ற கோபுரத்தையுடைய நெடிய அஸ்தினபுரத்திற் சேர்
ந்து அதற்குத்தென்றிசையில் குளிர்ச்சிபொருந்திய சண்பகமலர்கள்

தோறும்சிறிய வண்டுகளிருந்து பாடுகின்ற வளப்பம்பொருந்தியசோ லையி லெழுந்தருளினர் கிருஷ்ணபகவான்—எ-று. (சுஅ)

ஒன்றுதூதுகொண் டிலங்கைதீவிளைத்தவரைவர்க்
கன்றுதூதுவந் தெயிற்புறத்திறுத்தனரென்னத்
துன்றுதாளிமுரல்பசுந் தொடையலான்றனக்கு
சென்றுதூதுவரியம்பினர் சேவடிவணங்கி.

(எ-று.) முதற்காலத்தில ஒருகுரங்கைத் தூதாகவிடுத்து இலங்கா புரியை அக்கினியை மூட்டிவித்தவர் பஞ்சபாண்டவர்க்கின்று தூதா கவந்து மதிற்புறத்துச் சோலையிலிருந்தாரென்று நெருங்கிய மலரினி டத்து வண்டுகள் பாடுகின்ற பசியமலர்மாலையணிந்த துரியோதன ரா ஜனுக்கு தூதுவர்போய் சிவந்தபாதங்களை வணங்கிச் சொன்னார்கள்.

தொல்லைநாயகன் வந்தனனென்னலுஞ்சுரும்பார்
மல்லன்மாலையா னேவலான்மாநகர்மாக்க
ளெல்லைநீண்மதில் வட்டம்யோசனையெழுநூறு
செல்லுமாநகர்த் தெருவினையொப்பனைசெய்தார்.

(எ-து.) ஆதிநாயகனாகிய கிருஷ்ணபகவான் தூதுவந்தா ரென்று சொன்னமாத்திரத்தில் வண்டுகள்நிறைந்த வளத்தையுடையமாலையை யணிந்த மார்பனான துரியோதனராஜனது ஏவுதலினாலே மகத்தாகிய அஸ்தினா புரத்திலுள்ளவர்கள் விருத்தமாகிய நெடிய எழுநூறு யோச னையளவுசெல்லுகின்ற பெரியபட்டணவீதிகளை அலங்கரித்தார்கள். ()

மின்னுமாமணிபல்லிய விதங்கண்முன்முழங்க
மன்னர்மன்னவனெழுந்தனன் மாலெதிர்வருவா
னென்னைநீயவற்கெதிர்செல்வ தென்றுதன்மருகன்
றன்னையன்பொடுதகைந்தனன் கொடுமைகூர்சகுனி.

(எ-து.) மின்னுதல்செய்யும் பெரியமேகங்களைப் பார்க்கிலும் நாதை விதவாத்தியங்களுமுழங்க அரசர்க்கரசனாகிய துரியோதனன்கிருஷ்ண பகவானை எதிர்கொள்ளவெழுந்தான் அதுகண்டு தூதுவருகிறவர்களை எதிர்கொள்வது என்னமரியாதை யென்று தன்மருமகனாகிய அந்த துரியோதனராஜனை அன்பினாலே தடுத்துவிட்டான் கொடுமை மிகுந் துள்ள சகுனியானவன்—எ-று. (எக)

சீர்வலம்புரித்திகிரிசேர் செங்கையான்றனக்குக்
கார்வலம்புரிக்கோயிலுங் காட்சியுமமைத்துப்
போர்வலம்புய ராசருங்கிளைஞரும்போற்றத்
தார்வலம்புரித்தோளினு னிருந்தனன்றவிசில்.

(எ-து.) சிறப்புமிகுந்த சங்குசக்கரமுஞ்சேர்ந்த சிவந்த திருக்கரங் களுடைய கிருஷ்ணபகவானுக்கு மேகங்கள் வலஞ்செய்யப்பெற்ற அ ரண்மனையுங் காணத்தக்க பொருள்களும் பொருந்தச்செய்து யுதத

நந்தியாவர்த்த மாலையணிந்த புசதலைதயுடைய துரியோதனராசன் சிங்காதனத்திலே வலிமைபெற்ற ராஜவர்க்கமும் பந்துக்களும்வணங்க திலிருந்தான்—எ-று (எஉ)

கொல்பகிரதிமைந்தனுந் துரோணனுஞ்சுதனும்
வில்விதூரனுங்கிருபனு முதலியவேந்தர்
மல்குமூவிருபத்துநாறு யிரமகிபர்
செல்வநாயகற்கியோசனை யிரண்டெதிர்சென்றூர்.

(எ-து.) அப்போது நெடுங்காலமாயிருக்கின்ற கங்காபுத்திர ராகிய வீஷ்டுமாச்சாரியரும் துரோணாசாரியரும் அஸ்வத்தாமாவும் வில்லிலே வல்லவனுன விதூரராசனும் கிருபாசாரியரும் இவர்கள் முதலிய அரசர்களும நெருங்கிய அறுபதுநாறுயிரமன்னர் மண்டலீகரும் கிருஷ்ணபகவானை இரண்டுயோசனை தூரத்திலே போய் எதிர்கொண்டார்கள்—எ-று. (எங)

வந்தவந்திருமருங்கினு மன்னவர்வணங்கப்
பைந்துழாய்முடிப் பரமனுங்கண்மலர்பரப்பி
யந்தமாநகர்புகுந்தபி னரசினிற்புகாமல்
புந்திகூர்அருள்விதூரன்வாழ் வளமனைபுகுந்தான்.

(எ-து.) வந்துவந்து இரண்டுபக்கத்திலும் அரசர்சள்பணியப்பசிய துளபமாலையணிந்த கிரீடத்தையுடைய கிருஷ்ணபகவானும் அவர்களைப்பார்த்துக் கிருபைசெய்து அஸ்தினுபுரத்துக்குவந்தபின்பு துரியோதனராஜன் அரண்மனைக்குப் போகாமல் கிருபைமிகுந்த மனமுள்ள விதூரராசன் வாழ்கின்ற வளப்பத்தையுடைய அரண்மனையிலே எழுந்தருளினுர்—எ-று. (எச)

வேந்தர்யாரையும் விடைகொடுத்தகன்றபின்விமலன்
வாய்ந்தமாளிகைநடுவணோர் மண்டபங்குறுகி
யாய்ந்தவல்லவர் நவமணியழுத்தியவரியே
றேய்ந்தமாசனமிடப்பொலிந்த தன்மிசையிருந்தான்

(எ-து.) எதிர்கொண்ட வரசர்களுக்கெல்லாம் செலவுகொடுத்து அவர்கள்போனபின்பு கிருஷ்ணபகவான் பொருந்திய உப்பரிகையின நடுவே ஒருமண்டபத்திற்போய் சிற்பங்களாய்ந்த வல்லவர்களாலே நவரத்தினமழுத்திய சிங்கந்தாங்குகின்ற ஆசனங்கொடுக்க அதன்மேல் பிரகாசத்துடனே எழுந்தருளியிருந்தார்—எ-று. (எரு)

இருந்ததந்தருளிறைவனை யிறைஞ்சிலனிறைஞ்சி
பெருந்துவந்தனைப் பிறப்பையுமிறப்பையும்பிரித்தான்
மருந்துவந்தனை யமரருக்கருளியமாயோன்
விருந்துவந்தன னென்றுளமுருகிறவிதூரன்

(எ-து.) இப்படி வந்திருந்த கிருஷ்ண பகவானை வணங்கினன் வ ணங்கிப் பெரியசம்பந்தமாகிய சனனத்தையும் மரணத்தையும் நீங்கி ன் தேவாமிர்தத்தை வந்தனைசெய்த தேவர்களுக்கு திருப்பாற்கடலை கடைந்து கொடுத்தருளிய நாராயணமூர்த்தி தன்வீட்டுக்கு விருந்தாக வந்தானென்று மனமுருகிய விதுரன்—எ-று. (எசு)

கோடுகொண்டலைக் கிரிசில்பாலலர்ந்தகோகனகக்
காடுகண்டிடுவண்டெனக் கண்ணினைகளியாத்
தோடுகொண்டதார் விதுரனிப்பிறப்பையுந்தொலைத்தான்
வீடுகண்டவர்க்கிபம்பவும் வேண்டுமோவேண்டா.

(எ-து.) சங்கேந்திய திருக்கரத்தையுடைய கிருஷ்ணபாவானிடத் திலே மலர்ந்திருக்கிற சரசரணுதி அவயவமாகிய தாமரை மலர்க்காட் டை கண்டவண்டுகள்போல் தன்னுடைய கண்களிரண்டுங் களிப்பை யடைந்து இதழைக்கொண்ட பூமாலையணிந்த விதுரன் இந்தப் பிறப் பையும் நீக்கினன் மோக்ஷவீட்டை யறிந்தவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ வேண்டாம்—எ-று. (எஎ)

உள்ளினுணர்ந்துள்ளமுமுருகினனெழுந்து
துள்ளினனுவிழுந்திணையடி சூடினன்றுயரைத்
தள்ளினன்மலர்த்தடக் கையாற்றத்தவவமுதை
யள்ளினனெனக் கண்களாலருந்தினனவிரேயான்.

(எ-து.) நினைத்தான் நினைத்து மனமுருகினன் எழுந்திருந்து துள் ளினன் கீழேவிழுந்து இரண்டுபாதங்களையுஞ் சிரசிற்சூடினன் துன் பத்தைநீக்கினன் தாமரைமலர்போன்றவிசாலமாகியகைகளால் தேவ வாமிர்தத்தை அள்ளினவனென்னும்படி கண்களாற் பகவானமுதை யுண்டான் விதுரன—எ-று. (எஅ)

முன்னமேதுயின்றருளிய முதுபயோத்தியோ
பன்னகாதிப்பபாயலோ பச்சையாலிலையோ
சொன்னநால்வகைச் சுருதியோவீதெய்த
மென்னமாதவஞ்செய்ததிச் சிறுகுடிலென்றான்

(எ-து) முன்னமே நித்திரை செய்தருளிய பழைய பாற்கடலோ சேஷசயனமே பசியவடபத்திரமோ சொல்லிய நாலுவேதங்களோ நினைந்துநீ வருவதற்குமுன் என்னதவத்தைச்செய்தது இந்தசிறுகுடி சையென்றான் விதுரன்—எ-று. (எகூ)

மும்மையாகியபுவனங்களைத்துமுண்முதல்வ
னெம்மையாளுடை நாயகன்விருந்தினுக்கிசைந்தா
னம்மைவென்றன் ஞைறு நூறுயிரமடையர்
தம்மைநோக்கினனவர்களும விரைவுடன்சமைத்தார்

(எ-து.) மூன்றாகிய புவனங்களையெல்லா முண்டருளிய முதல்வரா கிய எம்மை ஆளாகவுடைய கிருஷ்ணபகவான் விருந்துக்குச் சம்மதி

அப்போது அறுநூறுயிரஞ்
தாரென்று ஆச்சரியப் பட்டனன். சிக்கிரத்திலே சமைத்
சமயற்காரரைப் பார்த்தான் அவர்களும் (௮௰)
தார்கள்—எ-று.

வந்தகொற்றவேல்வரிசிலை யவர்க்கும்வானவர்க்கும்
கந்தபர்ப்பனகரிக்கும்வெங் கவனவாம்பரிக்கும்
ஐந்துபத்துநூறுயிர மாசர்க்குமெவர்க்கும்
இந்திரற்குமெய்தாவமு தெனும்படியியற்றி.

வந்தவெற்றியையுடைய வேல்
(எ-து) ஸ்ரீகிருஷ்ணபகவானுடனே வந்தவர்க்கும், கட்டுத் தறி
வரிந்த வில் வாள் முதலிய ஆயுதத்தை யுண்டயவர்க்கும், வெவ்வியவேகத்தையுடை
யைப் பொருந்தினவாகிய யானைகளுக்கும் இந்திரனுபகிடையாத அமிர்தமென்
ய தாவுகின்ற குதிரைகளுக்கும் (௮௧)
று சொல்லும்படி சமைத்தார்கள்—எ-று.

சமைத்தவா வினை நீர்கொடுமஞ்சனமாடிச்
சமைத்தபல்கறிபடிசிறன் விருப்பினலருந்தி
யுமைக்குநாயகனி வொழிக் கருளினனுதவ
இமைப்பிலாரமுதருந்திய வியல்பெனவிருந்தான்.

ஸ்நானஞ்செய்து சமைக்
(எ-து.) வாசனைகட்டிய நீரைக்கொண்டு அன்னங்களையும் தன்
கப்பெற்ற அநேகவிதமாகிய கறிபமுதுகளையும் உருத்திரன
னுடைய விருப்பினாற் புசித்து உமாதேவிக்கு நாயகனாகிய தேவர்களமிர்
து இராகவேலை யொழித்தருளிய மகாவிஷ்ணு கொடுக்கத
த்தை யுண்டதன்மையென்று சொல்லும்படியா யிருந்தான்-எ-று.()

வாசநீரும்வெண்சுண்ணமு நறைமுறைவழங்கிப்
பூசுறுங்கொழிற்பூசினர் சூட்டினர்புனைந்தார்
வீசுசாமரைமிரட்டவெண் மதிக்குடைநிழற்றக்
கேசவன்மணிக்கேசரித் தவிசிடைக்கிளர்ந்தான்.

வளத்தையுடைய பச்சைக்கரு
(எ-து.) வாசனையுடைய பன்னீரும், தொழிலையுடையசந்த
ப்பூரங்களும் கிரமப்படி கொடுத்துப் பூசுகின்ற சூட்டினார்கள்
னமுதலியவையுட பூசினார்கள். மலர்முதலியவைகளைச் சாமரங்களி
ஆபரண முதலியவைகளை அலங்கரித்தார்கள். வீசுகின்ற ஸ்ரீகிருஷ்ணபக
ரட்ட வெள்ளிபசந்திர வட்டக்குடை நிழலைச் செய்ய எழுந்தருளி
வான் இரத்தினங்களாற் பதிக்கப்பட்ட சிங்காசனத்தின்மேல (௮௩)
யிருந்தார்—எ-று.

ஞானகஞ்சுகவிதான்வாழ் மனையினயகனும்
போனகம்பரிவுடனுகர்ந் திருந்தவப்பொழுதிற்
றூனுமேருவுக்கப்புறத் தவ்வமுதருந்தப்
பானுவும்பெருங்குடதிசைப் பாவையிற்படிர்தான்

(எ-து.) தத்துவ ஞானமாகிய சீராவைத் தரித்த விதுர மகாராஜன்
வாழ்கின்ற திருமலையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அறுசுவை யுண்டியும்
அன்புடனே புசித்திருந்த சமையத்திலே தானும் மேருமலைக் கப்புற
த்தி லிருக்கின்ற அமிர்தத்தைப் புசிக்கச் சூரியனும் பெரிய மேற்றி
சைக் காலிலே மூழ்கினான்—எ-று. (அச)

கருதியந்தணர்யாவருந் தங்கடன்கழிப்பச்
சுருதியென்னும்வெஞ் சாபமேலம்புகைதொடுத்துப்
பருதிதன்பெரும்பகைவர் மேல்விடுத்தலிற்பார்த்த
குருதிபாயெனநிவந்தெழச் சிவந்ததுகுடபால.

(எ-து.) அப்போது பிராமணர்களெல்லாரும் பலபொழுதிலேதா
ங்கள்செய்யும் மாலைக்கடனைக் கழிக்க நினைத்து வேதமென்கிறவெவ்
விய வில்லின்மேல் நீராகிய பாணத்தைக் கையாற்றொடுத்துச் சூரியனு
டைய பெரிய சத்துருக்களின் மேல் விட்டபடியால் பாவிய உதிரமெ
ன்று சொல்லும்படிமிகவுஞ் சிவந்தது மேற்றிசை—எ-று. (அரு)

தரங்கவாரிதிப்புறத்தெதிர் மலைந்தசெஞ்சமரி
றாங்கொள்கூர்நெடும் படைகளாலவுணர்தமுடலிற்
றுரங்கமேழுடைக்கடவுளு நிரைநிரைதுணித்த
கரங்கள்போன்றன கரைதொறும்வளர்துகிர்க்காடு.

(எ-து.) அலைகளையுடைய சமுத்திரத்துக் கப்புறத்தெதிரேபோகின்
ற வெவ்வியயுத்தத்திலே வலிமையைக்கொண்ட கூர்மைபொருந்திய
நெடிய ஆயுதங்களால் அவுணர்களுடைய தேகத்திலேழுகுதிரையுடை
யசூரியனும் வரிசைவரிசையாகத் துணித்த கைகள்போலுமிருந்தன
கரைகடோறும் வளர்கின்ற பவளக்காடு—எ-று. (அசு)

நீதியிற்புகல்பகலெலா நீரமகளிர்
மீதுறைக்கெழும்வெவ்வியிற் படாவகைவிரித்துப்
போதுபுக்கதெனறினம்படச் சுருக்கியபூம்பட்
டாதபத்திரம்போன்றன தாமரையடவி.

(எ-து.) நீதியினாற் சொல்லுகின்ற பகற்பொழு தெல்லாம் நீரமக
ளிர்கள் தங்கள் மேலேபட்டு விழுகின்ற வெவ்வியவெய்யில படாத
விதம விரித்தப்பொழுது போயிறதென்று ஒன்றாகச் சுருக்கிய அழகி
யபட்டுக்குடைகள் போன்றன அங்கேமலர்ந்த தாமரைக்காடு-எ-று. ()

கலந்துமங்கலமுழவுவெண் சங்கெனக்கறங்க
மிலைந்தபூங்குழல்வனிதையர் மெய்விளக்கெடுப்ப
கலந்ததாமரைத்தடமெலாங் குவிந்ததுகண்டு
மலர்ந்ததாமரைபோன்றது மாநகர்வட்டம்.

(எ-து.) மங்கலப்பேரிகைகள் வெள்ளிய சங்கங்களோடேகூடிச்ச ப்திக்க மலர்மாலைகளைத் தரித்த கூந்தலையுடைய மங்கையர்கள் தடாக ங்களனைத்தினும் மிகுந்ததைக்கண்டு மலர்ந்திருக்கின்ற தாமரை மல ரை யொத்த பெரிய அஸ்தினாபுரத்தினுடையவட்டம்—எ-று. (அஅ)

உரகவுங்கவனமணிமுடி யொப்பனதீப
மருமருங்கினுமாயிர மாயிரமேந்த
வரிசுமந்தபேராசனத் தழகுடனிருந்த
புரவலன்றனைப்புண்ணிய விதுரனும் போற்றி.

(எ-து.) ஆதிசேஷனுடைய ஆயிரமணிமுடிகளை யொப்பனவாகதீ பங்களை இரண்டு பக்கத்திலு மிரண்டாயிர மேந்தச் சிங்கத்தினாற்சும த்தப்பட்ட பெரிய ஆசனத்திலே அழகுடன் எழுந்தருளியிருந்தகிரு ஷ்ண பகவானை புண்ணியத்தையுடைய விதுரமகாராசனும் வணங்கி—எ-று. (அகூ)

பொங்கராவணைபொலிவறப் போந்துபின்போதுவர்
தங்கள்பாடியில்வளர்ந்துமா மருதிடைத்தவழ்ந்து
கங்கைமாநதிகால்வழி கருணையங்கடலே
யிங்குநீதனித்தெழுந்தவா றுரைத்தருளென்றான்.

(எ-து.) பொலிவினையுடைய சேஷசயனமானது பொலிவுநீங்கவந் து பின்பு ஆயர்பாடியில் வளர்ந்து மகத்தாகிய மருதமரத்திடற்றவழ் ந்து கங்காநதி திருவடியிலே பெருகப்பெற்ற கிருபைக்கடலே இவ்வி டத்திலே நீர் தனித்தெழுந் தருளியவாறு அனுக்கிரகம் பண்ணுமெ ன்றான் விதுரன்—எ-று. (கூ0)

தோட்டுவந்துசெந்தேனுகர் சுரும்புசூழ்தொடையாய்க்
காட்டுவந்துமுன்றிரிந்துதங் கடவநாள்கழித்து
நாட்டுவந்தவைவர்க்குநான் குருநாடு
கேட்டுவந்தனனென்றனன் விதுரனுங்கேட்டான்.

(எ-து.) பூவிதழிலே வந்து சிவந்த தேனைப் புசிக்கின்ற வண்டுகள் சூழ்ந்த மாலையையுடைய விதுரனே காட்டிலே முன்னே சந்தோஷமா ய்த் திரிந்து உங்களுக்குச் சொல்லவேண்டிய நாளைக் கழித்துநாட்டி லே வந்திருக்கிற பஞ்சபாண்டவர்களுக்கு நல்ல குருநாட்டைக் கேட் கு வந்தோமென்று அருளிச்செய்தார் அதைவிதுரனுங்கேட்டான். ()

முழக்கினுமுயர்முரசுயர்த் தவன்றனக்குரிமை
வழக்கினலறித்தடலர வுயர்த்தகோன்வழங்கான்
சழக்கினலிருதிசையினு முரசெமச்சமரி
லுழக்கினலலதுணர்வனே வென்றவனுரைத்தான்.

(எ-து.) சத்தத்திலுயர்ந்த முரசக்கொடியுயர்த்த தருமபுத்திரமகாராசனுக்குத் தாய்பாகத்தை முன்னோர்கள் வழக்கத்தினுலறிந்து வலிமையுள்ள சர்ப்பக்கொடி யுயர்த்த துரியோதனன் கொடுக்கமாட்டான்—எ-று. (கூஉ)

வாளைவாவியிலுகண்டெழ வளரிளங்கமுகின்
வாளைவாகனிமுரன்றெழும் பழனநாடுடையான்
நாளைவாழ்பவர்க்களித்திலனெனிலெதிர்நடந்து
மூளைவாய்புகமுடிப்பமெய்யெனமொழிந்தான்

(எ-து) வாளைமீன்கள் தடாகத்தில் குதித்தெழும்ப வளருகின்ற இளங்கமுகின் பாளையிலிருக்கின்ற வண்டுகள் சிதறி அழுகின்றவயல்கள்சூழ்ந்த நாட்டையுடைய துரியோதனன் நாளை அவர்கள்வாழ்வாகிய பங்கைக்கொடாமற்போனானேயானால்எதிர்போய் மூளையானது வாயிலே புகும்படி யுத்தஞ்செய்து முடிப்போமென்றார் ஸ்ரீகிருஷ்ண பகவான்—எ-று. (கூங)

விரைந்துபாய்பரிமன்னவ ரிதம்படமெலிவா
றிரந்துவேண்டினுங்கிளைஞருக் கொருபொருளீயார்
பரந்தபோரினிலெதிர்த்தவர் படபடப்பகழி
துரந்தபோதவர்க்குதவுவர் சொன்னவையெல்லாம்.

(எ-து.) சீக்கிரத்திலே தாவுகின்ற குதிரைகளையுடைய அரசர்கள் இதமுண்டாகும்படி வாடி இரந்து வேண்டிக்கொண்டாலும்பந்துக்களுக்கு ஒருபொருளையுங் கொடுக்கமாட்டார்கள்பரவியயுத்தத்திலே எதிர்த்தவர்களெல்லாம் சாகும்படி பாணங்களைப் பிரயோகம் பண்ணின மாத்திரத்திலே சொன்னவைகளை யெல்லாம் அவர்களுக்குக்கொடுப்பார்கள்—எ-று. (கூச)

என்றுபாரினியற்கையும் விதுரனுக்கியம்பி
வென்றபோர்கெழுநேமியான் விடைகொடுத்தருளி
குன்றபோர்புயக்காவலர் கொடுந்துயர்மறக்க
மன்றனுமலர்ப்பாயலின் மீதுகண்வளர்ந்தான்.

(எ-து.) இப்படியென்று உலகத்திலுண்டான இயற்கையும் விதுராசனுக்குச் சொல்லி யுத்தகளத்திலே ஜெயித்து விளங்கிய சக்கரத்தையுடைய கிருஷ்ணபகவான் செலவுகொடுத்து மலைபோலுந் தோளையுடையகாவலர்கள் பறைகளை முழக்க வாசனைபொருந்திய அன்றலர்ந்த புஷ்பசயனத்தின்மேல் நித்திரைசெய்தார்—எ-று. (கூரு)

குளிருமாமதிமுகத்தொளி குமுதலால்முல்லைத்
தளவவாணகைபரப்பியே சததளமலர்க்கை

ஸ்ரீகிருஷ்ணசுவாமி தூது.

பளவிலேகுவித் தளியொடுமகன்றிலாமையினால்
களிகொடோள்விலைக் கணிகையைப்போன்றதக்கங்குல்.

எ-து, குளிருகின்ற பெரியசந்திரனாகிய முகத்தினிடத்தே விளங்
குகின்ற செவ்வல்லியாகிய வாயையும் முல்லையரும்பாகிய ஒளியையுடை
டைய பற்களையுங்காட்டித் தாமரைமலராகிய கைகளையளவாக்குவித்து
அளியுடனே மலர்ந்திராமையினாலே களிப்பைக்கொண்ட தோளைவிற் ௯௬
கின்ற வேசியைப்போன்றது அந்தராத்திரி-எ-று,

அளைந்தவாரிருட் கடல்பொருதொருபடையண்டம்
பிளந்ததாமெனக் கரும்படாயபீறியதென்ன
வளைந்தவேழ்கடல வற்றமேலவடவையின்முகத்தீ
கிளர்ந்ததாமெனக் கிளர்ந்தனவிரவியின்கிரணம்.

எ-து, அளையப்பெற்ற நிறைந்தவிருளாகிய சமுத்திரத்தைத்தாங்
காட்டாமல் ஒருபக்கத்து அண்டம் பிளந்ததாமென்று சொல்லவும்
கரியவஸ்திரங்கள் கிழிந்தவென்னவும் வளைந்திருக்கின்ற ஏழுசமுத்தி
ரமும் வற்றிப்போக மேலிருக்கின்ற வடவாமுகாக்கினி பிரகாசித்ததெ ௯௭
ன்றுசொல்லவும் விளங்கின சூரியகிரணம்-எ-று,

இகலுமவாளர வுயர்த்தவனிருந்ததொல்பதியி
லகிலநாயகனொருதனிநடந்தவாறறிந்து
மகரவாரிதி யகன்றமாமருங்குறவளைந்த
திகிரிபோல்வந் தெழுந்தனனிரவிகீழ்த்திசையில்.

எ-து, பகைகொண்ட ஒளியையுடைய சர்ப்பக்கொடியையுயர்த்த
துரியோதனனிருந்த பழைய அஸ்தினாபுரத்திலே லோகநாயகனாகிய
ஒப்பற்ற கிருஷ்ணபகவான் தனியேவந்ததுதெரிந்து மகரமீனையுடைய
சமுத்திரத்தைவிட்டுநீங்கிப் பக்கத்திலேவளைந்த சக்கரத்தைப்போல ௯௮
வந்து உதயமானான் சூரியன் கீழ்த்திசையில்-எ-று,

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சோதிவானநதிமைந்தனும்பழையசுருதியாலுயர்துரோணனும்
ஆதியாகவுயர்ராஜரும்படி யடுத்தமன்னவரனேகரும்
நீதியாறுவகையைந்துபத்தொ டறுபத்தொராயிரவர்நிருபரும்
தீதிலாததிலக்குரோணிபதி னொன்றுபெற்றமிகுசேனையும்.

எ-து, ஒளியையுடைய கங்காபுத்திரனாகிய வீஷ்மாச்சாரியரும்
பழமையாயுள்ள வேதத்தாலுயர்ந்த துரோணாச்சாரியார் முதலாகவுயர்
ந்த ராஜாக்களும் பூமியையாளுகின்ற அநேகராஜாக்களும நீதியையு
டைய மூன்றுலட்சத்து அறுபத்தோராயிரம் நிருபர்களும குற்றமற்ற
வலியினையுடைய பதினொருஅக்குரோணியாகிய மிகுந்தசேனைகளும்-எ-று,

தொககவெண்கவரியாலவட்டமிவை சொட்டவாள்சரிகைதுகிலுடன
கைக்கலாஞ்சிடம்கொண்டிலாவிவரு கன்னிமங்கையர்களனைவரும

மிக்கவேதியர்கள்வல்லபல்கலைவி தத்திலுள்ளவர்கள்யாவரும்
தக்கதம்பியரும்வந்துசூழவுபர் தரணிமேனிருபர்தம்பிரான.

எ-து, கூட்டமாயுள்ள வெள்ளியசாமரங்களும் ஆலவட்டங்களும் வளைதடியும் வாளும் உடைவாளும் வஸ்திரங்களும் கைகளிலே காஞ்சிகள்கொண்டு உலாவிவருகின்ற இளமையான மங்கையர்களனேகம்பேரும மிகுந்த பிராமணர்களும் அனேக கலைக்ஞானங்களிலே வல்லமையுடையவர்கள் யாவர்களும் தகுதியுள்ள தம்பிமார்களும் வந்து சூழ்ந்துகொண்டிருக்க உயர்ந்த பூமியிலே அரசர்க்கரசனாகிய துரியோதனன்-எ-று, ௱

நிரைகதிர்க்கனகநீள்சுவர்ப்பவள வுத்தரத்தினாவிரைத்தவெண்
பருமணிக்கிரணபற்பராகவயி ரத்துலாமிசைபரப்பிவெண்
டரளவர்க்கவயிடூரியப்புதிப கோமளப்பலகைதைத்துமா
மரகதக்கிறொடுகோடிதூணிடை யமைத்தமண்டபமருங்கரோ.

எ-து, வரிசையாகிய கிரணங்களையுடைய பொன்னினாற்செய்த நெடியசுவரின்மேல் பவளத்தினால் உத்தரம்போட்டு அதன்மேல் வரிசையாகப் பரப்பிய விளக்கமான பருத்த ரத்தினங்களாலும் கிரணங்களையுடைய மாணிக்கங்களாலும் வச்சிரங்களாலும் ஆகிய துலாம்வைத்து அதன்மேலே வெள்ளியமுத்துவர்க்கங்களைப் பரப்பி வைடூரியத்தால் பதியனவாகிய அழகையுடைய பலகைதைத்து மகத்தாகிய மரகதத்தினாலே கோடிதூண்களை இடையிலே அமைத்த மண்டபத்தினருகில்-எ-று, ௱க

முட்டநித்திலமினொத்தபந்தரி னகைத்தசிரமுகத்ததாய்
வட்டமெத்தைகொடமைத்தபீடமிசை வாசவன்கெனவிகினான்
பட்டவர்த்தனருமகுடவர்த்தனரும வந்துசேவடிபணிந்தபின்
இட்டபொற்றவிசின்முறைமையாலினி திருக்கவென்றவனையேவியே.

எ-து, முட்டும்படியாய் முத்தினால் வரிசையாகச்செய்த பந்தரில் நகுதலைசெய்த சிறந்த சிங்கமுகத்தையுடையதாய் வட்டமாகிய மெத்தையைக்கொண்டு செய்த பீடத்தின்மேல இந்திரனைப்போல விருந்தான் அப்போது பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களும் சிவந்த பாதத்தைவணங்கினார்கள் பின்பு வரிசையாயிட்டிருக்கின்ற பொன்னாற்செய்த ஆசனத்தின்மேல் கிரமப்படி இனிதாகவிருக்கக்கடவீரென்று அவரையேவுதல்செய்தான்-எ-று, ௱உ

காவன்மன்னவர்முகங்கடோறுமிழி கண்பரப்பியமர்கருதுவோர்
ஏவலின்கணவருதூதனுமிடைய னின்றநம்மையவயிலெய்தினால்
ஒவலின்றியெதிர்சென்றுகண்டுதொழு தறவுசாவினியுங்களூர்
தீவனுஞ்செயவடாற்பனென்றானி சிறினன்முறைமைமாறினான்.

எ-து, பூமியைக்காக்கின்ற ராஜாக்களுடைய முகங்களையெல்லாம்
தன்னுடைய இரண்டுகண்களாற்பாராதது கடமோடு யுத்தஞ்செய்யநி
னைக்கும் பஞ்சபாண்டவர்களுடைய ஏவுகையினாலே வருகின்ற தூத
னாகிய இடையன் இன்று நம்முடையசபையிலேவந்தால் ஒழிதலில்லா
மல் எதிர்கொண்டுவணங்கி யுறவுகொண்டாடினால் இனி உங்களுடைய
செருப்பு வலக்கொள்ளும்படியாய்க் கொளுத்திவிடுவேனென்று மிகவு ௱௩
ஞ்சீறினன முறைமைமாறினவனாகிய துரியோதனனை-எ-று,

இந்தவண்ணமுரைசெய்துமன்னரு மிராசராசனுமிருக்கவே
தந்தவண்ணனுடன்வந்தவண்ணலொளி தக்குகண்டுயிலுணர்ந்தபின்
கந்தவண்ணமலர்கொண்டுகைதொழுது காலையிற்பலகடன்கழித்
திந்தவண்ணமுனிருந்தபேரவையி லேறுனிசைகொள்வேயினன்.

எ-து, இங்கட்பிரகாரஞ்சொல்லி அரசர்களும் அரசர்க்கரசனாகி
யதுரியோதனனுமிருக்க வெள்ளைமேனியனாகிய பலபத்திரருடனேபி
றந்த கிருஷ்ணபகவான் பிரகாசந்தங்கிய நித்திரைதெளிந்தபின்பு வாச
னைபொருந்திய அழகியமலர்களைக்கொண்டு பூசைசெய்து காலையிலே
செய்யவேண்டிய கடன்களெல்லாஞ்செய்து முடித்து முன்சொன்ன
பிரகாசமிருந்த பெரியசபைக்கு எழுந்தருளினார் இசைடைக்கொண்ட ௱௪
மூங்கிற்குழலையுடைய கிருஷ்ணபகவான்-எ-று,

துன்னுகங்கைமகனுந்துரோணனொடு சுதனுநீதியுனைவிதுரனும்
மன்னர்மன்னனையொழிந்தமன்னவரும் வந்துசேவடிவணங்கினர்
கன்னனுந்தலைகவிழ்திருந்தன னழன்றுளஞ்சகுனிகருதினன்
முன்னநின்றவர்களிட்டபீடமிசை மொய்துழாய்முகிலுமெய்தினன்,

எ-து, அச்சபையிலிருந்த வீஷ்மாச்சாரியரும் துரோணாச்சாரி
யரும் அசுவத்தாமாவும் நீதியைத்தரித்த விதுரராசனுந் துரியோதன
ன் ஒழிந்த மற்றஅரசர்களும்வந்து சிவந்தபாதத்தை வணங்கினார்கள்
அப்போது கர்னராசனும தலையைக்கவிழ்ந்துக்கொண்டிருந்தான் சகு
னி யுளமகிழ்ந்து வெப்பமாய் நினைந்திருந்தான் எதிரேயிருந்தவர்கள்
இட்ட ஆசனத்தின்மேல் நெருக்கிய துளபமாலையையணிந்த மேகவ ௱௫
ண்ணனாகிய கிருஷ்ணபகவா னெழுந்தருளியிருந்தா-எ-று,

முன்னகங்குடைகவிந்தகாளமுகின் முன்னிருந்தபின்முசங்கொடா
தென்னைகந்தனையொழித்துநென்னலிடை யிந்தமாநகரிலெய்தியும்
பொன்னசல்கொயுள்விதுரனில்லிடை புகுந்ததென்கொலிதுபுகலெனு
பன்னகந்தனையுயர்த்தகோவுமுறை யசரமாலுமெதிர்பகருவான.

எ-து, முன்னே கோவர்த்தனகிரியைக் குடையாகக்கவித்த கரிய மேகவண்ணனான கிருஷ்ணபகவானெழுந்தருளியபின்பு முகங்கொடாமல் என்வீட்டைவிட்டு நேற்றையப்பொழுது இவ்வூரில் வந்தும் வீரலட்சுமியைக்கொண்ட புயத்தையுடைய விதுரன்வீட்டிலேபோனதென்ன இதனைச்சொல்லுமென்று சர்ப்பக்கொடியையுயர்த்த துரியோதனராஜன்கேட்க கிருஷ்ணபகவான் அதற்கு எதிருத்தரம் சொல்லுவார்-எ-று. ௯௬

என்னின்னிலொருபேதமில்லையிது வென்னினின்னிலதுவென்னவே
மின்னின் முன்னிலகுவிறனெடும்படைகொள் விதுரன்வந்தெதிர்விளம்பினு, முன்னிலினைமுளதென்றுபஞ்சவருரைக்கவந்ததொருநாதனையா, னின்னிலின்னடிசிலுண்டினின்னுடன் வெறுகவெண்ணுமதுநீதியோ.

எ-து, என்வீடென்றும் உன்வீடென்றும்பேதமில்லை இது என்வீடு அது உன்வீடென்றுசொன்னாலும் மின்னல்போலப் பிரகாசிக்கின்ற வெற்றியுள்ள நெடியவில்லையுடைய விதுரராஜன்வந்து எதிரேயிருந்துசொன்னான் அதல்லாமல் என்னிடத்திலே இன்னமொருகாரியமுண்டு பஞ்சபாண்டவர்கள்சொல்லைச் சொல்லவந்த ஒருதூதன் யான் உன்னிடத்தில் இனிமையுள்ள அன்னதனையுண்டு உன்னோடேதானே வெறுக்கநினைப்பது நீதியோவென்றார் கிருஷ்ணபகவான்-எ-று, ௯௭

அரவமல்கியபதாகையாய்மதி யமைச்சராயரசழிப்பினுங்
குரவர்சொல்லுமாமறக்கினும்பிறர் புரிந்தநன்றியதுகொல்லினும
ஒருவர்வாழ்மனைவிலுண்டுபின்னுமவருடனழனறபொரவுன்னினு
மிரவியுள்ளளவுமதியமுள்ளளவு மிவர்களேநரகிலெய்துவார்.

எ-து, சர்ப்பக்கொடியையுடைய துரியோதனனே புத்தியையுடைய மந்திரிகளாயிருந்து இராசாங்கத்தை யழித்தாலும் ஆசிரியர் சொல்லைத் தடுத்தாலும் ஒருவர்செய்த உபகாரத்தை மறந்தாலும் ஒருவர்விட்டிற்சாப்பிட்டு பிறகு அவருடன் பகைத்து யுத்தஞ்செய்தாலும் சூரியசந்திரர்களுள்ளவரைக்கும இவர்கள் நரகத்திலடைவார்கள்-

ஓதநாண்மலர்மடந்தைகேள்வனிவை செப்பவுஞ்செரியதொப்பிலா
நாதநாயகன்முகத்தில்வைத்தவிரு நயனனுஞ்சிமிசகைசெயாத்
நாதனுஞ்சிறுகன்மைசொல்லுகென மன்னர்மன்னனிதுசொன்னபின்
வேதமலருந்திவண்டுளப விரைசெய்தாரவனுமுனைசெய்தான்.

எ-து, குளிர்ச்சிபொருந்திய அன்றலர்ந்த தாமரைமலரிலிருக்கும் இலட்சுமிகரங்கராகிய கிருஷ்ணபகவான் இந்த வார்த்தைகளைச் சொன்னமாத்திரத்தில் ஒப்பில்லாத நாயகராகிய நாதனுடைய திருமுகத்திலவைத்த இரண்டுகைகளையுடையவனாகி மிகவும்நகைசெய்து தூதனாய்வந்த காரியத்தைச் சொல்லுமென்று துரியோதனனசொன்னபின்ன வேதங்கள்மணக்கின்ற தாமரைமலராகிய நாபியையும் வாசனைவீசுகின்ற துளபமாலையையுமுடைய கிருஷ்ணபகவான அருளிச்செய்தார்-

சூதினாலரசிழந்துநின் றுணைவர் சொன்னசொல்லும்வழுவாதுபோ
யேதிலாகவெனநொந்துதன்னிழ லிழந்தகானினிடையெய்துமே
தீதிலாவகைகுறித்தநாள்பல கழித்துவந்தனர்செகந்தனிற்
கோதிலாதகுருகுலமகிபர்தம துரிமைநண்பொடுகொடுத்தியே.

எ-து, உன் துணைவராகிய பஞ்சபாண்டவர்கள் சூதாடுகையினாலே இராச்சியபாரத்தையிழந்து சொன்னவார்த்தையும் தப்பாமற்போய் அயலானென்றும் சொல்லும்படி நொந்து குளிர்ந்தநிழலில்லாதகாட்டினிடத்தேபோயுக் குற்றமில்லாதபடி குறித்தநாளனேகமும் கழித்துவந்தார்கள் பூமியிலே குற்றமற்ற குருகுலத்திலேபிறந்தராசனே அவர்களுடைய உரியபூமியை சினேகத்தோடு கொடுப்பாயென்று பின்னுஞ்சொல்வார் கிருஷ்ணபகவான்-எ-று,

சொல்லவாவுரகதுவசநின் னுரிய துணைவர்தங்களையழைத்துநீ
வல்லவாறுசிலநாடளித்தவர்க ளுடனுடன்கெழுமிவாழ்தியேல்
வாய்மைநிலையுடையதென்றரசர் நாடொறும்புகழ்வாரன்புகொண்
டல்லவாமெனமறுத்தியேலறமு மாண்மையும்புகழுமல்லவே.

எ-து, சொல்லவிரும்புகின்ற சர்ப்பக்கொடிபடைத்த துரியோதனமகாராசாவே உனக்கு உரிமையுள்ள வுடன்பிறந்தவர்களை அழைத்து கூடியமட்டில் நீ சில நாடுகொடுத்து அவர்களுடன்கூடி வாழ்வையேயானால் நல்ல சத்தியத்தையும் நிலைமையையுமுடையானென்று ராசாக்கள் சினேகித்து நாள்தோறும் புகழ்ச்சிசெய்வார்கள் அப்படியல்லவென்றுதாராயேயானால் அது தருமமுமசௌரியமும்கீர்த்தியுமல்ல-

என்றுகேசவனிடம்பவங் கெதிரிராசனுமியம்புவா
னன்றுசூதுபொருதுரிமையாவையு மிழந்துபோயினர்களைவருக்
கின்றுநீவிரகின்மீளவுங்கவர வெண்ணினாலவரிலெளியனோ
சென்றுகானினவரின்னமுந்திரிவது றுதியென்றுநனிசீறியே.

எ-து, இப்படியென்று கிருஷ்ணபகவான்சொல்ல அங்கே எதிரில் இராஜாதிராஜனாகிய துரியோதனராஜன் சொல்லுவான் அன்று

ருகாடித் தக்கனுரிமையெல்லாமிழந்துபோனவர்களாகிய பஞ்சபாண்டவர்களுக்கு இன்று நீர் உபாயத்தினாலே மறுபடியுங் கிரகிக்கவினைத்தால் அவர்களைப்போல நானும் எளியவனோ அவர்கள் காட்டுக்குப் போய் இனைமுந்திரிவது உறுதியென்று மிகவுஞ்சீறி-எ-று, ௱௰௨

நீவெறுக்கிலெனிருந்தமன்னவர் திகைக்கிலென்பரிகினைக்கலென்
போய்நகைக்கிலென்னுரைத்த வுண்மைமொழிபொய்த்ததென் றமரர்புகலிலென்,
வேய்மலர்ந்ததொடையலைவரொடுடன் வெறுத்துவெவ்வஞ்சமர்விளைக்கிலென்,
ஈயிருக்குமிடமெனினுமிப்புவியில் யானவர்க்கரசினிக்கொடேன.

எ-து, நீவெறுத்தாலென்ன இந்தராஜாக்கள் திகைத்தாலென்ன பலவாறாக நினைந்தாலென்ன போயச்சிரித்தாலென்ன சொல்லிய சத்தியவசனம் பொய்த்துப்போனதென்று தேவர்கள்சொன்னாலென்ன புட்பமாலையைத்தரிக்கின்ற பஞ்சபாண்டவர்கள் என்னுடனே வெறுத்து வெவ்வியயுத்தஞ் செய்தாலென்ன ஈயிருக்குமிடமானாலும் இந்த பூமியிலே யான அவர்களுக்கு அரசாட்சி கொடுக்கமாட்டேனென்றான் துரியோதனன்-எ-று, ௧௧௩

கார்வழங்குமெனவெஞ்சினத்தினொடு கண்ணிலான்மதலைகழறவும்
பார்வழங்கநினைப்பிலையாகிலவர் பதிகளாயினுமவழங்குவாய்
தார்வழங்குதடமார்பவெனனவவை தாமுமனைவனமறுக்கவந்
தூர்வழங்குகெனவுந்திரந்தனிவ் வுலகெலாமுதவுமுந்தியான.

எ-து, மேகம்முழங்குகின்ற இடியைப்போல கோபத்தோடு திருதராட்டிரனுடைய பிள்ளையாகிய துரியோதனன் சொன்னபோது பூமியைக்கொடுக்க உனக்கு மனமில்லாமற்போனால் அவர்களூர்களையாவது கொடுப்பாய் நந்தியாவர்த்தமாலையணிந்த மார்பனேயென்று சொல்ல அவைகளையுந் துரியோதனன மறுக்க ஐந்தூராவது கொடுப்பாயென்று இரந்துகேட்டார் இந்த வுலகத்தையெல்லாந் தரப்பட்ட நாபிக்கமலத்தையுடைய கிருஷ்ணபகவானை-எ-று, ௧௧௪

மாடளிக்குலநெருக்குபைந்துளப மாலையாய்மகரவேலைசூழ்
நாடளித்திடவுமைந்துபேருடைய நகரளித்திடவும்வேண்டுமோ
காடளிக்கவனிடைதெரிந்துதொழில் கரந்துபோயினர்கள்காணவோ
வீடளிக்கினும்வெறுப்பரோவிதனை விடுகவெனவெதிர்விளம்பினன.

எ-து, பக்கங்களிலே வண்டினக்கூட்டங்கள் நெருங்கப்பெற்ற பசிய துளபமாலையணிந்த கிருஷ்ணபகவானே மகாமீனகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த நாட்டைக்கொடுக்கவும் ஐந்துபேருடைய நகரைக்கொடுக்கவும்வேண்டுமோ நான காட்டைக்கொடுக்க அதிலேயிருந்து அக

மிழந்துபோன பஞ்சபாண்டவர்கள் இப்போது காணும்படி ஒருவீடு
கொடுத்தாலும் வெறுப்பாகளோ இதனை விடக்கடவீரென்று எதிரே
சொன்னான் துரியோதனன்-எ-று, ௧௧௫

தந்தைகாதலுறுதன்மைகண்டிளைய தாம்பயந்தவிருதம்பியர்க்
கிந்தவாழ்வுமரசுங்கொடுத்தவனு னைகுலத்தொருவனிங்குளான
முந்தமாநிலமனைத்தினுக்குமுயர் முறைமையாலுரியவாசருக்
கைந்துமாநகருநீகொடாதொழியி லென்னதாகுமுனதாசியல்,

எ-து, தன்னுடைய தகப்பனா ராசைவைத்த தன்மையைப்பார்த்
துச் சிறியதாய்பெற்ற இரண்டு தம்பிமார்களுக்கு இந்தவாழ்வும் அர
சாட்சியுங்கொடுத்த விஷ்டுமாச்சாரியரும் உன்குலத்திலே ஒருவரிங்
கேயிருக்கிறார் பழமையாயுள்ள மகத்தாகிய பூமிக்கெல்லா முயர்ந்த
முறைமையாலே உரிமைபெற்ற பாண்டவர்க்கு ஐந்து நகரமானாலும்
நீகொடாதொழிந்தாயானால் உன்னுடைய அரசாட்சி என்னபிரயோச
னத்தையுடையதாகுமென்றார் கிருஷ்ணபகவான்-எ-று, ௧௧௬

ஒருகுலத்தினிவிரண்டுமன்னவ ருடன்பிறந்துரிமையெய்தினு
மிருதிறத்தவருமொக்கவாழ்வுறுத லெக்குலத்தினுமியற்கையே
பொருகுலக்களிறுவளர்திசைக்கண் மிகுபுகழ்பரம்பவெழுபுவிபெறுங்
குருகுலத்தவரியற்கைநன்றென மொழிந்தனன்கரியமாலவன்.

எ-து, ஒருகுலத்திலிரண்டுராசர்களுடனே பிறந்து உரிமையை
யடைந்தாலிரண்டுதிறத்தோரும் ஒக்கவாழ்வையடைவது எந்தகுலத்
திற்கும் சுபாவமாகும் பொருகின்ற அஷ்டகசங்கள் வளர்ப்பட்ட திக்
குகளிடத்தில் மிகுந்த கீர்த்தியைப் பரப்பி ஏழுலோகத்தையும் பெற்ற
குருகுலத்தாருடைய இயல்பு நன்றாயிருக்கின்றதென்று சொன்னார்
நீலவண்ணரான கிருஷ்ணபகவான்-எ-று, ௧௧௭

பேரரவணைதுறந்தமாயனிவை பேசவன்பினொடுபின்னையும்
சேரராவினையுயர்த்தகோவுமவிழி தீயெழும்படிசெயிர்த்துளே
பேரராநிருபனமணிநெடுஞ்சுடிகை யாயிரங்கொடுபொருந்தபார்
வீரரானவரதல்லவோவுரிமை வேண்டுமோவெனவிளம்பினன.

எ-து, பெரியசர்ப்பத்தைவிட்டுத் துறந்த கிருஷ்ணபகவான இ
வைகளைச்சொல்ல வன்மையுடனே பின்னையுஞ் சிறந்த சர்ப்பக்கொடி
யையுயர்த்த துரியோதனனுங் கண்கள் நெருப்பென்று சொல்லும்படி
உள்ளே கோபித்து போர்செய்கின்ற சர்ப்பராசனாகிய ஆதிசேடனால்
மணிகளையுடைய நெடிய ஆயிரமுச்சியைக்கொண்டு சுமக்கப்பட்ட
பூமி சுதந்தவீரருடையதல்லவோ அவருக்கு உரிமையும்வேண்டுமோவெ
ன்றான் எ-று, ௧௧௮

பொய்வளர்த்தமொழிமன்னன மற்றிவைபுகன்றபின்புபுயவலியினு
லெவர்தங்களரசுங்கொடாமலட லாண்மைகொண்டெதிரடர்த்தியல்
மெய்விளக்கவருகுருநிலத்தினிடை வந்துவெஞ்சமர்விளைக்கவே
கைவழங்குகெனநின்றதூணினிடை யறைந்துரைக்குமினவைகாவலன

எ-து, அபத்தம்பேசுகின்ற துரியோதனன் இவைசொன்னபின்பு புசபலத்தினலே பஞ்சபாண்டவர்களுடைய இராசாங்கத்தைக்கொடாமல் மிகுந்தவலிமைகொண்டு யுத்தஞ்செய்வாயாகில் உண்மைவிளக்க வருகின்ற குருக்ஷேத்திரத்திலேவந்து வெவ்விய யுத்தஞ்செய்வதற்குச் சம்மதித்து கைதட்டிக்கொடுவென்று கிருஷ்ணபகவான்கேட்க எதிரேயிருந்த தூணிலேயறைந்து சொல்வான் துரியோதனன்-எ-று, ௧௧௯

புன்பிறப்புடையபொதுவர்தங்களொடு புறவிநாணிரைபுரந்திடு
முன்பிறப்புமுரலோடுகோவியருனைப்பிணித்ததுமறந்துநீ
யன்பிறப்பிலுயர்குருகுலத்தவர்கம் வாய்மைதானுமொருமாசிலா
என்பிறப்புமுணராமலேசபையி லிந்தவாசகமியம்பினுய்

எ-து, இழிந்தபிறப்பையுடைய இடையர்களோடு காட்டினிடத்தில் பசுக்கூட்டங்களை மேய்க்கும் முன்னுடைய பிறப்பையு மிடைச்சிகள் உம்மை யுரலோடு கட்டியதையும் நீ மறந்துவிட்டு இராசகுலத்திலே யுயர்ந்த குருகுலவரசர்களுடைய சத்தியத்தையும் ஒரு களங்கமு மில்லாத வென்னுடைய பிறப்பையுமறியாமலல்லவா சபையிலே இந்தவார்த்தைசொன்னாயென்றான் துரியோதனன்-எ-று, ௧௨௰

எவிலங்குசிலையவர்வந்தணுகில் யானமர்ந்தெளிதிருப்பனோ
கோவிலங்குபொரவஞ்சுமோகட குஞ்சரங்கள்பகைகொண்டதால்
மேவிலங்குமுனமலர்ந்தகைபறைபவேண்டுமெழிபதுநின்மேன்மையே
காவிலங்குமெனவெண்ணிலோமிகவு நன்றுநன்றரசர்நியாயமே

எ-து, பிரகாசிக்கின்ற அம்பையும் வில்லையுமுடைய பஞ்சபாண்டவர்கள் வந்தால் யானடங்கி யெளிதாகவிருப்பேனே மதம்பொழிகின்ற யானைகள் பகைகொண்டதனால் சிங்கம் பொருதற்குப் பயப்படுமோ யுத்தத்திற்கு வருவதானால் முன் கைபோட்டுக் கொடுக்கவேண்டுமென்பது உமது மேன்மையோ இப்படிகேட்டது என்னுடைய நாவானது தப்புமென்று நினைத்தோ மிகவும் நல்லது நல்லது அரசருடைய நியாயமென்றான் துரியோதனன்-எ-று, ௧௨௧

அளிவருங்குழல்பிடித்தனம னைவயின்வருக்குமுரியாளைநா
னெளிவருந்துகிலுரிந்தபோதரு கிருந்துகண்டவர்களல்லவே

துளிவரும்புனல்பருகிந் தருந்தியிடு சோறுதின்றுயிர்சுமந்துகொண்
டொளிவரும்படியிருந்தபாவியரு மின்றுமானநிலையுணர்வரோ.

எ-து. ஐந்துபேருக்குமுரியவளாகிய துரோபதியைஇராசசபையிலேவண்டுகள்மொய்க்கின்ற கூந்தலைப் பிடித்து நான் எளிதாகத் துகிலுரிக்கும்போது அருகேயிருந்துபார்த்தவர்களல்லவோ துளியாகவருகின்ற நீரைவிரும்பியுண்டு சோற்றைத்தின்று உயிரைச் சுமந்துகொண்டு பிரகாசமுண்டாகும்படியிருந்தபாவிகளாகிய பாண்டவர்களும் இன்று அபிமானநிலையையறிவார்களோ வென்றான் துரியோதனன் என்றவாறு. ௧௨௨

அன்னையானவருமிருவராமுத லளித்ததந்தையர்களைவராம்
பின்னையாசைகொடுகுருகுலத்துரிமை பெறுவராமொருபிறப்பிலா
மின்னைநாமுடியிலேவரும்பரிவி னொடுதனித்தனிவிரும்புவா லோ
ரென்னையாமவரொடொருகுலத்தரச ரெனப்படாண்மையிதுவென்கொ

எ-து. தாய்மாரிருவர்களாம்முன்னேபெற்ற பிதாக்களைந்துபேராம்பின்பு ஆசைகொண்டு குருகுலத்தாரென்னுமுறையைப் பெறுவார்களாம் ஒருபிறப்பிலுமில்லாதவளாகிய ஒருத்தியை ஆ-ஆ-ஆ-கிரீடமில்லாதஐந்துபேரும் அன்புடனே தனித்தனி யிச்சிப்பார்கள் யாம் அவரோடு ஒருகுலத்தரசர்களென்பது என்ன ஆண்மையிது என்னவென்றான் துரியோதனன்-எ-று. ௧௨௩

ஞாலமுற்றுமுடையவனுரைத்திட நகைத்தண்டுவரைநாதனு
மாலமுற்றுமிவனினைவெனப்பரி கரிந்துபோமையகன்றுபோய
கோலமுற்றசிலைவிதுரனவாழ்பெறு கோயில்சென்றுநணிதுறுகினன்
சீலமற்றவர்சிறந்தபோதுமொரு தீதிலாதவர்செயிப்பரோ.

எ-து. உலகமுழுதையு முடைய துரியோதனன் இதுசொல்லக் துவாரகைக்கு அரசராகிய ஸ்ரீகிருஷ்ணபகவானகைசெய்து அவனினைப்பெலலாம்விஷமென்று நினைத்துப்பெரியசபையை நீங்கிப்போய்அழகியவில்லையுடைய விதுரன்வாழ்கின்ற அரண்மனைக்குப்போனார்நற்குணமில்லாதவர்கள் கோபித்தபோதிலும் ஒருகுற்றமில்லாதவர்கள் கோபிப்பாரோ-எ-று ௧௨௪

கரிந்துமாலைசருகாகவும்புதிய கமலவான்முகம்வியர்க்கவுந்
திருந்துகண்ணிணைசிவக்கவுங்கொடிய செய்யவாயிதழ்துடிக்கவு
மிருந்தபோரவையினெடிதுயிர்த்திடு மிராசராசனவனுக்கிவண
விருந்துசெய்தவுறவென்கொலென்றரச ரெதிர்விதுரனைவிளம்புவான்

எ-து அப்போதுபூமாலைகள்கருகிச்சருகாகவும் புதியதாமரை மலர்போன்ற முகம்வியர்க்கவும் திருத்தமாகிய கண்களிரண்டுஞ் சிவ

க்கவும் நெடியசிவந்தவாயிதழ்கள் துடிக்கவும், தானிருந்தசபையிலேயி
கவும் பெருமூச்சுவிடுகின்ற இராசராசனாகிய துரியோதனன் அந்தஸ்ரீ
கிருஷ்ணபகவானுக்கு இவனைவிருந்துசெய்த உறவென்னவென்று அர
சர்க்கெதிரே விதுரனைப்பேசுவான் எ-று. ௧௨௫

வனபினலவனில்லவென்றெனது மனையிலுண்டிடையை மறுத்தவன்
றன்பதாதிபொடிமினிதருந்தும்வகை தனனிவின்னமுதியற்றின
னனைபிதாவொடுபிறந்துமின்றளள மென்கையோதனமருந்தியு
மன்புதானுடையனல்லனென்பகை தனக்குமுற்றபகையல்லவோ

எ-து பெருமையினாலே பூமியைச் சிரசிக்கவேண்டுமென்றுநினைந்
து என்வீட்டிலேபோசனத்தைநீக்கின ஸ்ரீகிருஷ்ணபகவான் தன்னுடை
யசேனைகளோடும் இனிதாகப் புசிக்கும்படி விதுரன் தன்வீட்டிலேஇ
னிமையுள்ள அமுதுசெய்வித்தான் என்தகப்பனோடேபிறந்தும் இன்றள
வும்அன்பில்லாதவனாயிருந்தான் எனக்குவந்தபகையாளி இவனுக்கும்
பகையாளியல்லவோவென்றான் துரியோதனன் எ-று. ௧௨௬

இம்மு கல்விநிறைந்தொருவனுடனிசைந்தபொருள் பற்றியின்புறமுய
னுமதிகமொருபொருளொருவனவேறுதரினவனையேமொழிபவ
ரிவரோ, பொதுமடைந்தையர்கனக்குமண்ணிலிது புதுமையல்லவர்
புதல்வனும், விதுரனென்றவனோடுறவுகொண்டதேவர் வியப்பையென்
சொலிவெறுப்பதே.

எ-து வேசையர்முன்னே ஒருவன்கொடுத்ததிரவியத்தைப் பற்றி
அவனுடனேஇன்பங்கொண்டுகூடினாலும் மற்றொருவன் அதிகதிரவிய
த்தைக்கொடுப்பானேயாகில் அவனைத்தவிரவேறொருவரை அறிவார்க
ளோ பூமியிலே அவர்களுக்கு இதுபுதுமையல்ல ஆகையால்அப்படிப்
பட்டவள் புத்திரனாகிய விதுரனென்றவனோடுறவுகொண்ட வதிசயத்
தைநானெனசெல்லிவெறுப்பதென்றான துரியோதனன் எ-று.

இனவாறிவனுரைத்தபோதவனெழுந்திருந்துவசையுரைத்தனை நீ
சொனவாய்குருதி சோரவாள்கொடு துளைத்துநின்முடிதுணிப்பன்
யான், மன்னரானவரில் குருகுலத்தொருவன் மைந்தனுருயிரைவெள
வினனென்னவாவவர்குலைகபபரேயெனையுரைத்தநாவுடனிருத்தியோ.

எ-து இந்தப்பிரகாரம் துரியோதனன்சொன்னபோது அந்தவிது
ரனெழுந்து என்னைக்குற்றஞ்சொன்னவாயிலே ரத்தம் ஒழுக வாளாயு
தங்கொண்டுதுளைத்து உன் தலையைவெட்டுவேன் ஆனால் அரசர்களில்
குருகுலராசனை ஒருவன்பிள்ளையுயிரைக்கொன்றானென்று தேவர்களை

யர்களே அலலாவிட்டால் என்னை வகைசொன்ன நாவுடனேயிருப்பையோவென்று பின்னுஞ்சொல்லுவான் எ-று. ௧௨௮

ஈண்டவர்க்குதவியாகு தூதெனவிசைப்பவர்க்குலகமெக்கணும்
நீண்டவர்க்குதவியாயினையெனநினைத்துநீயெனையடாத்திய
மாண்டவர்க்குதவியாயபேரறமுமிசையுமாண்மையும்வளர்த்திடும்
பாண்டவர்க்குதவியாகிலென்னைமுடிமன்னரானவர்பழிப்பரோ

எ-து எவ்விடத்திலே பஞ்சபாண்டவர்களுக்கு உதவியாகியதூதனென்றுசொல்லப்பட்டவராயும் உலகமெல்லாம் வளர்ந்தவராயுமிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு விருந்துசெய்து உபசாரமாயினேனென்றுநினைத்து என்னைநீ உதாசினம்பேசிக்கோபித்தாயே மாட்சிமையையுடைய பெரியதபோதனர்க்கும் முனிவருக்கு முதவியாகியபெரியதருமமும்கீர்த்தியும் சௌரியமும் வளர்ந்திடுகின்ற பஞ்சபாண்டவர்க்குபகாரியானால் என்னைக்கிரீடந்தரித்த அரசரானவர்கள்பழிப்பாரோ வென்று பின்னுஞ்சொல்லுவான விதுரராஜன எ-று.

சொல்லிரண்டுபகரேனினிச்சமரினின்றுவெங்கணைதொடேனென
வில்லிரண்டினுமுயர்ந்தவில்லதனை வேறிரண்டுபடவெட்டினான
மல்லிரண்டினையுமிருவராகிமுனமலைந்தகாளழகில்வந்தன
னில்லிரண்டுதினம்வைகுதற்குலகிலெண்ணிலாததவமெய்தினான

எ-து இரண்டுசொற்சொல்வேன் இனியுத்தத்திலேநின்றுவெவ்வியபாணந்தொடுத்திடேனென்று சிவன் விஷ்ணுவென்னு மிரண்டுபேர் வில்லினுமுயர்ந்த தனனுடையவில்லை இரண்டுதுண்டாகவெட்டினான முன்னாலே கஞ்சனால்விடப்பட்ட இரண்டு மல்லரையும்பலபதிரும் கிருஷ்ணபகவானுமாகவந்தவென்றமகாவிஷ்ணு தனவீட்டில் இரண்டுநாள் விருந்துண்டிருப்பதற்குஉலகத்தில்எண்ணில்லாததவத்தைபற்றிருந்த விதுரராஜன எ-று. ௧௨௯

அந்தவில்லினைமுறித்தவில்லிதனதாடலம்புகுதவச்சுதன
றந்தவில்லுமரனவில்லுமொப்பதொருதாமவில்லினைமுறிப்பதே
முந்தும்வில்லிபரிலெண்ணும்வில்லுடையவிசயனவந்தமரினமுடுகினு
லெந்தவில்லியெதிர்நிற்கவல்லனினியென்றுகாவலரிரங்கினர்.

எ-து அந்தவில்லை ஒடித்துப்போட்ட விதுரனதனனுடைய அரண்மனைக்குப்போக அப்போது மகாவிஷ்ணுவினது வில்லும உருத்திரனதுவில்லும ஒப்பதாகிய வெற்றியாலேயையணித்த வில்லைமுறிப்பதென்ன வில்வீரரில்முன்னே எண்ணத்தக்கவில்லையுடைய அர்ச்சுனனவந்து யுத்தத்திலே ஆரம்பித்தால் இனிஎந்தவில்லையுடையவன அவனை

திரேகிற்கவல்லவனென்று இரக்கினர்கள் அரசர்களெல்லாமென்றவாறு,

௧௩௧

காரணத்தும்விடு மரையெனபலகணைகளேவியவர்கருதும்வில்
வீரனைப்பழுதுரைத்தனைகயையெக்ஙனைகணியவெல்லுவாய்
பாரனைத்துமினியைவராளுமவகைபண்ணுவிக்கனையழிக்குன
பேரனைத்துமெனவுளழிந்துசில பேசினனுயர்பிரமகன.

எ-து மேகமெல்லாம்விடபபட்டதாரையைப்போலஅனேகபாண க்களைமியவியத்தஞ்செய்யும்விலலையுடைய விதுரனைபபழுதுசொனன் நீபகையை எப்படி அடங்கச்செயிப்பாய் உலகமெல்லாம இனறேறுடழிந்தெனறு மனநொந்து சிலபேச்சுக்கள்பேசினர்பீஷ்மாசாரியர்எ-று.

பிரமகனைபரிவுடனமுனிந்துசில பேசநாசமுறுபேசினன
விசாரமார்பனுயர்விதுரனலலதுவில் வல்லவீரர்பிறரில்லையோர்
வுதாரசீலனுயரங்கர்க்கானவரிவிலலானறுமேயுமுறறெழும்
பதாதியோடமரிலவரும்பட மலைந்திடப்பரணிபாடவே

எ-து இப்படி பீஷ்மாசாரிஅனபுடனேகோபித்துச் சிலவார்த்தைகள்பேசத் துரியோதனனை பார்த்து விசாலமாகிய மார்பையுடைய உயர்ந்தவிதுரனலலாமல்வில்லிலேவல்லவீரர்பிறனொருவருமிலலையோமிகுந்தெழுகினறசேனைகளாடுயுக் ததிக்லைஐவருமிறக்கும்படியுத்தஞ்செய்யவும பரணிபாடவும உதாரணகுணத்தையுடைய உயர்ந்தகாணனவில்லெனறமேபோதுமெனருன எ-று,

௧௩௩

நீயிருக்கநெடுவிற்கையாசிரியனவனிருக்கநிகரற்றவன, சேயிருக்கவிறனமனனரிப்படி திரணடிருக்கவெதிர்செனறநீள், சேயிருக்குமிதழிடையனுக்குரல்விருந்துசெய்தவனவெறுகிலென, போயிருக்கிலெனமுறிக்கலெனசிலைமலைந்நமமொடெவர்போர்செய்வார்,

எ-து பீஷமாசாரியாகிய நீயிருக்கத் துரோணசாரியரிருக்கநிகரில்லாத அவ குமாரன அசுவத்தாமாவிருக்கவெற்றியையுடையஅரசர்கள் இப்படி திரணடிருக்கநீணடமூங்கிற்குழலை வாயிலே வைததுஇசைபாடுகினறஇடையனுக்கு எதிர்கொணடுபோய் அழைத்து நல்லவிருந்திட்டவிதுரனவெறுத்தாலெனனை போயிருந்தாலெனனை வில்லையொடித்தாலெனனை வெற்றிமாலையைச்சூடி நமமோடு ஆர்போர்செயவார்களெனருன துரியோதனன எ-று.

௧௩௪

எனறுகூறவிறலங்கர்பூபதியும யாணிருக்கவிலவிசயனைச்
செனறுசீறியுயிர்கொள்ளவலலவர்கள்யாவரெனறுநனிசெப்புவீர்
கனறுலவிளவெறிந்தவளவனிவனிளமுமேகாதனிகடாவினும்
அனறுபோரினிடைகாணலாகுமெனமாடல்வெஞ்சிலையிறுமைமேய

எ-று இப்படித் துரியோதனன்சொல்லக்கேட்ட கர்ணமகாராச ன்சொல்லுவான் யாரொருவனிருக்க பகைகொள்ளும் அர்ச்சுனனை அடுத்துச்சிறிதுயிரைக்கொள்ளவல்லவர் யாரென்று சொல்லுவீர்கள் கனறினுமல விளாமபழத்தை யுதிர்க்கதிருடனுகிய கோபாலகிருஷ்ண லேயிருந்து அவனுக்குசாரதியஞ்செய்தாலும அனறாரகததில எனவில்லினுடையஆண்மையைக்காணலாமென்று பினனுஞ் சொல் லுவானஎ-று. ககூடு

அம்பரத்தவர்சினந்துசிறினுமொ ரம்பிலேயழிவர்திண்ணம்யான
வெம்பணிப்பசழியேவிடவாவியுடன மீளுவானமரிலவிசயனே
விம்பரிற்புகலவிருக்ளத்தினு மெனக்குநேரொருவருல்லையென
தும்பர்கற்பகமுநாணவண்மையிலுயர்ந்தவீரனிவையுரைசெய்தான

எ-று தேவர்கள்கோபஞ்செய்து சீறினும் ஒரு அஸ்திரத்தினு லழிந்துபோவார்கள் இதுசத்தியமாம் யான வெப்பத்தையுடையநாகா ஸ்திரத்தை யேவினனேயானல் அர்ச்சுனன் யுத்தத்திலேயுயிரோடு தி ரும்புவானோ இரண்டுதிறத்துச்சேனைகளிலும் இவவுலகத்தில் எனக் கு நிகராகியவர்க ளொருவருமில்லையென றுசொனனன் தெய்வலோகத் திலிருக்கும கற்பகவிருட்சமுமநாணும்படிகொடையினுலுயர்ந்த கர்ண மகாராசன எ-று,

திசைபனைத்தையும்வளைந்ததானவரை யிரவிவந்ததொரு திசையி ன்வாய், நிசியெனப்பொருதுவானவர்க்கரசளித்துவந்தகவிற் நீமையா ன், விசையனுக்குநிகர் நீகொலோகடவுள் வெணமதிக்குநிகர் வெள்ளி யோ, அசைவிலவிற்றெழிலும்வல்லையோவெனவோ ரசைவிலாதவன ரற்றினன்.

எ-து, எட்டுத்திசையிலுஞ்சூழ்ந்துகொண்ட அவுணர்களைச்சூரி யனுதயமாகிய திக்கிலேகெடுக்கிற இருளைப்போலயுத்தஞ் செய்துதே வர்களுக்குஅரசுகொடுத்துவந்த வெற்றியையுடைய அர்ச்சுனனுக்குநீ ஒப்போ தெய்வதன்மையுள்ள சந்திரனுக்கு சுக்கிரன ஒப்பாகுமோ அசைவிலலா வில்யுத்ததிலும் வல்லமையுடையவனேவென று ஒரு தளர்ச்சியுமில்லாத பீஷ்மாசாரியா செ லலினர் எ-று. கசுஎ

அவன்மொழிந்மொழிகன்செவிப்படலுமருகிருந்த ழுகருக்கி, யிவனுடனசிலர் பகைககிலமற்றவர்த மிசையுமாண்மையு மியம்பினுய் புவனமொனறுபட வரினுமெனறனெடு பொருவராகிலெதிர்பொரவி டாய, சிவனுமெனகணைவை யஞ்சுமெனறுநனிசிறினனிர்விசிறுவனே.

எ-து, அந்தபீஷ்மாசாரியார் சொன்னசொல்காதிலேகேட்டமாத் திரத்தில சம்பந்தியிலேயிருந்து அன்னத்தையுண்டுநீர் துரியோதனனு டன சிலபோபகைத்தால அவாகளுடைய கீர்த்தியையும் வல்லமையை யும் எடுத்துப்பேசினீர் திரிலோகத்தாரும் ஒன்ருய்க் கூடிவந்தாலும்

என்னோடியுத்தம்பண்ணுவார்களோ ஆனால்விட்டுப்பாரும் ஈசுரனும்என்னுடைய பாணத்துக்குப்பயப்படுவானென்று மிகவுஞ்சீறினான் சூரியன்புதல்வனான கர்னமகாராசன் எ-று, ௧௫௮

இரவிமைந்தனொடுகன்னைமைந்தனொருவீரவாய்மையுமுரைத்திலன்
டொரவிநிற்கிடுதமன்றுவெஞ்சமரிலென்றெழுந்தகனிபோயினான்
அரவவெங்கொடியுயர்த்தகோவுமிகவரசருக்குவிடையருளினான்
விரவுபைந்துளபமாலையானவிதுரனமனையிலுற்றதுவிளம்புவாம்.

எ-து, அப்படிசொல்லிய சூரியன்புதல்வனான கர்னனுடனே கங்காபுத்திரனான பீஷ்மாச்சாரியர் ஒருவீரவார்த்தையுஞ் சொல்லவில்லை ஏனெனில் அன்றுவெவ்விய யுத்ததில் சண்டைபண்ணும்போதுதெரிந்துகொள்ளுவோமென்றுபோனான் அப்போது சர்ப்பக்கொடியோதனனும்வலிமையுள்ள அரசர்களுக்கெல்லாஞ் செலவுகொடுத்துவிட்டான முன்புபசியதுளபமாலையணிந்த கிருஷ்ணதேவர் விதுரன் அரண்மனைக்செழுந்தருளினதைச்சொல்லுவாம்-எ-று, ௧௫௯

பொருசிலைமுறித்தவீரன் கோயிலிற்புகுந்துநேமிக்
குலைசிலைவணங்கியக்க ளிருப்பவர்குருசிநோக்கி
யருசிலையுண்டென்றிந்தவிருநிலத்தியம்புவில்லி
லொருசிலைமுறித்தசிற்ற யென்கொலோவுரைநீயென்றான்.

எ-து, விதுரமகாராசனானவனரண்மனையிற்புகுந்து சக்ராயுதத்தையுடைய கிருஷ்ணபகவானைவணங்கி அங்கேயிருக்க அவர்பார்த்து இரண்டுவிற்களுண்டென்று இந்தபெரிய பூமியிலேசொல்லப்பட்ட விற்களில் அர்ச்சுனனவில்லிருக்கஇனனொருவில்லைபொடித்தகோபத்திற்குக்காரணமயாதுசொல்லென்றார் எ-று, ௧௬௰

ஆவதுகருகானுகி லமைச்சர்சொற்கேளானுகி
விவதுகுறியானுகில் விளைவதுமுணரானுகில
காவதுகாவானுகி லவனுக்குகடந்துபோரிற்
சாவதுபழுதென்றன்றோ சகத்துளர்சாற்றுகின்றார்.

எ-து, ஒருவன் றனக்காகவேண்டிய காரியத்தை நினையானுகில்மந்திரிகள்வார்த்தையைக் கேளானுகில் கெடுவதுநினையானுகில் விளைவதையறியானுகில் நாவைக்காப்பாற்றுகினுல் அவனுக்காகப்போய்யுத்தத்திற்சாவது டழுதென்றல்லவா பூலோகத்தி லுள்ளவர்கள் சொல்லுகிறார்கள் எ-று, ௱௬௧

செல்வம்வந்துற்றகாலைத் தெய்வமுஞ்சிறிதுபேணார்
சொல்வனவறிந்துசொல்லார் சுற்றமுந்துணையுநோக்கார்
வெல்வதேநினைவதல்லால் வெம்பகைவலிதென்றெண்ணார்
வல்வினைவிளையுமோரார் மண்ணின்மேல்வாழுமாந்தர்.

எ-து, செல்வம்வந்துசேர்ந்தகாலத்தில் தெய்வத்தையுங்கொஞ்சமாவது வணங்கார் சொல்லவேண்டியதை யறிந்துசொல்லமாட்டார் பந்துவையுஞ்சிநேகரையும் பாரார்கள செய்கிறதேநினைக்கிறதல்லாமல் நமக்குப்பகைவர் வலிமையுடையவரென்று நினையார் தீவினைவிளைவதும் பாரார் பூமியிலேவாழ்கின்றமனிதரென்றான விதுரராஜன-எ-று,

நினைக்கவுந்தொழவுமட்டாநீயெழுந்தருளப்பெற்றுந்
தனக்கிதந்தகுதியென்றுதமருடன்வாழவெண்ணான்
மனக்கடுக்கனலினானான மதத்தினாலுரைத்தபுன்சொல்
எனக்கிசையாமல்யானு மிருஞ்சிலையிறுத்தேனென்றான

எ-து, நினைக்கவுந்தொழவுமெட்டாத நீரேபிரத்தியட்சத்தில்எழுந்தருளப்பெற்றிருந்தும் தனக்கிது தக்கதென்றுஞானிகளுடன வாழ்தற்காலோசியான் மனதிலிருக்குங் கோபாக்கினியையுடைய துரியோதனன் கர்வத்தாற்சொல்லிய அற்ப வார்த்தைஎனக்குப்பொருந்தாமல்யானும்பெரியவில்லையொடித்தேனென்றான விதுரராஜன எ-று,

மாயனுமகிழ்ந்துநோக்கி மாசுணமுயர்த்தகோமான
போயருஞ்சேனையோடும் போர்க்களங்குறுகும்போது
நீயவனருகினில்லா தொழிதிநின்னேயமைந்தர்
தாயமுஞ்செல்வமுற்றுந்தரணியும்பெறுவரென்றான்.

எ-து, அப்போதுகிஷ்ணபகவான்மகிழ்ந்துவிதுரனைப்பார்த்து துரியோதனன சேனையுடனே யுத்தகளத்திற்குவரும்போது நீ அவனிடத்திலில்லாமல் நீங்கினால் உன்னுடைய நேசத்தையுடைய புத்திராகிய பாண்டவர்கள்தங்கள்பங்கும் பாக்கியமும்பூமியும் பெறுவார்களென்றார் எ-று,

ஏற்றியநறுநெய்விசிறி யெந்தனமடுக்கினாலும்
காற்றுவந்துறாதபோது கங்கனலுதவாதன்றோ
நீற்றணிநிமலனாண்ட நினைகையில்வில்லிற்றதாகிற
சிற்றவேலரசனைச்சேனை தென்புலமடைதற்றிண்ணம்

௧௬

எ-து, அதிகமாகியநல்லநெய்யைவிட்டு விறகையடுக்கினாலுங் காற்றுவந்துசேராதபோது கடியஅக்கினிமூளாதல்லவா பரமசிவனுக்கு தானமாகிய உன்கையிலொடிந்ததாலே கோபத்தையுடைய வேலாயுதமேந்திய துரியோதனன்சேனைகள் யமலோகமடைவதுசத்தியம்.

பன்னியபனுவல்கேள்விப் பயனுகர்மனத்தினுளே
மன்னவன்மொழிந்ததெல்லாம் பொறுத்தியென்றருளிமாயோன்
அந்நகர்தன்னிலவண்மை யழகருளாண்மைபேசுங்
கன்னனைப்பயந்தகாதற்கன்னிதன்மனையில்புக்கான்

எ-து, பண்ணப்பட்ட நூல்களின்கேள்விபயன் அறிந்தமனமுடையவிதுரராசனைத்துரியோதனன சொல்லிய பேச்செல்லாம் பொறுக்கக்கடவையென்றுசொல்லிகிருஷ்ணபகவான் அந்நகரத்திலேகொடையையும் அருளையும் ஆண்மையையுமுடையகர்ணனைப்பெற்றஆசையுள்ளகுந்திமாதேவியினுடைய வீட்டுக்குப்போனார் எ-று, சசசு

மண்டலமதியமன்ன மாசறுமுகத்தினளுந்
திண்டிறன்மருகன்றன்னைச்சென்றெதிர்கொண்டுகண்டு
வெண்டிரைமகரவேலை விரிபுனன்முகந்துபோநறுங்
கொண்டலைமகிழ்ந்துகாணுங் குளிர்பசுந்தோகைபோன்றாள்.

எ-து, பூரணசந்திரனைப்போன்ற குற்றமற்றமுகத்தையுடைய குந்திமாதேவியும் மிகுந் வலிமையுள்ளமருமகனுகிய கிருஷணரை எதிர்கொண்டுவெள்ளிய அலைகளையும் மகரமீனகளையுமுடைய சமுத்திரத்தினது விரிந்தஜலத்தையுண்டு வருகின்றமேகத்தைமகிழ்ந்துபார்க்கின்றகுளிர்ந்த பசியமயிலையொத்தாள் எ-று, சசஎ

யானுறையில்லில்வந்த தென்னமாதவமெனநேர்ந்தி
கானுறைமைந்தர்தம்மைக் கண்டனள்போலவாகி
தேனுறைதளவினன்றன் செய்யமாமுகத்தைநோக்கி
வானுறைபுரிசைமூதூர் வந்ததென்னருளியென்றாள்.

எ-து, நானிருக்கும்படியானவீட்டிலெழுந்தருளியது என்னமகாதவமென்றுவணங்கிக் காட்டிலேயிருக்கின்ற பிள்ளைகளைக்கண்டவள் மனமகிழ்ந்து தேன்பெருகின்ற தளபமாலையணிந்த கிருஷணபகவானுடைய முகத்தைப்பார்த்து ஆகாயமளாவிய மதிலையுடைய இவ்வூருக்கு வந்தகாரியமென்ன அருளிச்செய்யுமென்றாள் குந்திமாதேவி எ-று,

நின்பெரும்புதல்வர்சொல்ல நெடும்புனனாடுவேண்டி
வன்பணியுயர்த்தகோமான் மனக்கருத்தறியவந்தன்
றெனபுலவேந்தனைவெஃகச் செருத்தொழில்புரிவனென்று
னெனபலசொல்லினுளே யெதிர்க்கவேயிசைந்தேனென்றான்.

எ-து, உனனுடையபெருமைபொருந்திய குமாரர்கள் சொல்லநெடியநீர்வளத்தையுடைய நாட்டைவேண்டித் துரியோதனனுடைய உள்ளக்கருத்தை யறியும்படிவந்தேன தெனதிசையிலிருக்கின்றகூற்றவனை உயிர்களைவிரும்பியுண்ண யுத்தஞ்செய்வதற்கு சம்மதிக்கானவனுடன பலவார்த்தைகள் பேசி என்னபிரயோசனம் நாளையுத்தஞ்செய்யும்சம்மதிப்பது வந்தேனென்றார் கிருஷணபகவான எ-று,

என்றலுக்குந்திசொல விளங்கினமெதிர்த்தபோரில்
வென்றிடுவார்களாரோ விதியினலமர்க்களத்தில்
பொன்றிடுவார்களாரோ வென்றுளம்புலர்ந்துநொந்தாள்
அன்றவடன்னைத்தேற்றி யாழிபானுரைக்லுற்றான்

எ-து, இப்படியென்று சொன்னமாத்திரத்திலே குந்திமாதேவி மிகவு மிரக்கமுள்ளவளா யெதிர்த்துசெய்கிற யுத்தத்திலே செயிப்பவர்கள் யாரோ விதியினல் யுத்தகளத்திலே யிறப்பவர்கள்யாவரோவென்று மனம் வாடிவருந்தினள் அனறு அவளுக்குத் தேறுதலைச்சொல்லி கிருஷ்ணபகவான சொல்லததொடங்கினா-எ-று, ௱௫௧

தன்மைநானுரைக்கக்கேணின் றந்தைதன்மனைவிநீயுங்
கன்னியாயிருந்துவாழுங் காலையோர்முனிவன் வந்து
சொன்னமந்திரமோரைந்தி லொன்றில்வெஞ்சுடரோன்றன்னை
முன்னினையவனுமன்று வந்துநின்முன்புநின்றான்

எ-து, உரியதன்மையொன்று நான் சொல்லக்கேட்பாயாக உன் தகப்பன்வீட்டிலே நீ கன்னியாயிருந்து வாழுங்காலத்தில் துருவாச முனிவர்வந்து அனுக்கிரகஞ்செய்த ஐந்துமந்திரங்களில் ஒருமந்திரத்தால் சூரியனைநினைத்தாய் அவனும் வந்து நினனைதிரிநின்றான-எ-று

கதிரவனருளினுலோர் கணத்திடைகாதல்கூற
மதலையங்கொருவன்றன்னைப் பயந்தபின்வடுவென்றஞ்சி
மிதவையமபேழைதன்னிற் பொதிந்துநீவிடவப்போதங்
நதியமுனைகைக்கங்கை நதியிடைப்பாடுத்ததென்றே

எ-து, இப்படிக்குவந்த சூரியனது கிருபையினலே ஒருக்ஷணத்திலே உனக்கு ஆசை அதிகரிகக அங்கே ஒருபிள்ளையைப் பெற்றபின் பு குற்றமென்றநினைத்து நீரிலேமிதக்கப்பட்ட பெட்டியிலே குழந்தையைவைத்து நீ ஆற்றிலேவிட்டாய் அப்போது அந்த ஆறு கங்கையிலேகொண்டுபோய்விட்டது-எ-று, ௱௫௨

காதநின்புதல்வன்றன்னைக் கண்ணிலாவரசனபொற்றேர்ச்
சூதனவந்தெடுத்துக்கொண்டு சுதனெனவளர்த்தகாலை
ஆதவனிவனைபாருங் கனனெனறழைக்கவென்றான
றாதையும்விசும்பிற்சொன்ன நாமமேதக்கதென்றான்

எ-து, கங்கையாற்றங்கரையிலிருந்த ஆசையுள்ள உன்பிள்ளையை திருதராட்டிரனுடைய தேர்ப்பாகன வந்தெடுத்துக்கொண்டுபோய்ப் பிள்ளையாக வளாத்தகாலையில் சூரியன் இவனை எவர்களுங் கர்ணனென்று அழையுங்களென்றுசொனனன் அவன்தகப்பனும அசரீரியாற் சொல்லிய நாமமேயிமே தகுதியானதென்று சொனனன்-எ-று, ௱௫௩

பண்புடைக்குமரன்கற்ற படைத்தொழில்பலவுங்கண்டு
நண்புடையுரிமையெல்லாம் நல்கிமாமுடியுஞ்சூட்டி

வண்பணியுடர்த்தகோமான் வாழ்வவர்களித்தான்மற்றைத்
திண்டிறற்றேர்வல்லோரி லவனையார்செயிக்கவல்லார்

எ-து, குணத்தையுடைய அந்தப்பிள்ளை கற்றிருந்த ஆயுதத்தொழிலின் அழகுமுழுதும்பார்த்து சிநேகமுடைய உரிமையையெல்லாம் கொடுத்தான் வலிமையுள்ள புரவிகள்பூட்டிய இரதங்களையுடைய அரசரில் அந்தக்கர்ணனை செயிக்கவல்லவர் யாரோவென்றார் கிருஷ்ணபகவான்-எ-று

ஆதலின்மைந்தன்றனே யருஞ்சிலைவிசயனோடும்
பகைத்தெதிர்மலைவனென்று னுறவுமற்றறியமாட்டான்
சிதையிலையத்திர விதனைநீதெளியச்செல்லிக்
கொங்கவிழ்க்கலானைக் கூட்டுகவிரைவிலென்றான்.

எ-து, உன்பிள்ளையாகிய அந்தக்கர்ணனை வில்லிலே வல்லவனாகிய அர்ச்சுனனோடு யுத்தஞ்செய்யவிருக்கிறான் தனக்குத் தம்பியென்றறியான் மனத்திலிருக்குஞ் சந்தேகந்தீர இச்செய்தியை நீ தெளியும்படி சொல்லிக் கர்ணனை சீக்கிரத்தில ஒன்றாகக் கூட்டிவைப்பாயென்றார் கிருஷ்ணபகவான்-எ-று, ௬௫

தம்பியரைந்துபேருந் தனித்தனியேவல்செய்ய
வம்பவிழலங்கலோடு மாமணிமகுடஞ்சூட்டி
உம்பர்முழுதுநீயே யாள்வாயவருகவென்று
னும்பர்காவலனையல்லையா னுனதுசொல்மறுத்தானாகில்

எ-து, தம்பிமாரைந்துபேரும் வெவ்வேறு ஏவற்பணிசெய்ய வாசனைவீசுகின்ற மாலையுடனே ரத்தினம்பதித்த முடிசூட்டிக்கொண்டு பூமிமுழுதும் நீயேயாளலாம் வாவென்றுசொன்னால் தெய்வலோகத்திலிருக்கும் பஞ்சதருவுக்குச்சமானமாகிய தியாகத்தைத்தருங் கையை யுடைய கர்ணன் உனதுசொல்லை சம்மதியானாகில்-எ-று, ௬௬

எரிமுகாருந்தக்கான பெரிக்காளகன்றுபோன
வரவினையகர்கோமா லுயுதமாகக்கொண்டான
வரிசிலைவிசயன்றன்மேல் யதுகணைதொடுக்காவண்ணம்
மொருவரம்வேண்டுமென்று னுற்றவர்குறுதிசெய்வான்.

எ-து, அக்கினிபுசிக்கும்படி காண்டாவனந் தகித்தகாலில் நீங்கி சர்ப்பத்தைக் கர்ணன் அம்பாகக்கொண்டான் வரிந்தவில்லையுடைய அர்ச்சுனன்மேல் ஒருதரமேயன்றி மறுகணைதொடுக்காதவிதம் ஒரு வரமாதிதாய் வேண்டி வாங்கிக்கொள்வாயென்றார் அந்தத்தவர்களுக்கு உறுதிசெய்யுங் கிருஷ்ணபகவான்-எ-று, ௬௭

பகைநலங்கெரியல்வெய்யோன் மகனையென்மைந்தனென்ப
தன்னிறைக்குவாதகாய கிளையுடனுறுகவொட்டேன்
பசையழுமொழிகளுகாது கொருவினைவளைத்துமீண்டு
[illegible] செய்வேன்.

எ-து, வாசமுள்ள மாலையணிந்த சூரியன்புதல்வனான கர்ணன் என்பிள்ளையென்பது அன்றேயெனக்குச்சொல்லிரானால் அந்தத்தரி போனானுடனே சேரவொட்டேன் யுத்தகளத்துக்குப்போய் உயிரை யொழிக்கும்படி யுத்தத்தைமூட்டிவிட்டுப் பின்பு இன்று எனக்குச்சொ ன்னையையனே என்னநினைத்து என்னசெய்தாயென்றாள் குந்திதேவி-

கான்பட்டசனலிற்பாயுங் கடுங்கணை விலக்கவெண்ணி
வான்பட்டரிரவித்தேரோன் மகனபடுமகவானைந்தன்
றான்பட்டுமுடியுஞ்சென்று தடாதினியிருந்தேனுகில்
யானபட்டகொடுமைகன்றென் றென்பட்டாளிரங்கிவீழ்ந்தாள்.

எ-து, காண்டாவனத்து அக்கினியிலிருந்துவந்தவேகத்தையுடை ய சர்ப்பக்கணையைவிலக்க நினைக்கேனானல சூரியன்புதல்வனாகிய கர் னன் இறந்துவிடுவான நான்போயதை விலககாமல்விடுவேனேயானல் இந்திரன்புதல்வனாகிய அர்ச்சுனன் இறந்துவிடுவான யான் படுகின்ற கொடுமை நன்றாயிருக்கிறதென்று எனனபாடுபட்டாள் இரக்கமுற் கடுக றுவிழ்ந்தாள் குந்திமாதேவி-எ-று,

சேக்குந்திடகிலுஞ்சாந்துஞ் சிந்துநீர்நதிசூழ்செல்வக்
கோக்குந்தியாசன்பாவைக் குலைந்தழுங்கொடுமைகண்டு
மீகருந்தியுரிகட்டோறும் வெண்ணெயுந்தயிருமுண்ட
வாகருந்திமலரோனையீனறு மனத்தளர்வகற்றினானே.

எ-து, சேக்கு அகில் சந்தனமுதலிய மரங்களைத் தள்ளிக்கொண் டுசெல்கின்ற நீரையுடைய சிந்துநதிசூழ்ந்த குந்திதேசத்து அரசனபு த்திரியான குந்தி குலைகுலைந்து அழுகின்ற கொடுமையைப் பார்த்து மேலேயெட்டி உரிகளிலெல்லாம் வெண்ணெயுந் தயிருமுண்ட வாயை யும் நாபிக்கமலத்தையுமுடைய கிருஷ்ணபகவான மறுபடியும் மனத் சுருப தளர்ச்சியைநீக்கினார்-எ-று,

பைவருந்தலைகளைந்து படைத்தபன்னகமேபோல
வைவருமடிதனன்றிரு வனகர்கோனமடிதனன்றே
உய்வருஞ்சமரிலாவி பொருவர்போயொருவருய்பார்
னைபருந்துயரமாற்றி நடப்பதேகருமமென்றான்.

எ-து, படத்தையுடைய ஐந்துதலைகளைப்படைத்துள்ள ஒருசர்ப் பம்போல பாண்டவர்களைவரும் இறத்தல்நல்லதோ அக்கநாகத்திற்

சதி யாகிய கர்ணனென்றுமவன் இறப்பதல்லதோ பிழைத்தற்கரியயுத்தத்திலேந்துபோகளுக்குள்ளே ஒருவர் நந்து மற்றவர்களிருக்கமாட்டார்கள் ஆகையால் நைந்து வருகின்ற துக்கத்தை நீக்கிக்கொண்டுபோவத்தகாரியமென்றார் கிருஷ்ணபகவான்-எ-று, ௪௬௧

காளமா முகிலினமேனிக் கரியநாயகனுந்தேற்றி
மீளமா வதனைமிக்க விதுரன்வாழ்மனையினெய்த
வாளமால்வரையில்வெய்யோன் குருகினைவருணன்திக்கி
னிளமால்யானைநெற்றி நிரைத்தசெந்திலதமபோன்றே.

எ-து, கரியமேகவண்ணரான கிருஷ்ணபகவானுந் தேறுதல்சொல்லி மறுபடியும் மகத்தாகிய தவத்திலேமிகுந்த விதுரனவாழ்கின்ற அரண்மனைக்குப்போக அப்போது சக்ரவாளகிரியிலே சூரியனஸ்தமானன் மேற்குத்திசையிலிருக்கின்ற பெரிய யானையினுடைய நெற்றியிலிட்ட செந்தூரப்பொட்டுப்போல-எ-று, ௪௬௨

நாற்றிசையுலகுதன்னி னான்மறையுணர்ந்தோர்யாரும்
போற்றிசைமலையன்னும் பொற்புடையணக்குவைக
மாற்றறுசெவிலாச்செம்பொன் மண்டபங்கனிலாதி
மேற்றிசைகடவுளிட்ட வெயின்மணிப்பீடமபொன்றான்.

எ-து, நான்குதிசையுள்ள உலகத்தில் வேதப்பிராமணர்கள் யாவரும போற்றுகின்ற கீர்த்தியையுடைய மாலைப்பொழுதென்னு மழகுள்ள மங்கைதானிருக்க நிகரற்ற மாற்றுள்ள செம்பொனாற்செய்த மண்டபத்தில் சூரியன் வருணனுலிட்டப்பட்ட ஒளியையுடைய இரத்தினபீடத்தையொத்தான்-எ-று, ௪௬௩

கொண்டமென்சிறைகொண்டென்னுங்கொழுநருக்கிடங்கொடா
முண்டகக்குலத்துமாதர் முகங்குவித்தூடிநிற்பக்
கண்டெதிர்கொண்டுகாதற் கயிரவக்கணிகைமாதர்
வண்டுறைநின்றுதங்கள் வாய்மலர்ந்தழைக்கலுற்றார்.

எ-து; மெல்லியசிறகைக்கொண்ட வண்டுகளென்னும் நாயகருக்கிடங்கொடாமல் தாமரைக்கூட்டமாகிய மங்கையர்கள் மலராகிய முகத்தைக்குவித்துக்கொண்டு கோபித்து நிற்கப்பார்த்து அல்லிகளாகிய தாசிகளெதிர்கொண்டு வளர்ச்சியுடைய நீர்த்துறையிலிருந்து தங்கள் வாயைத்திறந்து அழைக்கின்றார்கள்-எ-று, ௪௬௪

கானெனமலர்ந்தமுல்லை ககனமீதெழுந்ததென்ன
வானெலாமயக்குமைமை நிரைநிரைமலர்ந்ததோன்ற
வேனிலாமவிழ்வின்வைத்த வெள்ளிவெண்தும்பமென்னத்
தூநிலாமதியமவந்து குணதிசைதோன்றிற்றம்மா.

எ-து, காடெல்லாமலர்ந்த முல்லைகள் ஆகாயத்தின்மேலும் எழுந்ததென்று சொல்லும்படி அவ்வாகாயத்தில் பிரகாசம்பொருந்திய தா

ரைகள் கும்புகும்பாய்ப் பரவித்தோன்ற மன்மதனுடைய உச்சத்தில் வைத்த வெள்ளியாற்செய்த சுவேதகம்பமென்று சொல்லத்தக்க பரிசுத்தமாகிய கிரணத்தையுடைய சந்திரனானவன் கிழக்குத்திசையில் உதயமாயிற்று-எ-று, ௧௬௫

தூவியமிலவுதோன்றத் துணைவரைப்பிரிந்தோர்தங்கள்
கவியுமாம்பலும்பைங் கருவிளமலருமபோன்ற
மேவியமகளிர்கண்கள் மீனெறிபரவையேழுந்
தாவியவுழையுங்காதற் சகோரமும்போன்றமாதோ.

எ-து, பரிசுத்தமாகிய இடலையுடைய சந்திரனுதயமாகப் புருஷனைநீக்கின மங்கையருடைய கண்கள் நீலோற்பலமலரையும் அல்லிமலரையும் காக்கணமலரையும் ஒத்தன புருஷரைக்கூடிய மங்கையருடைய கண்கள் மீனைவீசுகின்ற ஏழுசமுத்திரத்தையும் தாவுகின்ற மானையும் ஆசையையுடைய சகோரப்பட்சியையும் ஒத்திருந்தன-எ-று, ௧௬௬

அரவியலல்குலாருமகிழ்நருமன்புகூற
விரவியமளிகெய்தி வீதிமாநகரமெங்கும்
பரவையினிமிர்ந்தவோதை யமர்ந்தபின்னடரிதசோவேந்த
னிரவிடைசூழ்ந்தவண்ண மினைத்தெனவியம்புகின்றாம்.

எ-து, பாம்பின்படம்போலும் நிதம்பத்தையுடைய மங்கையர்களும் புருஷர்களும் அன்புசிறந்தச் சப்பிரகூடமஞ்சத்தையடைந்து வீதிகளையுடைய பட்டணமெல்லாஞ் சமுத்திரம்போலமுழங்கு முழக்கமடங்கியபின்பு அர்த்தராத்திரியிலே துரியோதனன் ஆலோசனைசெய்தது இன்னதென்று சொல்லுவோம்-எ-று, ௧௬௭

தந்தையுந்தம்பிமாருங் கன்னனுஞ்சகுனிதானுஞ்
சிந்தையிற்றெளிந்தகல்விச் செழுமதியமைச்சர்தாமு
முந்துரவுயர்த்தகோமா னேவலான்முழுதுமெண்ணி
மந்திரமிருப்பானவந்தோர் மண்டபங்குறுகினாரே.

எ-து, தகப்பனாகிய திருதராட்டிரனும் தம்பிமார்களும் கர்ணனும் சகுனியும் மனதில்லையாராய்ந்து தெளிவாகவறிந்த கல்விநிறைந்த செழுமையுள்ள புத்தியையுடைய மந்திரிகளும் சர்ப்பக்கொடியுயர்ந்த துரியோதனராஜனேவலால் முழுதும் ஆலோசனைசெய்யும்பொருட்டு ஒருமண்டபத்திலே வந்திருந்தார்கள்-எ-று, ௧௬௮

சீதரமதிவல்லோரைச் செழுமதிக்குடையானோக்கி
பாதகவனத்திற்போன பாண்டவர்தம்மையீண்டு
மேதகவழைத்துநாடு வேண்டுமென்னெழமூட்டிய
யாதவனறனித்துவந்தா னென்செய்வதியம்புமென்றான்.

எ-து, குற்றமற்ற மந்திரிகளைச் செழுமையுள்ள சந்திரவட்டக்குடையையுடைய துரியோதனன்பார்த்துக் கொடுமையாகிய காட்டுக்குப்போன பஞ்சபாண்டவரை இங்கே மேன்மையாகவழைத்து உங்கள்

நாட்டைக் கேளுங்களென்று மூட்டிவிட்ட கோபாலகிருஷ்ணன் தனி த்துவக்கான் அதற்கு நாமென்னசெய்வது சொல்லுமென்றான்-எ-று,

பொருநும்படைமைந்தன்கூறத் தந்தையும்பொருந்தச்சொல்வா
னருமைப்புலிவலையிற்பட்டால் விடுவரோவேடரானோர்
வாரியில்வெஞ்சேனையோடும் வளைந்துநீமாயனானைக்
கரும்பொழுதகலுமுன்னே சொல்வதேகருமமென்றான்.

எ-து, யுத்தஞ்செய்கின்ற சேனைகளையுடைய துரியோதனனைக்கேட் கத் தகப்பனாகிய திருதராட்டிரனும் பொருந்தும்படிச் சொல்லுவான அருமையாகிய புலியானது வலையிலேயகப்பட்டால் வேடரானவர்கள் விட்டுவிடுவார்களோ அளவில்லாத வெவ்வியசேனையோடு வளைந்துக் கொண்டு கோபாலகிருஷ்ணனை இராத்திரியானது நீங்குமுன்னே கொ ன்றுபோடுவதே நல்லகாரியமென்றான்-எ-று, ௧௱௰

கண்ணிலானுரைத்தமாற்றங் கேட்டலுங்காவலோரின்
மண்ணிலாரிதற்குமுன்பு தூதரைவளைந்துகொன்றா
ரெண்ணிலாவிந்தவண்ண மெவ்வழிக்கேற்றதென்று
வெண்ணிலாமுறுவல்செய்து விகர்ணனுமியம்பலுற்றான்.

எ-து, கண்ணில்லாத திருதராட்டிரன் சொன்னபேச்சைக் கேட் டளவில் இராசாக்களில் பூமியின்மேலெவர்கள் இதற்குமுன்னே தூதர்க ளை வளைந்துகொன்றவர்கள் எண்ணிக்கையில்லாத இந்தவிதம் எந்த வழிக்கு ஏற்றதென்று வெள்ளியநிலாவைப்போற் சிரித்துச் சொல்லத் தொடங்கினான் விகர்ணன்-எ-று, ௧௱௧

மூத்தவரிளையோர்வேத முனிவரர்பிணியின்மிக்கோர்
தோத்திரமொழிவோர்மாதர் தூதரென்றிவரைக்கொல்லப்
பாதகமரசர்க்குவேறு பாவமற்றிதனிலில்லை
பூந்தெரிதொடையாய்பின்னு நரகினும்புகுவரென்றான்.

எ-து, மூத்தவர்கள் இளையவர்கள் வேதப்பிராமணர்கள் மிகுந்த நோயாளிகள் துதிசெய்பவர்கள் மங்கையர்கள் தூதர்களென்று சொல் லப்பட்ட இவர்களைக் கொல்லென்றால் அரசர்களுக்கு இதைவிட வே றேபாபமில்லை பூவிற்றொடுத்த மாலையணிந்த அரசனே அவர்கள் பின் னும் நரகத்திற்புகுவர்-எ-று, ௧௱௨

பழியுடைப்பகைஞரேனுந் தனபெரும்பதியில்வந்தா
லழிவுறக்கோறல்பாவ மாண்மையுமலவெம்போர்
கழிகடற்சேனைசூழக் கங்குலின்வளைக்கிட்டாலு
மெழிலுடைத்தொண்டல்வண்ண னகப்படானெவர்க்குமென்றான

எ-து, பழியையுடைய சத்துருக்களானாலுந் தன்னுடைய பெரி ய ஊரில்வந்தால் அழிவையடைய அவர்களைக் கொல்லுதல்பாவம் வலி

மையுமல்லவென்று சொல்லுவார்கள் மிகுத்தகடல்ப்போன்ற சேனைகள் சூழ இராத்திரியிலே வளைத்துக்கொண்டாலும் அழகுபொருந்தியமே கவண்ணரான ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒருவருக்கும் அகப்படமாட்டாரென் ௨௭௯
ன் விகர்ணன்-எ-று,

வெம்புயவலியானமானத விழுதுகிலுரிந்த வீரன்
தம்பியையுணிந்து சீறித் தமையனைநோக்கிச்சொல்வான்
வம்படவிழலங்கன்மார்பா மந்தணமுனைக்கலுற்று
இம்பர்பற்றியாத சொல்ல விளைகுவையழைத்ததென்றான்.

எ-து, வெவ்விய புஜபலத்தினாலே துரோபதையைத் துகிலுரிந்த துச்சாதனனானவன் தம்பியைப்பார்த்துக் கோபித்து தமையனைப்பார்த்துச் சொல்லுவான் வாசனைபொருந்திய மாலையையணிந்த மார்பனே ரகசிய பேசத்தொடங்கினால் இவ்விடத்திலே சிறியோர்களை யழைத் ௨௮௰
தது என்ன காரியமென்றான்-எ-று,

அதிரதர்முதலாயுள்ள வவனிபர்வளைந்துநிற்ப
வெதிருறுக்கிறவபூமயக்காய் வெரியினையெழக்குமூட்டி
விதுரனுமவனுஞ்சேர வெந்திடமல்லவதல்லால்
மதிபிறிதிலையாமேல் வல்வினைக்கெழுமியென்றான்.

எ-து, அதிரதர்முதலாகிய அரசர்களெல்லாரும் சூழ்ந்துநிற்க மேகத்தைப்போன்ற அரண்மனையிலே நெருப்பைமூட்டிவிட்டு விதுரனுங் கோபாலகிருஷ்ணனுஞ் சேரவெந்துபோகுமட்டி செயவல்லபல் வேறேயோசனையில்லை சீக்கிரத்திற் புறப்படுமென்றான் துச்சாதனன்

செக்கதிரெழுந்து சீறிச் செறியிருணிற்பதுண்டோ
இக்கவனிருந்தவீடு மெரியிடவேண்டுமோதான்
வெங்கணையொன்றினாலே வீழ்த்திடவென்றுமின்வேன்
என்குலிமொழியென்று கன்னனுங்கனன்றுசொன்னான்.

எ-து, சூரியன் கிரணங்களைவீசிப் புறப்பட்டானேயானால் உலகங்களைமூடிய இருளானது நிற்குமோ அவனிருக்கின்ற வீட்டிலே நெருப்புப் போடவேண்டுமோ வெவ்விய பாணமொன்றினாலே சாகும்படிச்செய்து மின்வேன் இப்பொழுதுதானே புறப்படுங்களென்று கோபித்துச் ௨௮௧
சொன்னான்-எ-று,

பதிப்பெயர்ந்தேகிடாமைப் பலகவலரக்கூடுமாகில்
விதிப்பயனென்னையகமை வெஞ்சமர்வெல்லவொட்டான்
பதிப்பெனவேறுகள்ள யாமனைமனையிற்சாலிச்
சதிப்பதிதாருமமென்று சகுனியும்பின்னுஞ்சொல்வான்.

எ-து, இங்கே ஆளைவிட்டுப்போய் நாளை நம்முடைய பகையாளிகளுடனே கூடுவானேயானால் தடுக்கக்கூடாத விதிப்பயனைப்போல நம்மை வெவ்விய யுத்தத்தில் செயிக்கவொட்டானே. ஏதே யோசிக்கவே

ண்டாமென்ன கோபாலகிருஷ்ணனை வீட்டிலேவைத்து வஞ்சிப்பதே
காரியமென்று சகுனியானவன் பின்னுஞ்சொல்லுவான்-எ-று, கஎஎ

கொல்லுவதியற்கையன்று குழிபறித்தரக்கரோடு
மல்லரையிருத்திமேலோ ராசனம்வகுத்துநாளை
யெல்லியொழ துவீழ்வித் திபலரும்விலங்குபூட்டித்
தொல்லருஞ்சிறையில்வைத்தால் தூசருக்குரிமையென்றான்.

எ-து, கொல்வது இயற்கையல்ல குழிவெட்டி இராட்சதர்களுடனே மல்லர்களையும் உள்ளேவைத்து மேலேயொரு ஆசனஞ்செய்து நாளை ராத்திரியிலேயழைத்து இருக்கவிழும்படிச்செய்து அரியவிலங்குபூட்டி சிறையிலேவைப்பது தூதருக்கு இயற்கையென்று சொன்னான் சகு
னியானவன்-எ-று, கஎஅ

மாதுலனுரைத்தமாற்ற மருகனுமிசைந்துகக்குற்
போதிடையனேகமல்லர் வருகெனப்புகன்றானும்
நீதியினிருந்ததாழ் நிலவறைசமைத்தபின்னை
ராதிநூறாயிரமம ரரக்கரையதனுள்வைத்தான்.

எ-து, மாமனாகிய சகுனிசொன்ன சொல்லுக்கு துரியோதனனு
ம் இசைந்தசேட்டு ராத்திரியிலே அநேகமல்லமாகாரச்சசாலிக்கா
னுமிருந்துகொண்டு நிலவறையுண்டாக்கி அதிலே முன்னன நூறாயிர கஎகூ
ம் அரக்கரை வைத்தான்-எ-று,

மல்லர்பப்பரவர்தம்மை மற்றதினிரட்டிவைத்தான்
வில்லுடைவீரர்தம்மை வேறதினிரட்டிவைத்தான்
பல்படைவல்லோர்தம்மை பதினமடங்கதனில்வைத்தா
னெல்லியோர்நாழிகைதனி லறிவனையழைக்கவென்றே.

எ-து, மல்லரையும் பப்பரரையும் அதற்கிரட்டிப்பு வைத்தான் வில்வீரரை அதற்கிரட்டிப்புவைத்தான் ஆயுதத்திலே வல்லவர்கள் பல பேரை அதற்கிரட்டிப்புவைத்தான் ஆயுதத்திலே வல்லவர்கள் பலபே ரை அவரிடத்துமடங்கு அதிலேவைத்தான் ராத்திரியிலே ஒரு நாழி கையில் அறிவையுடைய ஸ்ரீகிருஷ்ணதேவனை அழைக்கவேண்டுமெ
ன்றான்-எ-று, கஅ0

பெரும்பிலவறையைவேயின் பிளப்பினானிறைத்துமூடி
யரும்பெறன்மணிகளாலே ராசனமதனமேலாக்கிச்
சுரும்பமர்மாலைதூக்கித் தொழிலுடைவிதானமேற்றி
வரம்பிலாவெல்றிவேதான மாறிலாவண்ணஞ்செய்தான்.

எ-து, பெரிய பிலத்துவாரத்தினுடைய அறையை மூங்கில்பிளப்பினால் நிறைத்து மூடிவிட்டுப் பெறுதற்கரிய ரத்னங்களாலே ஒரு ஆசனம் அதன் மேலுண்டாக்கி வண்டுகள்மொய்க்கின்ற பூமாலையைத் தொங்கக்கட்டிச் சித்திரவிதானமொன்று மேலேவைத்து அநேகம்வெற்றி

வைத்கறித்த வேலையையுடைய திரியோதனன் மாறுபாடுதெரியாதவிதஞ்செய்தான் எ-று, ௧௮௨

அடியவர்மனத்திலுள்ள வாரிருட்கக்குறீர்க்கு
நெடியவனிருககவென்று நிலவரைவிககிற்செய்த
கடியவனுயறகைக்கஞ்சிக் கங்குலுங்கடிதிற்போக
படியவர்துயிலும்போகப் பரிதியுமுதயஞ்செய்தான்

எ-து, அடியவர்களுடைய மனதிலேயுள்ளநிறைந்த அஞ்ஞானவிருளை நீக்குகின்றஸ்ரீகிருஷ்ணபகவான் வேண்டுமென்றுஉபாயமாய் நிலவறைசெய்தகடியவனாகிய துரியோதனனுடைய குணத்திற்குப் பயந்து இராப்பொழுதுஞ் சீக்கிரத்திலே நீங்கிப்பூமியிலுள்ளவர்கள் நித்திரையும்நீங்கிச் சூரியனுதயஞ்செய்தான் எ-று, ௧௮௩

சிரந்தருசூடிகைகாகத் திரண்மணிபலவுஞ்சிந்தி
நிரந்தரமருவிவீழ நிறந்திகழுதயக்குன்றில்
பரந்தெழுமதுக்கள்சூழ்ந்த படரிருட் கங்குல்கண்டு
புரந்தரனகோயிலிட்ட பொங்கொளிதீபம்போன்றான்

எ-து, சற்பத்தினுடைய உச்சியிலிருக்கின்ற திரட்சியையுடைய அனேகமணிகளுஞ்சிதறி எப்போதும் அருவிகளொழுகுகின்றநிறத்தையுடைய உதயகிரியிலேபரவியெழுகின்றசூரியனெப்படி யிருக்கின்றானென்றால் இருள்சூழ்ந்த இராத்திரியைக்கண்டு இந்திரனானவன் தன் அரண்மனைக்கிட்டமிருந்த ஒளியையுடைய தீபத்தையொத்தான்

தொடர்ந்தொளிருதயராகத்தோடுறநெருங்கிமேன்மை
அடர்ந்திருபரத்தகாம னாகமவேதம்பாட
தடங்கயனமலைத்துலாவுந் தாமரைமுகமுங்காதல்
மடந்தையர்முகமுஞ்சேர மணம்பெறமலர்ந்தமாதோ.

எ-து தொடர்ச்சிகொண்டு பிரகாசிக்கின்ற உதயராகத்துடனே நெருங்கி மேலும்வண்டுகள்பரவி மன்மதனுடைய ஆகமவேதங்களைப் பாடத்தடாகத்திலே சேற்கண்டைகள் சண்டையிட்டு உலாவுகின்றதாமரைமுகையினுடைய முகமும்ஆசையையுடையமாதர்களுடையமுகமும்ஒருக்குசேரமணம்பெறும்படி மலர்ந்தன-எ-று. ௧௮௫

இருந்துயிலுணர்ந்தவேந்தர் யாவருமிரவிற்சற்றும்
வருந்துயிலாதகண்ணன் வாழ்பெருங்கோயில்புக்கார்
பெருந்துயிலனந்தபோகப் பேரணை துறந்தமாலும்
அருந்துயிலெழுந்துகாலை யருமகடன்முறையுஞ்செய்தான்

எ-து, பெரியநித்திரைநீங்கியஅரசர்களெல்லாஞ் சற்றாகிலும்நித்திரையில்லாமல் ஸ்ரீகிருஷ்ணபகவான் வாழ்கின்ற பெரிய கோயிலுக்குப் போனார்களப்போது சேஷசயனத்திலேஅரிதுயில்நீங்கியமகா விஷ்ணுவும் அரியநித்திரைநீங்கிக்காலையிற்செய்யுங்கடன்களெல்லாஞ் செய்தார்-எ-று, ௧௮௬

மாதவனிருந்தகோயில் வந்தடிவணங்கிமன்னன்
தூதுவராழியங்கைத் தேனறலேதுளபமாலே
யாதவகுலத்தோரேறே யெழுந்தருள்கென்றுநின்றெம்
மேதகவரசனென்றார் முகுந்தனும்விரைவிற்சென்றார்

எ-து, இப்படிகிருஷ்ணபகவானிருந்த அரண்மனையில் திரியோதனன்விடுத்ததூதர்கள்வந்தவர் பாதத்தில்வணங்கி சக்ராயுதத்தையுடைய அரசனே துளபமாலையணிந்த மார்பனே யாதவகுலத்தோர்க்கு ஒரு ஆணைசிங்கமே எங்களரசனுமமை யழைத்துக்கொண்டு வரச்சொன்னா ரென்றார்களதைக்கேட்டுகிருஷ்ணபகவானும்சீக்கிரத்திற்போனார்,

கந்தடுகளிற்றுவேந்தன் கண்ணிலாவரசுங்கங்கை
மைந்தனுமுதலாயுள்ள மன்னருமதிவல்லோருந்
தந்திரவரையுமேனை யிளைஞருந்தன்னைச்சூழ
விந்திரனிருக்கையென்ன கோயிலுற்றினிதிருந்தான்

எ-து, சட்டுந்தறியாடுகின்ற யானையையுடைய திரியோதனராசனானவன் திருதராட்டிரனும் பீஷ்மாசாரியர் முதலாகிய அரசர்களும்மந்திரிகளுந்தந்திரிகளும் மற்றதம்பிமார்களுந் தம்மைச்சூழ இந்திரனுடைய அரசிருக்கைபோன்ற கோயிலிலே இனிதாகவிருந்தான எ-று.

நாமவேலரசரோடு நால்வகைச்சேனையோடும்
மாமுகில்வண்ணன்வந்தா னென்றனர்வரவுகேட்டு
வீமலர்த்தொடையினானும் வேந்திரத்தவரைநோக்கித்
தாமரைத்தடங்கண்மாயன் றனையேவிடுமினென்றான்

வ-ம் அசத்தைத்தருகிற வேலாயுததையுடைய அரசர்களோடும்ரதகஜதுரகபதாதிகளாகிய நாலவகைச்சேனையோடும் மேகவண்ணராகியஸ்ரீகிருஷ்ணபகவான் வந்தாரென்று சொன்னார்கள் அதுகேட்டுபுஷ்பமாலையணிந்த துரியோதனனும் பிரம்பையுடைய சேவகரைப்பார்த்துத்தாமரைமலர்போன்ற விசாலமாகிய கண்களையுடைய அந்தகிருஷ்ணனை மாத்திரம்விடுங்களென்று சொன்னான்.

தன்பெருஞ்சேனைநிற்கத் தண்டுழாயலங்கலானு
மின்புறநகைத்துவேந்த ரிருந்தபேரவையினெய்த
மின்புனைதுவசநாக விடங்கிளர்மணத்தினும்
அன்பொடுதிகிரியானை யதனமிசையிருக்கவென்றான்

வ-ம் தன்னுடையபெரியசேனைகளெல்லா மிருக்கத்துளபமாலையணிந்தகிருஷ்ணதேவரும இன்பம்பொருந்தப் புன்சிரிப்புகொண்டு அரசர்களிருந்த பெரியசபைக்குப்போக பிரகாசமுள்ள சர்ப்பக்கொடியையும் விஷத்துக்குச்சமானமாகிய மனத்தையுமுடைய துரியோதனனும அன்புடனே கிருஷ்ணபகவானை அதன்மேலேயிருப்பீரென்றான-எ-று,

வேறு

இறைவனெழிற்கதிர்மணிகளழுத்தியதவிசினிருத்தலுமே
நெறிகெடுமெனக்கொடுவில வரையிற்புகவெடியனப்பொழுதே

மருவியெனக்குநிருபனியற்றியவிரகைமனத்துளா
முருகுசினத்தொடுமெடியதலத்துறமுடிகனத்துறவே

வ-ம ஸ்ரீகிருஷ்ணபகவான் கிரணங்களையுடையரத்னங்களைப்பதித்த ஆசனத்திலிருந்தவளவிலே நெறுநெறுவென்றுகொடிய நிலவறையிலே அதுபுக அவரப்போது கூற்றுவனென்றுசொல்லத்தக்க துரியோதனன் செய்தசூழ்ச்சியைமனதிலேயறிந்துமிகுந்தகோபத்துடனே பாதங்கள்பாதலத்திலேபொருந்த சிரசு ஆகாயத்திலேபொருந்தின-எ-று.

அஞ்சினமஞ்சினமென்று விரைந்துபரண்டர்பணிந்திடவுந்
துஞ்சினமினியெனவனபனியின்கிளை துயரமுழங்கிடவும்
வஞ்சமனங்கொடுவஞ்சகனின்றிடுவஞ்சனைகளறிந்தனு
நெஞ்சில்வெகுண்டுலகென்றுபடும்படிநின்றுநிமிர்ந்தனனே.

வ-ம் பயந்தோம்பயந்தோமென்று சீக்கிரத்திலுபாந்த தேவர்கள் வணங்கவும் இன்றுஇறந்தோமென்று சற்பக்கூட்டங்கள் துன்பப்படவும் வஞ்சகமனத்தைக்கொண்டு துரியோதனனின்று செய்தவஞ்சகம் நன்றாயிருக்கிறதென்று மனதிலேகோபித்து உலகமெல்லாமழிந்துபடும்படி நின்று உயர்ந்தார் கிருஷ்ணபகவான் கசஉ

மல்லரரக்ககுலத்தொடுபப்பரர்வாளினர்வேலினர்போர்
வில்லினரிப்படி துற்றநிலத்திரைமேவியவீரரெலாங்
சொல்லலையிடிககயர்வுற்றுயிரற்றசுடிகையதாமெனவே
கல்லெனவுட்கினர்தத்தமுடற்பலகால்கொடுதைத்திடவே

வ-ம் மல்லர்களராட்சதர்கள் பப்பரர்கள் வாளையுடையவர் வேலையுடையவர் பெருகின்றவில்லையுடையவரிப்படி பூமியிலேவெட்டியநிலவறையிலே இருந்தசுத்தவீரர்களெல்லாம் இடிக்குப்பயந்துவருத்தமடைந்து உயிரற்றிருந்த சிரசையுடைய சற்பங்களைப்போலேகலகலென்னுமோசையுடனே யஞ்சினார்கள் தங்கள்தங்கள்தேகத்திலே பலகால்களைக்கொண்டுயுதைத்தி-எ-று. கசங

அம்புதபங்கயசற்பதமுந்தலிணைச்சுழிபினையுடையே
சற்பதலந்தொறுமற்றுவிழுந்தனதற்றவெடுத்தலைபோய்
முற்பவனத்தொடுமுழக்குவந்துணிபட்டுமுடங்கியபொன்
வெற்பனநின்றனர்வெற்றுடலங்கொடுவிற்படைகொண்டவரே.

வ-ம் அழகிய தாமரைமலர்போன்ற நல்லரத்தினு வைத்ததினுல் அந்தக்குழியினிடத்திலே நாகலோகந்தோறும் அற்றுவிழுந்த தம்முடையநெடியதலைகளெல்லாமபோய் முன்வாயுபகவானபோறசெய்யமுன்றுசிகரமுந்துணிபட்டு விளங்கும்பொன்மலைபோல் நின்றார்கள் வெற்றுத்தேகமகொண்டு விற்படைகொண்டசுத்தவீரர்கள்.

மேல்வலியுற்றெதிர்விசியெழிற்கருமேகநிறத்திருமால்
கால்விசையிற்பட்டமோதலில்பொருகாமர்புயத்துணைபோய்
நீணிறத்தவிணைகாசவனசெசிரநீள்படையிற்சீற்
பாவவைதபோதனர்வலகடதக்கதிரளாசவெழித்தவரே,

வ-ம் அழகியகரியமேகவண்ணராகிய ஸ்ரீகிருஷ்ணபகவான்மேலேவ லிமைகொண்டெதிரேவீசி கால்விசையினாலே படும்படி மோதுகவின லேபொருகின்ற அழகியபுயங்களிரணடும்போய்நீலநிறத்தையுடைய அ ழகியஇந்திரனுடைய வச்சிராயுதத்தினாலேசிறகறுப்புண்டபெரியமலை களையொத்தார்கள்-எ-று. கசூடு

வெயில்விடுகைபந்தலையமளிமிசைத்துயில்வி புகர்களுந்தரியோன்
பயில்வதைத்தலினவர்களுரத்திடைபதமலர்பட்டுருவர்
மயில்கடவிக்கடவுளர்பகையைக்கதிர்மகுடமுருக்கியவேள்
அயில்கொடுகுத்தியகிடுவரை யொத்தனரயில்களெடுத்தவரே

வ-ம் ஒளியுள்ளசிரோன்மணியையுடைய ஆதிசேடன்மேல்நித்திரை செய்கிறதேவர்களுக்கரிய ஸ்ரீகிருஷ்ணபகவான உதைத்தபடியால் அவ ர்கள்மாறபிலேபாதம்பட்டுவுருவிமயில்வாகனத்தைச்செலுத்தித்தே வர்கள்பகையாகிய சூரபத்மாமுகலிய அசுரர்களைச் சங்கரித்தசுப்பிரசு வாமிவேலாயுதம்கொண்டு குத்தியநெடியகிரௌஞ்சகிரியையொத்தார்கள் வேலாயுதங்களெடுத்தவீரர்கள்-எ-று.

மின்சுடிகைப்புயகங்கள் வெருக்கொளும்வெங்கடருக்கொடியோன்
தனபதபத்மநகம்கொடெடுத்துபாவனககனத்திடலால்
முன்புவனத்திடைவந்துகவிக்கிறைமோய்கிரிணரப்புதல்போ
தென்புமலைக்குருபண்பையடித்தனரெஞ்சியப்பாரே

வ-ம் மின்றுகிறரத்தினம்விளங்கிய உச்சியையுடையசற்பங்கள் அஞ்சு கின்றவெவ்வியகருடகொடியோனாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான்நம்முடை யபாததாமரையிலிருக்கும நகத்தைக்கொண்டெடுத்து உயர்ந்தஆகாய த்திலேயெறிந்தலால் முன்காட்டிலே வந்தசுக்ரீவன வலுமையையறியச் சொன்னபோது ஸ்ரீராமருல்துந்துபி எலும்புமலை என்னபாடு பட்ட தோ அதையடுத்தார்கள் வலிமைகுறைந்தபபரர்,

மைந்துபடைத்துபர்பஞ்சவர்சொற்படிவந்தமலர்க்கழலா
லுந்தியுதைத்துடலம்புதையப் பிலமொன்றியொளித்தியலா
லந்தணன்முற்பகல்வந்த புடைக்கிடவஞ்சிகிலத்திடைவீழ்
விந்தமடொத்தனர்வனகுழியிற்றிகழ்வெங்கணரக்கருமே

வ-ம் வலிமைபடைத்துஉயர்ந்த பஞ்சபாண்டவர்சொற்படிதூதுவந் தமலற்போன்ற பாதத்தினால்தள்ளியுதைத்துதேகம்புதயப் பிலத்துவா ரத்திலேலொன்றி ஒளிந்திடும்படிசெய்தலாலே அகஸ்தியமுனிவர்முற்கா ளிலேகந்துதள்ளப்பயந்து பூமியிலேவிழுந்த கிரியையொத்தனர்கிலவ ரையிலகப்பட்டவெவ்வியகண்களையுடைய இராட்சதர்கள் எ-று

அந்தவிடத்தெறிபம்பரமொத்துடாஞ்சுழலச்சுழலக்
குந்தியுதித்தயிருண்டலற்பொற்கழல்கொண்டுசுழற்றுதலால்

முந்தமரத்க்கதக்தரமைக்கடனமுன்சுழலுச்சுழலும்
மந்தரமொத்தனற்குந்தமெடுத்தெதிர்வந்துமலைத்தலரே.

வ-ம், அங்கநிலைவரையிலேஎறிகின்ற பப்பரத்தை சுயுயர்த்துத்தேகஞ் சுழலசுழலவிருந்து உரியிலிருந்த தயிரையுண்ட ஸ்ரீகிஷ்ணபகவானைபொனைபோனறைபாதத்லைதக்கொண்டு சுழற்றுகையினாலே முன்புதேவர்களிக்கு அமுதுகொடுக்கச்சமுத்திரமானதுசுழலச்சுழலுகின்ற மந்திரகிரியையொத்தாற்கள் எறியிட்டியெடுத்து எதிரேவந்தயத்தஞ்செய்தசுத்த வீரர்கள் எ-று,

முட்டியதோல்குறுதிக்கடனமல்லலின்முட்டிகொள்பல்விரலா
னெட்டுடலம்வகிர்பட்டதினுள்விழவித்தற்செய்தோல்வினையால்
மட்டாதல்விரலுதெதிர்சொல்கவிமைக்கடலெல்லையிலே
விட்டெனகல்வரை யொத்தனர்வெல்கள்லெக்குலமல்லருமே.

வ-ம் அந்தநிலவறையை முட்டப்பெற்ற ரத்தசமுத்திரம் நிறைந்தபடியால் முட்டிக்சொள்ளுகின்ற பலவிரல்களினாலேநெடிய தேகம்பிளவுபட்ட தினுள்ளேவிழ கிருஷ்ணபகவானசெய்த செய்கையினாலேஅளவற்ற வலுமைகொண்டெதிரிட்டுச்சென்ற வானரங்கள்கரியகடலிலேயிட்டபற்வதங்களையொத்தனற் வெல்லுகிற வீரக்கழலை யணிந்தகூட்டமாகிய எவ்விதமலர்களும் எ-று, ௧௬௯

உப்புவிநிற்பனவெக்கிரிநிற்பனவெககடனிற்பனவென்
றிப்புவனத்துயிர்முற்றுமயக்குறவுட்கினரெதிமையோர்
மைப்புயலொத்தொளிர்பச்சைநிறத்தினவற்கமலக்கழலா
லொடபுறமட்குழியுற்றவரைப்படவெர்ததிமிதித்தலுமே.

வ-ம் இனிஎந்தப்பூமிகள் நிற்கும எந்தமலைகள்நிற்கும் எந்தக்கடல்கள்நிற்குமென்று இந்தப்பூமியிலுள்ள உயிர்முழுவதும் மயக்கத்தையுடையதேவற்கள் அஞ்சியிளைற்தாகள் கரியமேகத்தையொத்து விளங்ய கிருஷ்ணபகவான அனேகமலர்போன்ற திருவடிகளால்ஒப்பில்லாமல்நிலவறையிலிருந்தவரை படிம்படிஒத்திமிதித்தலால்

கொண்டன்முழக்கெனவம்புவியைக்கடல்கொண்டெழுதற்கெதிருஞ
சண்டமுழக்கனவெனபவளைக்கிளை தந்தமுழக்கெனவே
வண்டினமொய்த்தெழுவண்டுளபத்தொடைலண்டுவரைத்திருமா
லண்டமுகட்டுறநின்றுசிரித்தனனங்கணெ நெருப்பெழவே

வ-ம் மேகமுழக்கமென்றுசொலலவும்பூமியைக்கடல்கொண் டெழுதற்குஎதிரும்பிவேகத்தையுடைய முழக்கமென்றுசொல்லவும்கடல்கொண்டுபொருந்திய வாயுவினகூட்டஞ்செய்தமுழக்கமென்று சொல்லவும் வண்டுகள்மொய்த்தெழுகின்ற வளத்தையுடைய துளபமாலையையணிந்துதுவாரகைக்குஅரசராகிய கிருஷ்ணபகவான அண்டமுகடளாவ நின்றுஅழகியகண்ணில் நெருப்பெழச்சிரித்தார்.

ஒன்றுபடக்கடலம்முகட்பளவும்பர்குலத்துருக்கஞ்
சென்றமுறிப்பனவெண்டிசையிற்குஞ்சிந்துரமெற்றுவவெண்
குன்றமுடைப்பனபைம்பொனிறக்கிரிகொண்டுதிரிப்பனவா
வன்றிரணித்தனினின்றுமலைக்கருங்கைகள்மரமலவே.

எ-து, அப்போது வெவ்வேறாயுக்கஞ்செய்தபலன்களிலேசிலகை
கள்சமுத்திரநீரெல்லாம் ஒன்றுபடும்படி மொள்ளுஞ்சிலகைகள் தெய்
வலோகத்திலிருக்கும் பஞ்சதருக்களையும்போயமுறிக்குஞ்சிலகைகள்எ
ட்டுதிக்கிலும்போய் அட்டகஜங்களையுஞ்சிலகைகள் அட்டகுலபர்வதங்
களையுமுடைக்குஞ்சிலகைகள்மகமேருவைசுற்றும்.

துகிர்சழ்வைத்துசல்வளைகண்முழங்கின கொடர்சிலகைத்தலமே
யகிலவெருக்கொளவரிமழுவெற்றின வலைசிலகைத்தலமே
புகலும்வடிககணையுவண்மெடுத்தனபொருசிலகைத்தலமே
திசழ்விசையதொடுசிலைகளகுளிப்பனசிலசிலகைத்தலமே.

உ-ம சிலகைகள்பவளம்போன்றவாயிலே சங்குகளைவைத்து முழக்க
ஞ்செய்தனசிலகைகள்பூலோகமஞ்சுமபடிஎரிகின்றமழுவாயுதங்களை எ
றிந்தசிலகைகள் கொல்லுகின்றகருடாஸ்திரங்களை எடுத்தனசிலகை
கள்ஐபத்துடனேவில்லுகளைக்குனிப்பனசிலகைகள்.

வெங்கணையதிரள்குந்தகரப்படைவெம்புமுலக்கைகள்போர்
பொங்கிரவச்சிரமுந்துகலப்பைகழ்புன்கழவர்கமமுமே
பெங்குமலைத்தெழுசெஞ்சரிகைகதிரடண்டமெனப்பலபோர்
தங்கியசக்கிரபந்தரிக்கனபண்டலகைத்தலமே.

உ-ம வெவ்வியவளைதடிகள் கைவேல்கள் வெப்பச்செய்யுமுலக்கைக
ள்போரைமிகச்செயகின்றவச்சிரயுதங்கள் எறிகிறகலப்பைகள் சூலவ
ர்க்கங்கள்எவ்விடத்தும்போர்செயவெழுகின்ற உடைவாள்கள் பிண்டா
யுதங்கள் பலபோர்தங்கிய சக்கிரபந்திகளாகிய இவைகளைத்தரித்திருந்த
ன அனேகமகைகள்.

மேலெழுங்கதிர்வாளுறைபோம்படிவீசுவான்படையே
தோலிணம்மநுதினைக்கண்ணங்கினஞ்சரிகள்சோர்ந்திடவே
ஞாலமெல்லாம்பொருந்தாமரம்வாங்கினதொருமூன்றெனவாஞ்
சூலமேமோடேங்கினபாசமோடேங்கினசூலசிலபூங்கரமே.

உ-ம சிலகைகள்மேலேயெழுகின்றசூரியகிரணங்களையுடையவாள
யுதங்களைஉறைபோகும்படி வீசுதல்செய்தனசிலகைகள்கேடயங்களை
ந்தியசிலகைகள் நெடியகவணைகள்ளைந்தின சிலகைகள் உதிரமுழுகியபூமி
யுமுழுவதையும் பொருகின்ற பெருக்குணைகளைகொண்டன சிலகைகள்
நாகமுகள்மூன்றெனப்பட்ட சூலங்களைப்பிடித்தன சிலகைகள்பாசங்
களைப்பிடித்தன-எ-று,

சிலசிலகைத்தலயேசுழல்புடமெறிபூள்சட்டனவே
சிலசிலகைத்தலைமுத்துப்புத்திலடைத்தொன்மீட்டனவே

சிலசிலகைத்தலமணிகொளுராக்கிடைபணிதிருத்தினவே
சிலசிலகைத்தலம்விரல்கொடுசுட்டினசெருநர்திகைத்திடவே

வ-ம் சிலசிலகைகள்சொல்லுகின்ற பாகங்களின்மேலவீரக்கழல்களைக்கட்டினசிலசிலகைகள்புயங்களின்மேல்மலர்மாலையிட்டனசிலசிலகைகள் அழகினைக்கொண்டமார்பிலே ஆபரணங்களைத் திருத்தினசிலசிலகைகள் சத்துருக்கள்திகைக்கும்படி விரல்களைக்கொண்டுசுட்டிக்காண்பித்தன எ-று.

மாயிருஞாலமெலாம்வெளிபடவொளிர்மரகதசோதையுறப்
போயிருபாலும்வளைந்துவளைந்தெதிர்பெருமுனைதம்படையே
டாயிரமாயிரமங்கைபுறப்படவண்டருமாதவரும
பாயிரநான்மறைபாடிவியந்துபணிந்துபுகழ்ந்தனரே.

வ-ம் மகத்தாகியபெரியபூமியெல்லாம் வெளியாய்விளங்குகின்றமரகதத்தினபிரகாசம்பொருந்தியஇரண்டுபக்கத்திலும்போய்வளைந்துவளைந்துஎதிரேபொருகின்றமுனையையுடையவெவ்விய ஆயுதத்துடன் இரண்டாயிரங்கைகள் புறப்பட தேவர்களும்முனிவர்களும் ஆயிரமுள்ள நாலுவேதங்களைப்பாடிஅதிசயித்துப்பணிந்துபுகழ்ந்தார்கள் எ-று.

ஆரணனேயரனேபுவனங்களனைத்தையுமன்றருள்வுங்
காரணனேகருணாகரனே கமலாசனிநாதனனே
வாரணமேபொதுவாயொருபேரிடவந்தருளும்புயனே
நாரணனேமுனியேன்முனிமேலெனநாதர்பணிந்தனரே.

வ-ம் பிரமதேவனே உருத்திரமூர்த்தியே புவனங்களெல்லாம் அன்றுதவியமகாவிஷ்ணுவேகிருபைகிடமானவனே இலட்சுமிக்குக்கணவனேகஜேந்திரன் ஆதிமூலமேயென்று பொதுவாயொருபேரிட்டழைக்கநானே அப்பேருக்குடையவனென்றுவந்த மேகவண்ணனே நாரணனேகோபியாதேயென்று தேவர்கள்வணங்கினார்கள் எ-று. உரா அ

மாதவனேமுனியேலெமையாளுடைவானவனேமுனியேன்
மாதவனேமுனியேலிதயத்திலிருப்பவனேமுனியே
லாதவனேமுனியேன்மதிவெங்கனலானவனேமுனியே
னீதவனேமுனியேன்முனியேலெனநின்றுபணிந்தனரே.

வ-ம் மாதவனேகோபியாத எங்களைஅடிமையாகவுடைய தேவனே கோபியாதே யாதவமாபில்வந்தவனே கோபியாதே அடியார்கள்மனதிலிருப்பவனே கோபியாதே சோமசூரியாக்கினியனே கோபியாதே நீதியையுடையவனேகோபியாதேயென்றுநின்றுபணிந்தார்கள எ-று,

கங்கைமகக்குமோராண்மகனப்பிநகைகாதன்மகன்றனையா
அங்கவையின்கணிருந்தராதிபரடையவெழுந்தனவே

செங்கைகுவித்தசிரத்தினராயுணர்வொன்றியசிந்தையரார்
யெங்களபிழைத்தலைபினரு பொருத்தருளென்றுபணிந்தனரே

வ-ம் பீஷ்மாசாரிகாணன்திருதராட்டிரன் அவன்பிள்ளைகளங்கேசபையிலேயிருந்த ராசாக்களெல்லாமெழுந்திருந்து சிரத்தின் மேற்கைகளைகூப்பி கொண்டவர்களாய் அறிவுமிகுந்தமனமுடையவருய்நாங்கள்செய்த்தப்பிதத்தை இன்றுபொருத்தருள்வாயென்றுவணங்கினர்களெனறவாறு.

கண்ணபொருக்தருள்வெண்ணெபருந்தியகள்வபொருத்தருள்கார்
வண்ணபொருக்தருள்வாமபொருத்தருள்வரதபொறுத்தருணீ
திண்ணமனத்துணர்வொன்றிலாதவர்செய்தபெரும்பிழைபென்
றண்ணன்மலர்க்கழல்சென்னியில்வைத்தெதிரென்றுதுதித்தனரே.

வ-ம் கண்ணணேபொருக்கருள் ஆயர்பாடியில்வெண்ணெய்உண்டகள்ளனேபொருததருள் மேகவண்ணனே பொருத்தருள்வரதனேபொருத்தருள்சத்தியமாகமனத்திலே அறிவானதெளிவுமில்லாதசிறியவர்கள்செய்தபெரும்பிழையென்றகிருஷ்ணபகவானுடையதாமரைமலர்போன்றபாதங்களைச்சிரத்திலேவைத்துக்கொண்டு எதிரேநின்றுஅன்றேதுதிசெய்தார்கள்.

தேவரும்வாசவனுந்திறலும்பர்கடேவனுநான்முகனும்
யாவருமன்பினெடாயிரநாமமுமெண்ணியிறைஞ்சுதலான்
மூவருமொனறெனநின்றருணகனுமுனிகவிர்த்தருளான
மூவருவண்டமுருந்திருமேனிபடங்கினன்மீளவுமே

வ-ம் முப்பத்துமுக்கோடிதேவர்களும் இந்திரனும் திறலையுடையதேவதேவனாகிய பிரமதேவனும் எல்லாம்பக்தியுடனே ஆயிரநாமமுந்தியானித்துவணங்கியபடியால்திரிமூர்த்திகளுமொன்றெனறு சொல்லும்படிநின்ற கிருஷ்ணபகவானும் கோபம்நீங்கிகிர்பைசெய்து உலகமெல்லாமாகியதிருமேனி உடனேமடக்கினர், ௨௧௨

தன்னிலுயர்ந்தவர்யாருமிலாமுகில்சதுர்மறையின்படியே
யெங்கிலமுந்திருவடியின்மறைந்திட—விப்படிநின்றிடவும்
பின்னையுமஞ்சியுயர்ந்திலனெஞ்சுபெயர்ந்திடனுதமுமே
செனனியிலுங்கரம்வைத்திலனவண்புகழ்சிறிதுமொழிந்திலனே

வ-ம் தனக்குயர்ந்தவர்கள்ஒருவருமில்லாதகிருஷ்ணபகவான் நான்குவேதத்தின்படி எந்தபூமியுந்திருவடியிலே மறைந்திட இப்படிநிற்கவும்பின்னுமஞ்சி மனதில்வருந்துகிலன தேகமசைகிலன சிரததிலே கரங்களுங் கூப்புகிலன் வளத்தையுடைய அவகீர்த்தியைச் சிறிதுஞ்சொல்லுகிலன துரியோதனன. ௨௧௩

தொல்லவையின் கணிருந்தராதிபதுன்மதியாலெனைநீ
கொல்லநினைந்ததுநன்றெனவென்றிவைகூறினனெம்பெருமா

னொல்லையினின்குல முற்றுமடிந்திட வுற்றுமலைந்தோர்கணத்
தொல்லையில்வெஞ்சமர் றூறுவன்யாவரு மேறுவர்வானுலகே.

(எ-று) பழமையாயுள்ள இராஜசபையிலேயிருந்த துரியோதனராஜனே துற்புத்தியினாலே நீ என்னைக்கொல்ல நினைத்தது நல்லதென்றுசொல்லி ஸ்ரீ கிருஷ்ணபகவான் சீக்கிரத்தில் உன் குலமுழுதும் மடிய யுத்தஞ்செய்து ஒருக்ஷணநேரத்திற்கொல்லுவேன் அப்போது எல்லோரும் மேலுலகத்திலே ஏறுவாரென்றுபின்னுஞ்சொல்லுவார் எ-று. (௨௧௪)

அஞ்சினனின்னையழித்திடநின்னுட னன்றுபெருஞ்சமர்வாய்
வெஞ்சுடராயுதமொன்றுமெடுக்கிலோமென்றுவிளம்பியது
மெஞ்சமலைந்தெதிர்வந்துயிர் கொள்ளுதுமென்றுதனித்தனியே
பஞ்சவர்கூறியவெஞ்சினவாசக முப்பழுதாமெனவே.

(எ-று) உன்னைக்கொல்லுதற்கு அஞ்சினோம் உன்னுடனே அன்றுபெரிய யுத்தத்திலே வெவ்விய கிரணத்தையுடைய ஆயுதமொன்றும் எடுக்கமாட்டோமென்று சொல்லியதும் பாண்டவர்கள் தாம்வந்து சண்டையிட்டு உங்களைக்கொல்லுகிறோமென்று தனித்தனியேசொல்லிய சபதமுள்ளபேச்சும் பழுதாமென்றல்லவோ-எ-று. (௨௧௫)

என்றுரையாடிநெடுங்கடல்வண்ண னெழுந்தருளப்பிறகே
சென்றனரெம்முடிமன்னவரும் மணிசேர்கொடியோனயலா
னின்றுபசாரமுரைத்தவர்தம்மை நிறுத்தியநந்தாமே
வன்றிலரங்கர்பிரானொடுகூறினன் மற்றொருவாசகமே.

(எ-று) இப்படிச்சொல்லி நெடியவண்ணரான ஸ்ரீ கிருஷ்ணபகவான் எழுந்தருளப் பின்பு எந்த அரசர்களும் அவர்பின்னே போனார்கள் சர்பக்கொடிபடைத்த அந்த துரியோதனனை யல்லாமல் நின்று உபசாரஞ்சொன்னபேர்களை நிறுத்தி பின்பு வலிமையுள்ள இரலையுடைய அங்கதேசத்துக்கு அதிபதியாகிய கர்னனுடன் ஒருவார்த்தை சொன்னார் எ-று.

௨௧௬

வண்மையிலுயரங்கர்குலாதிப மதிக்குலம்வாழ்வுறவத்
துண்மையினுயர்மன்னவரைவரு முன்னிளைக்கிளையோர்
பெண்மையினுயர்குந்திவயிற்றிடைப் பெருமையினுதித்த
திண்மையினுயர்நின்னையுமன்பொடு தினகரனல்கினனே.

(எ-று) கொடையினுயர்ந்த கர்னமகாராசனே சந்திரவம்சம் வாழவந்து உண்மையினுயர்ந்த பாண்டவரைந்துபேரும் நினக்கு

மிடத்தில் உனக்கிளையவர்கள் பெண்மையினுலுயர்ந்த குந்திமாதேவி வயிற்றிலே பெருமையினுலும் மன வலியாலும் உயர்ந்த உன்னையும் அன்புடனே சூரியன்பெற்றான் எ-று. ௨௧எ

ஏயுநெடுங்கொடிமுரசுடையோனை எழிற்றருமன்றரவே
வாயுவழங்கினன்வீமனைநல்கினன் விசையனையிந்திரனும்
வாயுநிகழ்த்திடுதேவமருத்துவ ரன்போடளித்தனர்செந்
தேயுவெனுந்திரன்நகுலனையுஞ்சகா தேவனையும்பெற்றார்.

(எ-து) நெடியமுரசக்கொடியுடைய தருமராசாவை அழகிய யமன் பெற்றான் வீமனை வாயுபகவான் பெற்றான் அர்ச்சுனனை தேவேந்திரன் பெற்றான் அக்கினி என்னுந்திறலையுடைய நகுலனையுஞ் சகாதேவனையும் ஆயுள்வேதமறிந்த மருத்துவதேவர்கள் அன்புடனே பெற்றார்கள் எ-று. ௨௧அ

அந்தணன்முன்தருமந்திரமைந்தினி லாறுபேருங்களையும்
குந்திபயந்தனள்யானினியென்பல கூறுவதுங்களிநீ
ரிந்தநிலம்பெறுவீர்தவிர்வீர்பெற வேறினியாருரியார்
வந்தினிதம்பியர்தம்மொடுசேர்கென மாலுமொழிந்தனனே.

(எ-து) துர்வாசமுனிவரருளிய ஐந்து மந்திரத்திலே ஆறுபேரையும் தெய்வத்தன்மையுள்ள குந்திமாதேவி பெற்றனள் யான்பலபேச்சுகள் சொல்லவேண்டியதென்ன இருக்கிறது உங்களுக்குள்ளே நீங்கள் இந்தப்பூமியைப்பெற்றாலும் விட்டுவிட்டாலும் உங்களைவிட பெறுதற்குவேறே எவர் உரிமையுள்ளவர்களாவார் இனிவந்து உன்னுடைய தம்பிமாரோடுசேரென்று சொன்னார் கிருஷ்ணபகவான் எ-று.௨௧௯

வேறு.

கன்றால்விளவின்கனியுகுத்துங்கழையானிரையின்கணமழைத்துங்
குன்றான்மழையின்குலந்தடுத்துங் குலவுஞ்செல்வக்கோபாலா
உன்னுலெனதுபிறப்புணர்ந்தே னென்றன்புருகிதம்பியர்பாற்
சென்றாலென்னைநீயறியச் செகத்தாரென்றுஞ்சிரியாரோ.

(எ-து) பசுவின்கன்றினுல் விளவின்பழத்தை யுதிர்த்தும் மூங்கிற்குழலால் பசுக்கூட்டங்களையழைத்துக் கோவர்த்தனகிரியால் மேகஞ்சொரிந்த மழையைத்தடுத்தும் பிரகாசிக்கின்ற செல்வத்தையுடைய கோபாலகிருஷ்ணரே நீர் சொல்லுகையினுலே இன்று என்னுடைய பிறப்பை யறிந்தேனென்று அன்புருகி என் தம்பிமாரிடத்திற்போனுல் என்னைநீயறிய உலகத்தார் எப்போதுஞ் சிரிக்கமாட்டார்களோ எ-று. ௨௨௰

ஆரென்றறியத்தகாதவெனை யரசுமாக்கிமுடிசூட்டி
யிருந்திறமுந்தனது பெருந் திருவுமெனக்கே தெரிந்தளித்தான்

பாரின்றழியநூற்றுவர்க்கும் பழிதீர்வெற்றிப்பாண்டவர்க்கும்
போரென்றறிந்துஞ்செய்தநன்றி பொன்றாதரிற்போவேனே.

(எ-து) இன்னானென்றறியத்தகாதவென்னை அரசனுக்கிக் கிரீட முந் தரித்துச் சிறப்பையுந் திறத்தையுந் தனது பெரியசெல்வத்தையும் எனக்கே தெரிந்துகொடுத்தான் அதுவுமல்லாமல் இன்று பூமியெல்லாமழிய அந்தத் துரியோதனன்முதலிய நூற்றுவர்க்கும் குற்றமற்ற ஜெயத்தையுடைய பஞ்சபாண்டவர்க்கும் யுத்தம் நேரிட்டிருக்கிறதென்று அறிந்தும் ஒருவன்செய்த நன்றியைக் காப்பாற்றாதபேர்களைப்போலநான்போவேனாவென்றான் கர்னமகாராஜன் எ-று. ௨௨௧

இரவிக்குரியதிருமதலை இவ்வாறுரைக்கவிசைவண்டு
விரவிப்பயிலுந்துழாய்முடியோன் வேறோர்மொழியும்விள்ளாம
லுரலிற்றடந்தேரூர்வானை ஏகென்றருளியொருசார்பாய்ப்
புரவித்தாகநின்றானை வருகென்றழைத்துப்புகல்கின்றான்.

(எ-து) சூரியன் புதல்வனாகிய கர்னன் இப்படிச்சொல்ல வண்டுகளிசைபாடுகின்ற துளபமாலையணிந்த கிரீடத்தையுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் மற்றொருசொல்லுஞ் சொல்லாமல் அவனைப் போவென்றனுப்பி ஒருபக்கத்திலேநின்ற அசுவத்தாமனை வாவென்றழைத்துச் சொல்வார் எ-று. ௨௨௩

போயேகானம்பலதிரிந்தும் புகன்றவிரதம்பொய்யாம
லாயேவந்தபாண்டவர்களைந்தூர்வேண்டமறுத்ததற்குச்
சேயேபலையசிலைமுனிவன் சேயேநாளைச்செருக்களத்தி
நீயேயறியென்றெடுத்துரைத்தானெடியோன்றுளபமுடியானே.

(எ-து) காடுகளெல்லாம் போய்த்திரிந்தும் சொன்னவிரதம் பொய்யாகாமல் செலுத்திவந்த பஞ்சபாண்டவர்கள் ஐந்தூராவது கேட்க இல்லையென்று துரியோதனன்மறுத்ததற்கு முருகக்கடவுளையொத்த துரோணாச்சாரி குமாரனான அஸ்வத்தாமாவே நாளையுத்தகளத்தில் நீயேசாட்சியென்று எடுத்துச்சொன்னார் நெடியவனும் துளபமணிந்த முடியையுடையவனுமாகிய கிருஷ்ணபகவான் எ-று. ௨௨௪

ஆனல்வுனதாண்மைக்குநிக ரானோருலகத்தினிலுண்டோ
ஞானநிதியனேபோர்க்களத்தினகைக்கொடியோன்பணிந்துன்னைச்
சேனாபதியாகென்றாலுஞ் செலுத்தேனென்றுநீமறுத்தா
யானாலுய்வரைவருமற் றவர்பாலுனக்குப்பண்புண்டோ.

(எ-து) நீங்காத உன்னுடைய வலுமைக்குச் சமானமாய்ப் பூமியிலே யொருவருண்டோ ஞானத்துக்கதிபனே யுத்தகளத்தில் சர்ப்

பக்கொடிபடைத்த துரியோதனன் உன்னை வணங்கிச் சேனாதிபதியாயிருவென்று சொன்னாலும் நான் சொன்னாலும் நான் செலுத்தமாட்டேனென்று மறுத்தாயானால் பஞ்சபாண்டவர்கள் பிழைப்பார்கள் அவர்களிடத்தில் உனக்கும் விசுவாசமுண்டோவென்றார் கிருஷ்ணபகவான் எ-று. உஉரு

ஆயோதனத்திலடலரியே யனையான்றன்னையிவ்வாறு
மாயோனுரைத்துதன்விரலின்மணியாழியைமண்ணிடைவீழ்த்த
சேயோனதனையெடுத்தவன்றன் செங்கைகொடுக்கவாங்காமல்
தாயோயூர்கொள்பரிதிதனைச் சூழ்ந்தகல்வான்மீதென்றே.

(எ-து) யுத்தத்திலே பெருமைபொருந்திய ஆண்சிங்கத்தையொத்த அஸ்வத்தாமாவை இப்படி கிருஷ்ணபகவான்சொல்லி தமது விரலிலிருந்த ரத்தினம்பதித்த மோதிரத்தை பூமியிலே நழுவவிட்டார் அஸ்வத்தாமா அதனையெடுத்து அவர் கையிலேகொடுக்க வாங்காமல் பரிசுத்தமானவனே ஆகாயத்திலே சூரியனைப்பரிவேடம் சூழ்ந்ததென்றார் எ-று.

உஉசு

வரித்தாமரைகட்டிருநெடுமால்வான் வாய்நோக்கவரிவிற்கைப்
பரித்தாமாவுமாழியுடன் பரிதிவடிந்தனைப்பார்த்தான்
கிரித்தாழ்விசைக்கருங்கள்வன் கிளர்நான்முனிவன்மைந்தனையு
பிரித்தானவனுஞ்சூதற்றா னென்றாரிந்தப்பேரவையோர்.

(எ-து) செந்தாமரைமலர்போன்ற கண்களையுடைய கிருஷ்ணபகவான் ஆகாயத்திலே பார்க்க நெடியவில்லைக் கையிலேயுடைய அஸ்வத்தாமாவும் மோதிரத்துடனே சூரியவடிவைப்பார்த்தான் கோவர்த்தனகிரியைக் குடையாகப்பிடித்த கள்வனாகிய கிருஷ்ணபகவான் துரோணாச்சாரி குமாரனாகிய அஸ்வத்தாமாவையும் பிரித்தான் அவனும் ஞாயஞ்செய்து கொடுத்தானென்றார்கள் பெரிய சபையிலிருந்தவர்கள் எ-று.

உஉஎ

தனிவந்தகலுந் தூதனைப்போய்த் தானேபணுகித்தடஞ்சாப,
முனிவன்புதல்வன்மோதிரந்தொட் டருஞ்சூரியன்முன்மொழிகின்றா,
னினிவந்துறவாய்நின்றாலு மெந்நாள்தெளிவதிவனையெனத், துனிவந்
ராசர்முகநோக்கிச் சொன்னானிடியேறன்னானே.

(எ-து) தனியேவந்துபொருந் தூதனிடத்தே தானே பலவந்தமாகப்போய் துரோணாச்சாரி குமாரனாகிய அஸ்வத்தாமா மோதிரத்தைத்தொட்டு அரியசபதம் எதிரேசொல்லுகின்றான் ஆகையால் இனி வந்து நம்முடனே இணைகளாய்நின்றாலும் எப்படி இவனை யோக்கியனென்றறிவதென்று கோபித்து ராசாக்களுடைய முகத்தைப்பார்த்துச்சொன்னான் இடியேற்றையொத்த துரியோதனன் எ-று. உஉஅ

துளியார்மதுவின் வலம்புரிந்தார்த் துரியோதனன்றான்சொல்லிய
து, மொளியாரவையில்வாள்வேந்த ரொருவர்க் கொருவ ருரைத்தன
வுங், களியானையினான் செவிப்படலுங் கலங்கிச்சித்த மிவரென்னைத்
தெளியாவண்ணம் பேதித்தான் திருமாலென்றே சிந்தித்தான்.

(எ-து) துளிகள் நிறைந்ததேனையுடைய நந்தியாவட்டைமாலையை
அணிந்த துரியோதனராஜன் சொல்லியதும்பிரகாசம்நிறைந்தசபையி
லேவாளாயுதத்தையுடைய அரசர்கள்ஒருவருக்கொருவர் பேசியவை
களும்களிப்பினைகொண்ட யானைக்குச்சமானமாகிய அசுவத்தாமாகா
திலேவிழுந்தவளவில் மனங்கலங்கி இந்தச் சபையிலுள்ளவர்கள் என்
னைதமக்கு அனுகூலனென்றுதெரியாவிதம் பேதப்படுத்தினார் ஸ்ரீகிரு
ஷ்ணபகவானென்று நினைத்தான்-எ-று. (௨௨௯)

தண்ணந்துளபமுடியோனுந் தனித்தங்கிருந்துதன்மனத்தி
லெண்ணம்பலித்ததெனமகிழ்ந்தே யிறையோன்றனக்கிவைநல்கி
விண்ணின்றமரர்மிகத்துதிக்க விதுரன்மனையில்மேவியபின்
திண்ணங்கடவுட்குலவரசன் வருமாறறிந்துசிந்தித்தான்.

(எ-று.) குளிர்ந்ததுளபமாலையணிந்த முடியையுடைய ஸ்ரீகிருஷ்ண
பகவானும்தனிப்பட்டு அங்கேயிருந்துதன்மனதிலே நினைத்தஎண்ண
ம் பலித்ததென்று சந்தோஷித்து அஸ்வத்தாமாவுக்கு செலவுகொடுத்
துவிட்டு ஆகாசத்திலிருந்த தேவர்கள் மிகவுந்துதிசெய்ய விதுரன் அ
ரண்மனைக்குப் போனபின்பு தேவர்கட்கரசனாகிய இந்திரன்வரும்படி
தெரிந்துநினைத்தார்-எ-று. (௨௩௰)

அந்தக்கணத்தில்வந்திறைஞ்சு மாகண்டலனைமுகநோக்கிக்
கந்தத்துளபமுடியோனுங்கண்ணுங்களித்துகளிகூறத்
தந்தத்தொழுவினரிசுபதந் தவிசினிடையேயுடனிருக்கி
முந்தக்கருத்தினிலறதனை முடிப்பானுபாயமொழிகின்றான்.

(எ-து) அந்த க்ஷணத்திலே வந்துவணங்கிய இந்திரன்முகத்தை
ப்பார்த்துவாசனைபொருந்திய துளபமாலை அணிந்த முடியையுடைய
ஸ்ரீகிருஷ்ணபகவானும் கண்ணுங் கருத்துங் களிப்பை அடைந்து ஆ
னைத்தந்தங்களாற்செய்த சிங்காதனத்திலே உட்காரவைத்துக்கொண்
டு தன்கருத்திலேயிருந்ததைமுடிக்கும்பொருட்டு உபாயஞ்சொல்லு
கின்றார்-எ-று. (௨௩௧)

கிரியின்சிறகையரிபடையாய்க் கேண்மோனமர்க்களமீதில்
வரிவேல்சிலைக்கைவிஜையனுக்கு மாறாமுனிந்துவருகின்ற

எரியுங்கனவாய்விடவரவோன் றிவனுக்குற்றபகையான
வரியின்புதல்வன்றனக்கரவு அம்பாகியதாரறியாதார்.

(எ-து) மலைகளின்சிறகைப்றுத்த வச்சிராயுதத்தையுடைய இந்திர னே கேளும் ஆண்மையாக யுத்தகளத்தில் நீண்ட வெவ்விய வில்லையு டையஅர்ச்சுனனுக்கு மாறுகக்கோபித்துவருகின்றவிஷநெருப்பைவி சுகின்ற வாயையுடைய விஷசேனனென்கிற சர்ப்பமென்று இவனுக் குப்பகையாகியசூரியகுமாரனனகர்னனுக்கு ஒரு அம்பாகியிருப்பதை அறியாதவர்கள்யார்-எ-று. (உ௯௨)

கர்னன்விஜையன்றனைகொல்லிற்கடற்பார்முழுதுங்கண்ணில்லா
மன்னன்புதல்வன்றனக்கேயா மொழிந்தோர்யாருமடிந்திடுவார்
முன்னஞ்சூகின்மொழிந்தபகை முடியாதிருக்கிலவர்க்கல்ல
நின்னெஞ்சறியயானறிய நினக்கவேசையும்நிலையாமே.

(எ-து.) கர்னன் அர்ச்சுனனைக்கொன்றால் சமுத்திரஞ்சூழ்ந்த பூமி முழுதும் திருதராட்டிரன் புத்திரனாகிய துரியோதனனுக்கேயாகும்ம ற்றபேர் யாவரும் இறந்து விடுவார்கள் சூதினாலே சொன்னபகையை முடியாதிருந்தால் அவர்களுக்கு குற்றமில்லை உன்மனமறிய நானறிய உனக்கேகுறை நிலையாகுமென்றார்கிருஷ்ணபகவான்-எ-று. (உ௯௩)

கவசங்கனக குண்டலமென் றிரண்டுந்தரிப்பா னைமாகில்
திவசம்பொரினுங் கன்னனுயிர் செகுப்பார்மண்ணிற் சிலருண்டோ
வவசங்கிளைஞ றறத்துணைவ ரகற்றக்களத்தி லடலனுமத்
துவசம்படைத்தோன்படுதுயரந் துணைவாயின்றேசொன்னேனே.

(எ-து.) கவசம் சொர்னகுண்டலமென்றுசொல்லும் இரண்டுந்தரி ப்பானேயானால் கற்பமுடிவுநாள்வரைக்கும் யுத்தஞ் செய்தாலும் கர் னனுயிரைப் போக்குவார் சிலபேருண்டோ பந்துக்களெல்லாம் அவ சரப்பட்டவுடன்பிறந்தவர்கள் யுத்தகளத்தில்அனுமக்கொடிபடைத்த அர்ச்சுனன்படுந்துயரத்தைத்துணைவனே இன்றேசொன்னேன்-எ-று.

வல்லார்வல்லகலைஞருக்கும் மறைநூலவர்க்குங் கடவுளர்க்கு
மில்லாதவர்க்குமுள்ளவர்க்கு மிறந்தோர்தமக்குந்துறந்தவர்க்கு
சொல்லாதவர்க்குஞ்சொல்பவர்க்குஞ்சூழுஞ்சமயாதியர்களுக்கு
மல்லாருக்குமிரவிமக னரியதானமளிக்கின்றான்.

(எ-து.) மாட்டாதவர்களுக்கும் கலையிலே வல்லவராகியவித்துவா ன்களுக்கும்வேதத்திலேவல்ல பிராமணருக்கும் தேவர்களுக்கும் இ ல்லாதவர்களுக்கும் உள்ளவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் துறந்த

வர்களுக்கும் சொல்லாதவர்களுக்கும்சொல்லுகிறவர்களுக்கும் சமயங்களிலேவிசேஷமானவர்களுக்கும் ஐயமில்லாதவர்களுக்கும் சூரியன் புத்திரனாகிய கர்னமகாராஜன் அரியதானங் கொடுக்கின்றான். (௨௱௫)

மைந்தற்குறுதிநீவேண்டில் வல்லோர்முனிவர்வடிவாகிச்
சந்தப்பனுவலிசைமாலைத் தானாகரனை விரைந்தெய்தி
யந்தக்கவசகுண்டலங்க ளளிப்பாயென்றாலவனொன்று
மிந்தப்புவியின்மறுத்தறியா னுயிரேனுமீந்திடுவானே.

(எ-று.) உன்புத்திரனாகிய அருச்சுனனுக்கு நீ உறுதிசெய்யவேண்டினாயாகில் வல்லமையுள்ள இந்திரனே பிராமணருடைய வடிவங்கொண்டு சந்தத்தையுடையகவிமாலையைக்கொண்டதானத்துக்கிடமாகிய கர்னனிடத்திற்குச் சீக்கிரத்திற்போய் அந்தக்கவசகுண்டலங்களைத்தருவாயென்றுகேட்டால் அவன் ஒன்றாவதுஇந்தப்பூமியிலேயில்லையென்றுசொல்லறியான் உயிர்கேட்டாலுங்கொடுப்பான்-எ-று. (௨௱௬)

இரண்டுமவன்பானீகவரி லிருந்தேரூர்ந்திப்படியரசர்
திரண்டுவரினும்வஞ்சிலைக்கத் திண்டோள்விசயனெதிர்நில்லார்
முரண்டுபொருவிற்றனுந்தன் முன்னேமுடிசிதறிப்
புரண்டுஅபயமெனவணங்கிப் புத்தேளரசன்போகின்றான்.

(எ-று.) அந்த கவசகுண்டலங்களிரண்டையும் நீவாங்கிகொண்டாயானால் பெரியதேரிலேறிக்கொண்டு இந்தபூமியிலுள்ள அரசர்கள்திரண்டுவந்தாலும் வெவ்வியவில்லைக்கையிலேயுடையவிஜயபலமுள்ள அர்ச்சுனன் முன்னே நிற்கமாட்டார்கள் மாறுபட்டுப்பொருகின்ற வில்லையுடையகர்னனும் அவன்முன்னே வந்துதலையறுப்புண்டு மண்ணிற்புரண்டு மடிவானென்று கிருஷ்ணபகவான்சொல்ல அதுகேட்டுவணங்கிப்போகின்றான் தேவர்களுக்கரசனாகிய இந்திரன்-எ-று. (௨௱௭)

வேறு.

கண்டுதானெனக்குனிந்துடல்ல மாத்தாளிணைதளர்ந்து தள்ளாடக்,
கண்டியாவருங்கைதரக்குடை யொன்றுகைதனிற்கங்கை நீர்நுறைய,
மொண்டுமேலுறச் சொரிந்தாமே நரைதிரையுடன் மூப்புறுவடிவங்,
கொண்டதாமென வொருமுனியாகி யக்கொற்றவன்வாயில்சென் றடைந்தான்.

எ-று சிவிகையின் தண்டுபோல தேகம்வளைந்துசுழற்சி யடையக் கைகள் தளர்ந்துதள்ளாட எவர்களும்பார்த்து கைகொடுக்க கையிலே ஒருகுடையும் கங்கைநீரிலிருக்கும் நுரையைமொண்டுமேலே

சொரிந்ததாகுமென்று சொல்ல நரைதிரைகளுடனே மூப்புத்தன்மை
யே ஒருவடிவங் கொண்டதாமென்று சொல்ல ஒரு பிராமணவடிவா
கிக்கர்னன் அரண்மனைவாசலில்போனான்தேவேந்திரன்-எ-று.(உ௩அ)

அரித்ததானமும்பரிசிலுமிரவலர்க் கருளுடன்முற்பகளவும்
கொடுத்துநாயகன்புகுந்தனனாளைநீகுறுவேன்றவன்கோயிற்
றடுத்தவாயிலோர்மீளவுமுணர்த்தலிற் றலைவனுந்தருகெனவிரைவில்
விடுத்தநான்மறைமுநியைமுன்காண வேந்தனுந்தொழுதடிவீழ்ந்து,

எ-று. அடுத்திருக்கின்றதானமும்யாசகமும்இரப்போர்க்குகிருபை
யுடனே பதினைந்து நாழிகையளவுங் கொடுத்து கர்னமகாராசன்அர
ண்மனைக்குப்போய்விட்டான் நாளையதினம் நீர் வாருமென்று அவன்
அரண்மனையில்தடுத்த வாசற்காரர் மறுபடியுஞ்சொல்லுதலால்கர்னம
காராசனும் அவரை அழையுமென்றுசொல்லச்சீக்கிரத்திலே அவரும்
போக அவரைக்கண்டமாத்திரத்தில் கர்னன் வணங்கினான். எ-று.

என்னமாதவம் புரிந்தனன்பரிந்து நீ ரீண்டெழுந்தருளுதற்கென்று
பொன்னினசனத் திருத்திமெய்யருடன் பூசையுமுறைமுறைபுரிய
அன்னவேதியன்றளர்ந்தவென்னடையினாலானதேயிற்பகலென்று[ன்
சொன்னவேளையில்நகைத்தனக் களிப்பநீசொன்னலாவையுமென்று

எ-று. என்னதவஞ் செய்தேன் அன்புவைத்து நீர் இங்கே எழுந்
தருளுதற்கென்று பொன்னினாற்செய்த ஆசனம்போட்டு அதிலிருத்தி
உண்மைப்புத்தியினுடனேகிரமமாக பூசைசெய்யஅந்தப்பிராமணர் த
ளர்ச்சியையுடைய நடையினாலே இங்கேவர இரண்டுசாமத்திற்குமே
ற்பட்டதென்று சொன்னபோது கர்னமகாராசன் நகைத்துநீகேட்ட
பொருளெல்லாம் உனக்குக்கொடுப்பேனென்றான்.எ-று. (உசய)

அருத்தியிதல்போற்கரர் தவினுக்குமற்றரிது நீயளித்தியோ வெ
ன்று, விருத்தவேதியன் மொழிந்திடநகைதது நீமெய்யுயிர் விழைந்தி
ரதாலும், கருத்தினேனுனக்கருத்தலே னெனிலெதிர் கறுத்தவர்கண்
ணிணைசிவப்ப, உரித்தபோரினிற்புறந்தரு நிருபர்போயுறுபத முறுவ
னென்றுரைத்தான்.

எ-று. ஆசைப்பட்டவைகளைக் கொடுப்பதற்குப்பொன்மயமாகிய
தெய்வலோகத்திலிருக்கும் பஞ்சதருவுக்கும் அருமையாகும்நீ கொ
டுப்பதையாவென்று அந்த விருத்தப்பிராமணன் சொல்லச்சிரித்து
நீஉடலையும் உயிரையும் விரும்பியாசித்தாலும்உள்ளன்புடன் உனக்கு
க்கொடாமற்போனேனேயானால் பகைவர் கண்கள் சிவக்க எதிர்த்து
பொருகின்ற யுத்தகளத்தில் புறமுதுகுகாட்டுகின்ற அரசாளடையும்
பதத்தை யானடைவேனென்றான் கர்னமகாராஜன்-எ-று. (உசக)

வந்தவந்தணன் கவசகுண்டலங்களை வாங்கிவேழங்கெனக்கென்னக், கந்தனன்பெறுகெனவ்வனவழங்க விண்டலத்திலோர் தனியசரீரி, யிந்திரன்றனைவிரகினுன் மாயவனேவினன் வழங்கனியெனலுஞ், சிந்தையின்கண்ணோர் கலக்கமற்றளித்தனன் செஞ்சுடர்த்தினகர சிறுவன்.

(எ-து.) வந்தபிராமணன் நீதரிக்கின்றகவசகுண்டலங்களைவாங்கிக் கொடுவென்று கேட்க இதோ கொடுத்தேன் கொள்வாயென்று கொடுக்க ஆகாயத்திலே அசரீரிவாக்கு ஸ்ரீகிருஷ்ணபகவான்வொரு உபாயத்தினலே இந்திரனையனுப்பிவைத்தார் நீ கொடுக்க வேண்டாமென்றுசொல்லவும் மனத்திலே ஒருகலக்கமில்லாமற் கொடுத்தான்சூரிய புதல்வனுகிய கர்னமகாராசன்-எ-று. (உ௬உ)

அண்டர்யாவருமலர்மழைபொழிந்தனரன்தரதுந்துமியார்ப்பக், கொண்டல்வாகனன் கொண்டமெய்யொழிந்துதன் கோவமெய்யுடனெதிர்நின்ருன், கண்டுமாமன முருகியே களிக்கிடுங் கன்னனுக்கன்னடுங் கடவுள் மண்டுபோரினிலவயந்தருமிதுவெனமற்றெரு கொற்றவேலெடுத்தே.

(எ-து.) அப்போது தேவர்கள் யாவரும் புஷ்பமாரி பொழிந்தார் தெய்வதுந்துமி சத்திக்கமேகவாகனன் இந்திரன் தான் கொண்ட விருத்தப்பிரமாண வேடம் நீங்கித்தனது நிசரூபத்துடனே எதிர்நின்ருன் அதுகண்டு மனமுருகிச் சந்தோஷித்துகர்னமகாராசனுக்கு அந்தயிந்திரன் யுத்தத்தில் இதுசெயத்தைக்கொடுக்குமென்று வெற்றியுள்ளவேலாயுதத்தை எடுத்து-எ-று. (உ௬௩)

வெலற்கருந்திறல் விசயன்மே லொழுந்திநீ வெஞ்சினமடங்கல்போனெஞ்சிற், கலக்கமொன்றறப் பொழுகிறல்புனைந்திடு கடோற்கசக்காளைதன்னுயிரோ, யிலக்குவெந்தெதிற் மலைந்தபோதிதற் கெனவேவென் மனையுமியம்பிச் சொலற்கரும்புகழ் சுரர்பதிகொடுப்பவத் தோன்றலுந் தொழுதுகைக்கொண்டான்,

எ-து, வெல்லுதற்கரிய திறலையுடையஅர்ச்சுனன்மேலே விடுவதை ...ழித்துநீவெவ்வியகோபத்தையுடைய சிங்கத்தைப்போல்நெஞ்சிருகலக்கமில்லாமல் போர்செய்கின்ற கடோற்கசனுடைய உயிரைற்கு லட்சியமாகும் அவன்வந்துஉன்னை யெதிர்க்கும்போது இதை ...வாயென்று வேதமந்திரமுஞ்சொல்லிச் சொல்லுதற்கரிய கீர்த்தியுடைய இந்திரன்கொடுக்க அந்தக்கர்னனும் வணங்கிக்கையிலே ...ங்கிக்கொண்டான்-எ-து. (உ௬௪)

நிரந்தரம்நிலைபெறுங்கர்னனைநெஞ்சுறமகிழ்ந்தவணிறுத்திப், புரந்தரன்பசுந்தண்டுழாயணிந்திடும்புயலவன்றிருந்துழிப்போந்தே யிரந்துதென்றுதான்மொழிந்ததுமல்வளலீந்ததும்மாங்கவற்கிசைந்தான, வரந்தருந்திருமாலதை வினவியவ்வாசவன் றனக்குரைவழங்கும்.

எ-து, எப்போதும்நிலைபெற்றபுகழுடையகர்னராசன்செய்கையைக்கண்டு மனமகிழ்ந்து அவனை அங்கேநிறுத்திவிட்டு இந்திரனானவன் பசியகுளிர்ந்த துளபமாலையை யணிந்தமேகவண்ணரான ஸ்ரீகிருஷ்ண பகவானிருந்த இடத்திற்குப்போய்த் தான்போய்க் கேட்டதும் கர்னன் கொடுத்ததும் அவருக்குச்சொன்னான் அப்போதுவரத்தைத் தருகின்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் அதைக்கேட்டு அந்த இந்திரனுக்குச் சொல்லுவார்-எ-று. (௨௪௫)

உண்மையாகவெஞ்சமர்முகத் தெரிபகையோன்றும் வந்துடலுறவொட்டா, தின்மையாலுயர் கவசகுண்டலங்களைச் சென்றிருந்தவற்கிவன்கொடுத்தா, னெண்மையாயினுங்கிளைஞரே யேற்பினுமியல்பிலாப் புன்சொலவறியார், வண்மையாளர்தம்மாருயிர் கேட்பினு மறுக்கிலாரென்றே.

எ-து, சத்தியமாகவெவ்விய யுத்தமுகத்திலே வீசுகின்ற ஆயுதங்களொன்றுந் தேகத்திலேபடவொட்டாத உறுதியாலுயர்ந்த கசகுண்டலங்களை இறந்த இந்திரனுக்கு அந்தகர்னன் கொடுத்தான் ஆகையால் எளிதாயிருந்தாலும் பந்துக்களேயேற்றாலும் இயற்கைகுணமில்லாத அற்பசெல்வத்தையுடையவர் கொடுக்கமாட்டார்கள் தியாகியானவர்கள் தம்முடைய உயிரைச்சத்துருக்கள்கேட்டாலும் இல்லையென்று மறுக்கமாட்டார்களென்று சொல்லினார்—எ-று. (௨௪௬)

வாசவன்றனை விடைகொடுத்தநன்பின் வந்தகாரியந்தனை முடிப்பான், கேசவன்றன்தாதையோடுதித்திடுங் கேண்மைகூர் தெரிவையைக் கிட்டித், கேசவன்றருங் குரிசில்பால்விரைவினிற் செல்கெனப் பயந்த சேயிழையும், பாசமுந்துர மாயவனேவலார் பாதபங்கயஞ் சிவப்பித்தாள்.

எ-து தேவேந்திரனுக்குச்செலவுகொடுத்து அனுப்பிவிட்டுத்தவந்தகாரியத்தை நிறைவேற்றும்பொருட்டு ஸ்ரீகிருஷ்ணபகவான் தகப்பனோடுபிறந்த வருவுமிருந்த குந்திதேவியிடத்திற்குப்போய்ச ரியன்புதல்வனாகிய கர்னனிடத்திற்குச் சீக்கிரத்தில்போவென்றார் அவளும் அன்பானதுதள்ள ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய ஏவுதலினாற் தன்னுடைய பாதஞ்சிவக்கப்போனாள்-எ-று. (௨௪

வந்து குந்திநின்கோயிலிலெய்தினவள் வாயிலோ ருரைத்திடமைந்தன், முந்துமன்புடனெழுந்தெதிர் கொண்டுபோய் முறைமையாலாசனத்திலிருந்து, விந்துவின்கிரணங்கள் கண்டுளமகிழ்ந்திரங்கி லென்கரைகடந்தேவிச, சிந்துவெண்டியனைச் சிந்துவொத்துருகிடுந் தெரிவையோடுரைபலசெப்பும்.

எ-து, குந்திமாதேவி உன்னரண்மனையில்வந்தாளென்றுகாவற்காரர் சொல்ல புத்திரனாகியகர்னன்முந்திய அன்புடனேவணங்கிஎதிர்கொண்டுபோய்க் கிரமப்படி ஆசனங்கொடுத்து அதிலேயிருக்கச்செல்ல அப்போது சந்திரகிரணங்களைக்கண்டு மனமகிழ்ந்து இரக்கமுற்றுவண்மைபொருந்திய கரையைக்கடந்து அலையைவீசுகின்ற சமுத்திரத்தைபொத்துமனமுருகும் அந்தத்தாயுடனே பலபேச்சுகள்பேசவான் அந்தக்கர்னமகாராஜன்-எ-று.

அன்னவந்ததென் னருந்தவப்பயனென வன்பினாலின்புறவணங்கி, யென்னைவந்தவாரியம்பெனமற்றவனீன்றதாயானுனையென்று, முன்னைவந்தொரு யந்திரத்தவமுனிமொழிந்ததுங் கதிரவன்முகத்தாற், பின்னிவந்ததும் பேழையில்விடுத்ததும் பிழையிலாதுரைத்திடக் கேட்டே.

எ-து. தாயே நீவந்தது யான் செய்ததவத்தின் பிரயோசன மென்று அன்பினாலே இன்பம் பொருந்த வணங்கி வந்தகாரிய மென்னவென்று கேட்க அவள் நான் உனக்குப்பெற்றதாயென்று முன்னே தூர்வாசமுனிவந்து ஒருமந்திரஞ்சொன்னதும் சூரியனாலே நீபிறந்ததும் உன்னைப்பெட்டியில்விடுத்ததும் பிழையில்லாமற்சொல்லக்கேட்டு- எ-று.

மாயனார்விதிதுவென்மனத்தினின்மதித்துவந்களித்திடுமெவ்வள
ளீயநாளெனைப்பயந்தவளென்னினின்மொழிநெஞ்சற்றதேறேன்
பேயனார்சிலபொழி வின்மையாற்பெற்றதாயெனக்கெனவந்து
தூயநாரிகத்திலாவர்துன்பமுற்றென்புருவனார்.

எ-து. இதுவும் கிருஷ்ணபகவானுடையஉபாயமென் றுமனதினினைத்து வேண்டியவைகளைக்கொடுக்கப்பட்ட தியாகியாகிய கர்னமகாராசன் நீ அந்தநாளிலே என்னைப்பெற்றவளென்று சொன்னாலும் உன் பேச்சை என்மனம் பொருந்தத் தெளியமாட்டேன் பேயையொத்த பேர்நல்ல அறிவில்லாமையால் என்னைப்பெற்றதாய்மாரென்று வந்து பரிசுத்தமாகிய நாகரீகமாயுள்ள ஒருவஸ்திரத்தால் மதுபர்களெல் துன்பப்பட்டு எலும்புருவானார்கள்-எ-று.

(உடுப

ஆண்டமாமகனுமிருகணீர் துடைத்தவ்வன்னையைப்பன்முறைதே
ற்றி மூண்டவல்வினையின் பயனலாலியாற்குமுயற்சியா வருவதொன்
றுண்டோ, வேண்டும் யாவுமே தருகுவேனீரும் வேண்டுவேண்டிக்
கேளென்னப், பாண்டுவின்றிருவாரரன்மனைவியு மதற்குப்பணிவினுவி
ன்னன பணித்தாள்.

எ-து. கர்னனாகியபுத்திரனும் இரண்டுகண்களினின்றும் வருகின்ற
நீரைத்துடைத்து அந்தத்தாய்க்குப்பலதரந்தேறுதல்சொல்லிமூண்டி
ருக்கின்றதிவினைப்பயனல்லாமல் யார்க்கும்முயற்சியினாலேவருகிறகா
ரியமொன்றுண்டோநீர்என்னையென்னகேட்கிறீரோ அவையெல்லாந்த
ருவேன் நீர்விரும்பியதைக் கேளுமென்று சொல்லப்பாண்டுமகாராச
னுடைய மனைவியான குந்திமாதேவியும் இதற்குஇனியகுணத்தோடு
இதுவேண்டுமென்று சொன்னாள் எ-று. (௨௬௭)

பார்த்தன்வெஞ்சமரினின்னுடன் மலைந்தாற்கைப்பெரும்பாந்த
ளம்பகழிதொத்தலும்பிழைத்தான், மறித்துநீவிடுத்துக் கோறலென்
றொருவரங்குறித்தான், வாய்த்தமற்றவர்க ளிளைஞரென்றவரை மலை
யலென்றொருவரந்துறித்தான், மூத்தவன்காத லிளைஞர்தம்பொருட்
டான்மொழிந்தவைமொழிந்தான.

எ-து. அர்ச்சுனன்வெவ்வியயுத்தத்தில்உன்னுடனேயுத்தஞ்செய்தா
ல் பகையையுடைய நாகாஸ்திரத்தைக் கோத்துத் தொடுத்தவளவில்
தப்பினால் இரண்டாந்தரமும்விட்டுக்கொல்லாதேயென்று ஒருவரங்கே
ட்டாள் மற்றபாண்டவர்களுந் தம்பிமாரென்று அறிவுடனே போர்செ
ய்யாதேயென்று ஒருவரங்கேட்டாள் மூத்தவனாகியகர்னன்தம்பிமார்
பொருட்டுதாய் சொன்னவைகளைக்கேட்டு இவைசொல்லுவான்,

ஒருகணை யொன்றுதொடுக்கவுமுனைந்து செருச்செய்வோன்செ
ன்னி யோடிருந்தான். மறுகணைதொடுப்பதாண்மையோவலியோமா
னமோமன்னவர்கறமோ, வறுகணையொன்றே பார்த்தன்மேற்றொடுப்
பேனெழுந்து ளொருப்பவரென்றுரைத்தான். தறுகணல்லவர்க்குந்
தறுகணானவர்க்குந்தண்ணளிநிறைந்தசெங்கண்ணனை.

எ-து, கொல்லப்பட்டபாணம் ஒன்றுதொடுக்கவும் எதிரிட்டுயுத்த
ஞ்செய்வோன் சிரசுடனே தப்பியிருந்தால் மறுகணை தொடுப்பதாண்
மையோவல்லமையோ மானமோ அரசர்களுக்குத் தருமமோ வொரு
கணையே அர்ச்சுனன்மேல்விடுவேன் மற்றபேர் பிழைப்பார்களென்று